
மீசை முளைத்த வயதில்



81116
R;1

கலைஞர் மு.கருணாநிதி



மீசை முளைத்த வயதில்

கலைஞர் மு.கருணாநிதி

தமிழ்க்கனி
பதிப்பகம்

ANNA CENTENARY LIBRARY
CHENNAI - 600 085
000004
18 JAN 2010

மீசை முளைத்த வயதில்

கலைஞர் மு. கருணாநிதி

விலை : ரூ.70/-

முதற்பதிப்பு : கலைஞர் பிறந்த நாள் 3.6.2002

இரண்டாம் பதிப்பு : அக்டோபர் 2006

894.81116
KAR

வெளியீடு :

தமிழ்க்கனி பதிப்பகம்

21, முசிறி சுப்பிரமணியம் சாலை

சென்னை – 600 004

ANNA CENTENARY LIBRARY
CHENNAI - 600 085.
Acc. No. 0010049
Call No.
Number and Date of Invoice 39/18.01.10
Indian Price 70.00
Director

விநியோகம் :

திருமகள் நிலையம்

16, வெங்கட்நாராயணா சாலை

தி. நகர், சென்னை – 600 017

அச்சு : ஜெம் ஆப்செட்ஸ், சென்னை-14, ✆ : 28416838

அட்டை அச்சு :

ஸ்ரீ சீனிவாசா ஆப்செட்

ஒளி அச்சு :

விண்டோஸ்

அட்டை மற்றும் உள் ஓவியங்கள் :

எஸ். பவானி சங்கர்

என்னுரை

கலைஞர்

இலட்சியத்தின் எல்லைக் கோட்டைத் தொட வேண்டுமானால் இளமையையோ முதுமையையோ பலி கொடுக்க வேண்டுமல்லவா?

இளமையையே பலி கொடுத்திட முன் வந்தவன் நான் என்பதற்கு அடையாளமாக 1942ஆம் ஆண்டு அறிஞர் அண்ணாவின் திராவிட நாடு வார இதழில் நான் முதன் முதலாக எழுதிய சொல்லோவியம் 'இளமைப்பலி' என்ற தலைப்பில் வெளிவந்தது. அப்போது 18 வயது - மீசையில்லாத முகம்.

"பரணி பல பாடிப் பாங்குடன் வாழ்ந்த
பைந்தமிழ் நாட்டில்
சொரணை சிறிதுமிலா சுயநலத்துச்
சோதரர்கள் சிலர் கூடி
வருணத்தை நிலைநாட்ட வகையின்றிக்
கரணங்கள் போட்டாலும்
மரணத்தின் உச்சியிலே மானங்காக்க
மறத் தமிழா; போராடு!"

–என்று 1944 ஆம் ஆண்டு; அப்போது தான் 'முரசொலி' துண்டு அறிக்கையில் கவிதை தீட்டி, அதனை சிதம்பரத்தில்

நடைபெற்ற வருணாஸ்ரம மாநாட்டில் விநியோகித்திடவும், முதல் இரவுக்காகவும் அங்கே சென்ற என்னை ஊருக்குள் நுழையவிடாமல் 144 தடை விதிக்கப்பட்ட நிகழ்ச்சியும் நடந்தது.

1945இல் தந்தை பெரியாரின் குடியரசு வார இதழில் துணை ஆசிரியனாக இருந்தபோது தான்;

“குடிசைதான் ஒரு புறத்தில்
கூரிய வேல் வாள்
வரிசையாய் அமைத்திருக்கும்
வையத்தைப் பிடிப்பதற்கும்
வெம்பகை முடிப்பதற்கும்
வடித்து வைத்த படைக்கலன் போல்
மின்னும் மிளிரும்
புலியின் குகையினிலே அழகில்லை;
புதுமையல்ல!
கிலியும் மெய்சிலிர்ப்பும்
கீழிறங்கும் தன்மையும்
தலை காட்டா மானத்தின் உறைவிடம்;
மறவன் மாளிகை!”

-எனத் தொடங்கும் “புறநானூற்றுத் தாய்” எனும் நீண்ட கவிதையை எழுதினேன்.

“புண்ணுக்கு மருந்திட்டு
ஆற்ற வழி தேடிடுவாய்!
கண்ணுக்குள் பாவை போல்
உருண்டிடும் உள்ளம் – கைம்
பெண்ணுக்கு இருப்பதையும்
உணர்ந்திடுவாய்!
“என் மனைவி இறந்திட்டாள்
வேறுமணம் வேண்டும்” என்பாய்!
பின் நீ சாவுமுனை அடைந்திட்டால்
உன் மனையாள் காவு கொடுக்க
வேண்டுமோ காதல் தனை?”

-என்பது போன்ற சமுதாயப் புரட்சிக்கான கவிதைகள் பலவற்றைப் படைத்ததும்; மீசையில்லாத அந்தக் காலத்தில்தான்.

1953இல் "கல்லக்குடி" தமிழ்ப் பெயர் சூட்டும் போராட்டத்தில் ஈடுபட்டு, திருச்சி சிறையில் ஆறு மாதக் கடுங்காவலைக் கழித்தபோது எழுதப்பட்டவைகளும் - சிறையிலிருந்து மீசையுடன் வெளிவந்தவுடன் எழுதப்பட்டவைகளும்; ஏற்கனவே தனித்தனி நூல்களாக வெளிவந்துள்ளன; பல பதிப்புகளாக!

அந்த எழுத்தோவியங்களையெல்லாம் தொகுத்து "மீசை முளைத்த வயதில்" என்ற தலைப்பும் தந்து தமிழ்க்கனிப் பதிப்பகத்தின் சார்பில் வெளியிட வேண்டுமென்று எனது அன்பிற்கினிய கவிப்பேரரசு தம்பி வைரமுத்து விழைவு தெரிவித்து; அதற்கு அழகிய நூல் வடிவமும் கொடுத்துள்ளார்.

"மீசை முளைத்த வயதில்" என்ற இந்தக் குழந்தையின் அன்னையாக நானிருப்பினும் இக்குழந்தைக்கு அணிகலன்கள் பூட்டி மகிழ்பவர்; அந்த அணிகலன்களுடன் குழந்தையைத் தூக்கிக் கொஞ்சி உங்கள் கரங்களிலும் கொடுப்பவர் அவர்தான்!

அவருக்கும், பதிப்பகத்தார்க்கும், இதனைப் படிப்போர்க்கும் என் நன்றி!

19.5.2002

முன்னுரை

கவிப்பேரரசு வைரமுத்து

'விளையும் பயிர் முளையிலே' என்பார்கள். முளைத்தபோதே கதிர்களாக விளைந்தவை கலைஞரின் இளமைக் கால எழுத்துக்கள்.

வில்லிலிருந்து விடுபடும் அதிர்விலிருந்தே தெரிந்துவிடும் அம்பு இலக்கை எட்டுமா இல்லையா என்பது. கலைஞரின் பேனாவிலிருந்து இளைய வயதில் புறப்பட்ட எழுத்துக்களின் அதிர்வுகள் அன்றே கட்டியம் கூறியிருக்கக்கூடும். இவர் எட்டாத சிகரங்களை எட்டக் கூடியவர் என்று.

மனித ஆற்றல்களில் இன்றுவரைக்கும் பேராற்றலாகக் கருதப்படுவது படைப்பாற்றல். ஏன் எனில் அது வரையறைக்குட்பட்டதன்று; சூத்திரங்களுக்குள் அடங்குவ தன்று.

காற்று என்பது யாது? உயிர் என்பது எது? இன்பம் என்பதை எதுகொண்டு சொல்வது? இவையெல்லாம் உணரும் கூறுகளே அன்றி உணர்த்தும் கூறுகள் அல்ல. ஒரு படைப்பாளியின் படைப்பாற்றலும் அப்படித்தான்.

கலைஞருடைய படைப்பாற்றலின் ஆழங்களில் அமிழும்போது எங்கிருந்து பீறிட்டது இவருக்கு இந்த ஊற்றுக்கண் என்று வியக்காமலிருக்க முடியவில்லை.

ஒரு நல்ல படைப்பின் அல்லது கவிதையின் அடையாளம் எது?

வெறும் சொற்களென்றால் அகராதி போதும். உணர்ச்சிதான் கவிதையென்றால் ஒப்பாரி போதும்.

அனுபவம்தான் கவிதையென்றால் பழமொழி போதும். அறிவுரையே கவிதை என்றால் மூத்தோர் முதுமொழி போதும்.

கலையழகுதான் கவிதையென்றால் கல்லோவியங்கள் போதும்.

சந்தங்களே கவிதையென்றால் வாயில் கூழாங்கல் போட்டுக் கொண்டே ஒழுங்கிசை பாடிச்செல்லும் ஓடைஒலி போதும்.

இவைகளையெல்லாம் உள்வாங்கிச் செரித்துக் கொண்டு இவை அல்லாத இன்னொன்றாய்ப் பிறப்பெடுப்பது கவிதை.

அந்த உன்னதம் கோடியில் ஒருவருக்கே வாய்க்கும். அது கலைஞருக்கு வாய்த்திருக்கிறது.

எதைப் பாடினாலும் அதை மண்ணுக்கும் மனிதனுக்கும் படைக்கத் துடிக்கும் தவிப்புதான் இந்தப் படைப்புகளின் உயிர்ச்சத்தாக விளங்குகிறது.

வானத்தில் எந்த உயரத்தில் பறந்தாலும், வனத்தின் எந்த ஓரத்தில் மேய்ந்தாலும் தன் கூட்டுக்கே திரும்பிவிடும் தாய்ப்பறவை மாதிரி, கற்பனையின் சிகரங்களில்

சிறகடித்தாலும் கடைசியில் தன் கொள்கைக் கூட்டுக்கே திரும்பி வருகிறது - கலைஞரின் கவிதைப்பறவை.

“கதிர் விழுங்கி
மதி உமிழும் கடலே!
நிலமடந்தைக்கெழிலூட்டும்
நீல உடையே!
ஜகப் பெண்ணாளின்
சந்தன மேனியில்
சலசலவெனப் பறந்தாடும்
சல்லாத்துணி நீ!”

என்று கடல் பற்றிக் கவிதையெழுதும்போது, சின்னதொரு சமுத்திரமே புகுந்து புறப்படுகிறது கலைஞரின் பேனாவுக்குள். வானுக்கும் மண்ணுக்குமாய்க் கும்மிகொட்டிக் கூத்தாடுகின்றன கற்பனைகள். தமிழின் திரைச்சீலையில் இதுவரை காணாத வண்ணங்கள் வாரி இறைக்கப்படுகின்றன. இது ஒரு கவிஞனின் செய்ந்நேர்த்தி.

ஒரு படைப்பாளிக்குள் முறுக்கிநிற்கும் மொழி ஆளுமை என்பது ஒரு வானவில்லைப் போல- வியக்கவைக்கும் வினோதம். அது அப்படியே தொடங்கி அப்படியே முடிந்துபோனால் அது ஒரு சராசரிப் படைப்பு.

ஆனால் கலைஞர் என்பவர் ஒரு படைப்பாளி மட்டும் அல்லர்; போராளி. கொள்கையோடு எழுத்தை - எழுத்தோடு போராட்டத்தை - போராட்டத்தோடு வாழ்க்கையை - தோலுக்குள் நரம்பு - நரம்போடு சதை - சதையோடு ரத்தம் என்று பின்னிப் பிணைத்துக் கொண்டவர்.

எனவேதான், கடலைப் பாடுகிறபோது அதன் கரையில் நின்று லேசாய் வேட்டி உயர்த்திக் கால் நனைத்துவிட்டு

மட்டும் அவரால் வந்துவிட முடியவில்லை.

எந்தக் 'கல்லக்குடி'க்காகச் சிறை சென்றாரோ - அந்தக் கல்லக் குடியைக் கடல்பாடும்போதும் அவரால் மறக்க முடியவில்லை.

"முத்துப் பெருங்குளமே!
தமிழரின் செல்வப்பூங்கா! காவிரிப் பூம்பட்டினத்தை
அலைக்கரம் நீட்டி அழித்துப் போட்டாயாம்!
ஏன் இந்த அநியாயம் புரிந்தாய் என்று கேட்கவில்லை
அதற்காக வழக்குத் தொடரவும் போவதில்லை

ஆனால் கடலே!
எம் செல்வத் திருநகரின் செழிப்பை அழித்தனையே!
அதுபோல் பொல்லாத வடநாட்டுச்
சின்னத்தை அழித்திடத்தான்
துள்ளாதோ கல்லக் குடியில், உன் கரம்!"

இப்படி... ஒரு படைப்பாளியின் குரலில் தொடங்கிப் போராளியின் குரலோடு முடிகிறது கடல் என்ற கவிதை.

●

எல்லாப் படைப்பாளிகளாலும் பரவலாகப் பாடப்பட்டிருக்கிறது பிறைநிலா.

"கலங்காதே பிறையே!
உனக்குள்தான் பூரணச்சந்திரன்
புதைந்திருக்கிறான்"

-என்று மகாகவி இக்பால் பிறை குறித்துப் பாடிய கவிதை படித்துக் கண்கள் மூடிக் கிறங்கியிருக்கிறேன்.

பிறை பற்றிக் கலைஞர் தீட்டிய சொற்சித்திரமும் சொக்க வைக்கிறது. ஒரு பொருளை எங்கிருந்து பார்க்கிறோம் என்பதைப் பொறுத்துத்தான் ஒரு பொருளுக்கு வேறுபொருள் கிடைக்கிறது.

பிறையை அறையிலிருந்து பார்ப்பதற்கும், ஒரு நதியின் கரையிலிருந்து பார்ப்பதற்கும், சிறையிலிருந்து பார்ப்பதற்கும் வேறுபாடு உண்டா இல்லையா?

சிறையிலிருந்து பிறை பார்த்து எழுதுகிறார் கலைஞர். சொந்த வாழ்வும் சுய விமர்சனமும் பிறையோடு பின்னுகின்றன.

“பிறையே!
வானக் கடலலையின் நுரையே!
வெளியுலகிலே எனக்கு இருட்டடிப்பு உண்டு
உனக்குந்தான் உண்டு
மாதம் ஒருமுறை அமாவாசை

என்னைச் சரியாகப் பிரகாசிக்க விடமாட்டார்கள்
என் முழு ஒளியைத் தந்திரத்தால் மறைப்பார்கள்

உனக்கென்ன வாழ்கிறது
உன்னைச் சுற்றி மேகங்கள்;
என்னைச் சுற்றிப் பகைவர்கள்”

-என்னவொரு லாவகம்! என்ன ஒரு லயம்! எத்தனை சோகங்கட்டிய புன்னகை!

நிலவென்னும் எட்டாத பெரும் பொருளை இறங்கிவா என்று உத்தரவிட்டுத் தன் பாயின் மிச்சப் பகுதியில் உட்கார வைத்துப் பள்ளித் தோழனாய் உறவாடும் சிநேகபாவத்தை,

கலைஞரின் படைப்பாற்றல் எளிமையாய் வெகு இயல்பாய்ச் செய்துவிடுகிறது.

கொள்கைக் கோபம் - வாலிப வேகம் - சாதனைத்தாகம் - மொழியின் நேசம் - இனத்தின் பாசம் இவையெல்லாம் கலைஞுக்குள் மிகச்சிறிய வயதிலேயே மலர்ந்து இளமையிலேயே கனிந்து நின்றதால் படைப்புகளில் வயதுக்கு மீறிய ஒரு முதிர்ச்சியைப் பார்க்கிறோம்.

உலகச் சாதனையாளர்களையெல்லாம் உற்றுப் பார்க்கிறேன். தத்தம் துறைகளில் பத்துப் பதினைந்து வயதுக்குள் தடம்பதிக்க முயன்றவர்கள்தாம் சாதனைகளின் உச்சம் தொட்டிருக்கிறார்கள்.

பள்ளிப் பருவத்திலேயே 'தன் பாதை இது பயணம் இது' என்று தீர்மானிக்கத் தெரிந்து அதில் தன் வாழ்க்கையைத் திரட்டித் தீவிரப்பட்டதால்தான் தொட்ட துறைகளிலெல்லாம் சுட்ட தங்கமாய்ச் சுடர்விட்டிருக்கிறார் கலைஞர்.

எண்பது ஆண்டுகளை எட்டித் தொடப்போகிற இந்த நிலையில் அவரது மொத்த வாழ்க்கையை அசைபோட்டுப் பார்ப்பது இளைய தலைமுறைக்கு ஊட்டச் சத்தாக இருக்கும் என்பதில் மறுகருத்து இல்லை.

பொது வாழ்க்கை - இயக்கம் - கலை - இலக்கியம் - ஆட்சி - குடும்பம் என்று தன் எண்பது ஆண்டுகளை பாகம் பாகமாய்ப் பகிர்ந்து கொடுத்தபிறகும் அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னிருந்த அதே தீவிரத்தின் தீ ஒரு கொழுந்துகூடக் குறையாமல் அப்படியே அப்படியே எரிந்து கொண்டிருக்கிறது என்பது அவரிடம் நான் பார்த்துப் பார்த்து பிரமிக்கிற பேரம்சம்.

பொதுவாழ்க்கை என்ற மைதானத்தில் அவரோடு இணையாக ஓடிவந்தவர்களில் பலர் ஓட்டப்பந்தய மைதானத்தை விட்டுத் தாங்களே ஒதுங்கிக் கொண்டார்கள். பலரால் காலத்தோடு ஓடிவரவும் முடியவில்லை. ஆனால் திராவிட இயக்கத்தின் நீண்ட பயணத்தில் இன்னும் துடிப்போடு இயங்கிக் கொண்டிருப்பவர் கலைஞர் அவர்கள்.

மூன்று மாமனிதர்களை தமிழச்சாதி மறந்துவிட முடியாது.

பூமிக்கடியில் புதைந்து கிடக்கும் தங்கத்தை எடுக்க வெடிபோட்ட பெரியார் -

கல்லிலும் மண்ணிலும் கலந்து கிடந்த தங்கத்தை அழகாகப் பிரித்து அடையாளம் காட்டிய அண்ணா -

அந்தத் தங்கத்தை உருக்கி நாசூக்கான கலைப்பாங்கோடு நகை செய்து அணிவித்த கலைஞர் -

இம்மூவரையும் இனிவரும் வரலாற்றாசிரியர்கள் யாரும் மறுத்துவிடவோ மறைத்துவிடவோ முடியாது.

●

தமிழ் மண்ணோடும் தமிழர் வாழ்வியலோடும் கலந்த அழகியல்தான் கலைஞர் எழுத்துக்களின் கலை அம்சம்.

"மணவாளன் வரவுபார்க்கும்
நிலவு மங்கை
வானமஞ்சத்தில் பரப்பிவிட்ட
மலர்க்குழுவோ நீங்கள் எல்லாம்!"

–என்று விண்மீன்கள் பற்றி வியக்கிறபோதும்...

“ஏ வைகறையே!
ஏழையை நீ எழுப்பாத நாள்
அவன் இறந்துபோன நாள் தானே!”

-என்று கோபத்தில் கொப்புளிக்கிற போதும்...

“சுரைக்காய்ப் பிஞ்சின் தலையில் மிளகாய்ப்
பழத்தைச் செருகி இடையில் மல்லிகை
இலைகள் சிறகாய்ப் பின்புறம் தாழை
மடலை வைத்தால் பச்சைக் கிளியோ?”

-என்று பச்சைக் கிளிக்கு வார்த்தை வர்ணம் அடிக்கிற போதும்...

“புகழே! நீ ஒரு நிழல்
உன்னைப் பற்றிக் கவலைப் படாதவர்களைத்
தொடர்ந்து கொண்டேயிருப்பாய்!”

–என்று எதார்த்த நகைச்சுவை இழையோடுகிறபோதும்...

“உயர்ந்து நிற்கும் மார்பகத்தின்
குறுக்கே வாய்த்த எழில் யாழின்
இருமுனையும் இணையாய் இல்லையென
அவன் கண்கள் தீர்ப்புக் கூறித்
திருமகளாம் தேன்மொழியின்
தேகக்கட்டை வியந்துநோக்கும்”

-என்று இளமைக் குறும்புகள் எட்டிப் பார்க்கிறபோதும்...

தமிழ் இயல்போடு கூடிய தொன்மை அழகியல் கலைஞர் எழுத்தோடு கலந்து கரைந்து கிடப்பது காணக் கிடக்கிறது.

‘வைரமணிகள்’, ‘தேனலைகள்’ இந்த இரண்டின் தொகுப்புதான் ‘மீசை முளைத்த வயதில்’.

இந்த இரண்டு நூல்களும் இயற்கையோடு இயைந்த வாழ்வியல் என்ற பொதுப் புள்ளியில் ஒன்றுகூடுகின்றன.

இதில், 'வைரமணிகள்' சிறையில் பிறந்தவை. 'தேனலைகள்' ஓவியமேதை கே. மாதவன் எழுதிய ஓவியங்களைப் பார்த்துக் கலைஞர் வரைந்தவை.

முன்னவை - இயற்கை எழுதிய ஓவியங்களைப் பார்த்துப் பிறந்தவை.

பின்னவை - செயற்கை எழுதிய ஓவியங்களைப் பார்த்துப் பிறந்தவை.

ஒரு கவிஞராக மட்டுமல்லாமல் நாடக ஆசிரியராகவும் இருந்தால்தான் இப்படிக் கோட்டுச் சித்திரங்களைப் பார்த்து பாட்டுச் சித்திரங்களைத் தீட்ட முடியும். அந்தக் கலையில் கலைஞர் மேம்பட்டு நிற்கிறார்.

படைக்கப்பட்டு ஐம்பதாண்டுகளுக்குப் பிறகும் ஒரு படைப்பில் உயிரும் இளமையும் ஒட்டியிருந்தால் பிறகு ஒருபொழுதும் அந்தப் படைப்புக்கு மூப்பு நேராது.

இந்தப் படைப்புகள் இன்னும் திகழுகின்றன - முழு உயிரோடு முற்றிலும் இளமையோடு.

இப்படைப்புகளைத் தொகுத்து வழங்கும் வாய்ப்பை எனக்கு வழங்கிய கலைஞர் அவர்களுக்கும், தமிழ்க்கன் பதிப்பகத்திற்கும் நன்றி சொல்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். என்னை முன்னுரை எழுதப் பணித்த கலைஞர் அவர்களின் பெரும் பண்பினால் நான் பெருமையடைகிறேன்.

பள்ளிப் பருவத்தில் தமிழ் இலக்கியத்தின்பால் என்னைத் தொலைவிலிருந்து ஆற்றுப்படுத்திய என் தமிழாசான் அவர். அவர்தம் படைப்புக்கு நான் முன்னுரையா? எந்த விதியில் பொருந்தும் இது? யோசித்துப் பார்த்தேன். 'நன்னூல் விதி'யில் பொருந்துகிறது என்று தெளிந்தேன்.

சிறப்புப் பாயிரம் செய்தற்குரியார் எவரெவர் எனும்போது-

"தன்னா சிரியன் தன்னொடு கற்றோன்
தன்மா ணாக்கன் தகுமுரை காரனென்
றின்னோர் பாயிர மியம்புதல் கடனே"


-என்று பட்டியலிடுகிறார் நன்னூலில் பவணந்தி முனிவர்.

அந்தவகையில் ஆசான் மாணவனுக்குப் பாயிரம் எழுதலாம்; கலைஞர் எனக்கெழுதியிருக்கிறார்.

மாணவனும் ஆசானுக்குப் பாயிரம் எழுதலாம்; அவருக்கு நான் எழுத வாய்ப்பளித்திருக்கிறார்.

அந்த நன்னூலும் இந்த நன்னூலும் வாழ்க.

வணக்கத்தோடு...





பிறையே! வானக் கடலலையின் நுரையே! பலகணி வழியே சிறைக்குள் எட்டிப்பார்த்து என்ன சிரிக்கிறாய்?

"கைதியே" என்று என்னை நீ கூப்பிடுவது என் காதில் விழுகிறது. நீ மாத்திரம் என்ன; சுதந்திரத் தேரில் ஏறியா சுற்றிவருகிறாய்? கிழித்த கோட்டைத் தாண்டாமல், விழித்த கண்ணை மூடாமல் சிறைச்சாலைக் காவலனைப் போல நடந்து போகத்தானே உனக்கு உரிமையிருக்கிறது.

சிறைக்கோட்டைக்கு வெளியே தவித்து நிற்கும் காதலியிடம் தாவிட முடியாது என்னால், உனக்கென்ன வாழ்கிறதாம்; உன் கோட்டுக்கு அப்பால் கண் சிமிட்டும் நட்சத்திர சீமாட்டிகளை கைநீட்டித் தொடமுடியாது உன்னாலும்!

நானும் கைதி!

நீயும் கைதி!

வெளியுலகிலே எனக்கு இருட்டடிப்பு உண்டு. உனக்குந்தான் உண்டு; மாதம் ஒருமுறை அமாவாசை! என்னைச் சரியாகப் பிரகாசிக்க விடமாட்டார்கள் – என் முழு ஒளியைத் தந்திரத்தால் மறைப்பார்கள். உனக்கென்ன வாழ்கிறது. உன்னைச் சுற்றி மேகங்கள் – என்னைச் சுற்றி பகைவர்கள்.

நானும் கைதி!

நீயும் கைதி!

நானாவது விடுதலை பெறுவேன். என் நாட்டோடு சேர்ந்து; உனக்கு விடுதலையே கிடையாது – உன் வட்டமிடும் வாழ்வில் மாறுதலே கிடையாது.

பிறையே! வானத்துப் படகே! என் வண்ணக் கலாப மயிலைக் கொஞ்சம் சுமந்து வாயேன். என்னை எண்ணியபடி ஏங்கிக் கிடக்கும் என் சுந்தரியை எடுத்து வாயேன். பலகணி வழியே அவளைப் பார்த்துப் பரவசமடைகிறேன்! என் விடுதலை தேவியை அழைத்து வாயேன்.

உன்னிடம் சொல்கிறேனே; உன்னால் எப்படி முடியும் – நீதான் கிழித்த கோட்டைத் தாண்டிச் செல்ல முடியாதே!

நீயும் கைதி!

நானும் கைதி!

●



சீறியடிக்கும் ஆடிக்காற்றே! யாரைப் பயமுறுத்துகிறாய்? சிம்மாசனம் ஏறியிருப்போரின் சினத்தை விடப் பெரியதோ உன் சினம்! அதையே அனுபவித்தவன் நான். உற்றார், உறவினர், மனைவி, மக்கள், தாய், தந்தை, நண்பர் யாரும் என்னுடன் இருக்கக்கூடாது என்று தடை போட்டவர்கள், உன்னை மாத்திரம் உள்ளே அனுப்பி வைத்த ரகசியந்தான் என்ன!

வெளியிலே அவர்களின் வெறிபிடித்த தர்பாரை நான் காணமுடியாது என்பதற்காக உன் உருவிலே அந்தத் தர்பாரை எனக்குக் காட்டுகிறார்களா என்ன!

ஆடிக்காற்றே! மரங்களை ஏன் இப்படி ஆட்டி வைக்கிறாய்? மந்திரவாதி பேயாட்டி வைப்பதுபோல ஏன் ஆட்டி வைக்கிறாய்? மந்திரிமார்கள் மக்களை ஆட்டிவைப்பது போல ஏன் ஆட்டி வைக்கிறாய்? ஏன் வாட்டி வதைக்கிறாய்? என்ன குற்றம் செய்தன அந்த மரங்கள்? செழித்தது தவறா? சீர் தந்தது தவறா? மறுமலர்ச்சி பெற்றது தவறா? மணந்தரும் பூக்களை, கிளைக் கொண்டைகளில் சூட்டி நின்று சௌந்தர்ய மோகினிகளாய்க் காட்சி தந்தது தவறா? எது தவறு? ஏன் தண்டிக்கிறாய்? ஆடிக்காற்றே! அந்தக் காரணத்தைச் சொல்! சொல்லமாட்டாய். உன்னைப் போன்றே அரசாங்கமும் எங்களுக்குக் காரணம் சொல்லவில்லை! ஆடிக்காற்றே! மண்ணை அள்ளிக் கண்ணில் போட்டால் பயந்து விடுவோமா? கண்ணீர்ப் புகைப் பிரயோகத்தைவிடக் கடுமையானதா உன் கைகள் வாரியிறைக்கும் மணல் துளிகள்! மதில் தாண்டி வந்து மந்தி போல் குதிக்கும் ஆடிக்காற்றே! சிறைச்சாலைக்கு வந்த பிறகுமா என்னை நீ சித்திரவதை செய்ய முயலவேண்டும்! என்ன, பதில் பேசாமல் பயங்கர மூச்சுவிடுகிறாய்?

சர்வாதிகாரிகள் உன்னைப் போலத்தான் அகோர இரைச்சல் போட்டார்கள்; அராஜக வெறியாட்டம் நடத்தினார்கள். அவர்களும் நீயும் ஒரே ரகம். அந்த உண்மையை ஊளைத் தொனியில் பாடிக்காட்டும்

ஆடிக்காற்றே! பொறு! பொறு! ஆடி ஓய்ந்ததும்
அடங்கிவிடுவாய். அடங்கிய பிறகு, உன்னைப் போல
ஆட்டம் போட்ட அரசாங்க நண்பனை – அந்தரங்கத்
தோழனை சந்திக்கப் போவாய்! அய்யோ பாவம்,
அப்போது அவன் உனக்கு முன்னே பொந்துக்குள்
போயிருப்பான்!

போ - போ, மண்ணை வாரி
இறைத்துப் போ!

●



வா, இரவே வா! எழிலாடும் கருப்புப் பெண்ணே வா! நீ அழகி – பேரழகி. கருப்புப் பெண்ணை நான் விரும்புகிறேன். நேசிக்கிறேன். ஆனால் எனக்குக் கல்யாணமாகிவிட்டதே! அதனால் என்ன; களங்கமற்ற உள்ளத்தோடு உன் அழகை வர்ணிப்பது குற்றமா என்ன? மரகத மங்கையே! காரிருள் காதலியே என்று உன்னைக் கூப்பிட்டால் கடிந்து கொள்; நியாயம்! தோழியே என்று அழைப்பதில் தோஷமில்லையென்று நானே முடிவுகட்டி விட்டேன்.

இரவுப் பெண்ணே! இப்படி வா! உட்கார்! உட்கார்ந்தாயா, சரி. மகிழ்ச்சி! கருப்புப் பெண்ணை நான் விரும்புகிறேன். காரணம் தெரியுமா? கருப்புப் பெண் சிரித்தால்தான் முத்துப் பற்களுக்கு முதலிடம் கிடைக்கிறது. பெண்ணின் அழகே கண்ணில்தானே? கருப்பு மேனியில் வெள்ளை விழி. ஆகா, என்ன கவர்ச்சி! என்ன கவர்ச்சி!

நீயும் கருப்பாயிருந்து சிரிப்பதால்தான் உன் நட்சத்திரப் பற்களின் வைர ஒளியை வையம் புகழ்கிறது. நீ சிரிக்கிறாய்; ஆயிரம் முத்துகளை அடக்கி வைத்துள்ள சிப்பியைப் பிளந்ததுபோல் இருக்கிறது உன் வாய். பெண்ணே! உன் இருதயத்தின் படபடக்கும் ஒலிகூட என் காதில் விழுகிறது! அவ்வளவு அமைதியாயிருக்கிறாய் நீ! நீ, அமைதி அலங்காரி ஆனாலும் உன் இருதயம் சாந்தியற்றது. சஞ்சலம் நிறைந்தது. அதன் துடிப்பை உணருகிறேன் நான். உனக்கு ஒரு காதலன் வேண்டும். கள்வர்கள் உன்னைக் காதலிக்கிறார்கள். நீ வெறுக்கிறாய். வேதனைப்படுகிறாய். குடியர்கள் உன் மடியைத் தேடி அலைகிறார்கள். நீயோ குமுறுகிறாய். அதையும் உன் இதயம் சொல்லத் தவறவில்லை. கனி குலுங்கும் சோலைகளில், காவிரியின் கரைகளில், கட்டித் தழுவும் காதலர்களின் சரச உரையாடல்களைக் கேட்டுக் கேட்டுத் தினவெடுத்த உன் இருதயம் கனத்துப் போய்க்கிடக்கிறது. நீ சிரிக்கிறாய், வெளி உலகுக்கு! ஆனால் உன் இருதயம் அழுவதை என்னால் உணர முடிகிறது. காதலுக்கேற்ற கட்டழகனே கிடையாதா என ஏங்குகிறாய். நானோ கல்யாணமானவன். என் விடுதலை [illegible] வெளியே விட்டுவிட்டு வெந்து

கொண்டிருக்கிறேன் வெஞ்சிறைதனிலே!

கவிஞர்கள், அறிஞர்கள், கலைஞர்கள் உன் சுயம்வர மண்டபத்திலே காலையெடுத்து வைத்து – நீ மாலையெடுத்து வரும் சமயம் – உன் மந்தகாசப் புன்னகை கண்டு, மயக்கமுற்று உலகத்துக்குத் தேவையாக ஏதாவது உளறியபடி விழுந்து விடுகிறார்கள்.

நீ விட்ட கண்ணீர் – தோட்டத்து மலர்களிலே, காட்டகத்துப் பூக்களிலே, பனி நீராகத் தேங்கியிருப்பதை நான் காணாமலில்லை. ஆனாலும் என்ன செய்வது? ஆறுதலுக்கு வழியிருக்கிறதா என்று நீ பார்க்கிறாய். ஆருயிர்த் தோழிகள் யாராவது வருவார்களா என்று எதிர்பார்க்கிறாய்... அவர்களும் வரத்தான் செய்கிறார்கள். ஆனால் அவர்களெல்லாரும் உன் நல்ல பண்பின் மறைவிலே நாச நாடகம் நடத்திச் சம்பாதிக்கிறவர்கள். நலிந்து போன மாதர்கள்.


ஆமாம்; உன் சகோதரன் சந்திரன், வெண்துகில் ஒன்று கொடுத்தானே; அதை யார் பிடுங்கிக் கொண்டது? இயற்கையாண்டிதானே! அப்பப்பா; அவன் ஒரு "மாயக் கண்ணன்" தான். உன் சேலையைத் திருடுவதிலே அவனுக்கு ஒரு திருப்தி. திருட்டுப்பயல் அவனைத்தான் உனக்கு அறவே பிடிக்காதே.

பிறகு எப்படித்தான் உனக்குத் திருமணமாவது? கருப்புப் பெண்ணே! இரவு நங்கையே! என் கவலையெல்லாம் உன் கல்யாணத்தைப் பற்றித்தான் – ஏன் முகம் வெளுக்கிறது உனக்கு?

நேரமாகிவிட்டதென்றா? சோகம் தாங்காமலா? விரகதாபம் மேலிட்டா? இரு, இரு, அதோ வந்துவிட்டான் என் நண்பன். உனக்கேற்ற காதலன். அவனைத் தெரியுமா உனக்கு? காலையெனும் கட்டழகன் அவன்தான். உங்கள் கல்யாணத்தை இப்போதே முடிவுசெய்து விடுவோம். கருப்புப் பெண்ணுக்கும் காலைக்கும் கல்யாணமாம்; அதற்குப் பெயர் கருக்கலாம்.

அடடே! எங்கே ஓடுகிறாய் – இரவுத் தோழியே; இளமைமாறா நங்கையே! இரு இரு, காதலனைக் கண்டதும் அவ்வளவு வெட்கமா உனக்கு! சரி, சரி போ!

●



கதிர் விழுங்கி – மதி உமிழும் கடலே! நிலமடந்தைக்கெழிலூட்டும் நீல உடையே! ஜகப் பெண்ணாளின் சந்தன மேனியில் சலசலவெனப் பறந்தாடும் சல்லாத்துணி நீ! பச்சைச் சிசுவின் பவள உதட்டிலே வழிந்து நிற்கும் பால் [illegible] நீ உமிழும் நுரை! இரண்டும் ஒன்று! அசைந்தாடும் அழகு உதிர் அலைக்கரங்களால் அருமையான சங்குகளை நீ அள்ளி இறைப்பது; செங்கரும்புச் சிறு கைகளால் குழந்தைகள் செய்யும் இன்ப விஷமத்தை உணர்த்திக் காட்டுகிறது.

ஓய்வுபெற உன்பால் வருவேன். ஓசை முழக்கத்தால் உள்ளத்தைத் தாலாட்டுவாய்! தூங்காப் பெருங்கடலே! தூய்மை நிறை நம் சந்திப்பில் சிறு தொய்வு ஏற்பட்டுவிட்டது. ஆனாலும் கடலே! என் மடலுக்குப் பதில் எழுது.

"உழைக்கும் பாட்டாளி – உயரும் முதலாளி – உண்மை நவில் அறிஞன் – உயர் பண் தரும் கவிஞன் – சிற்பி – சித்திரக்காரன் – சிந்தனையாளன் – எல்லாருக்குமே ஓய்வுண்டு. உனக்கு ஓய்வே கிடையாதே ஏன்? 'ஓயாமல் உழைக்கிறேன் பார்' என்று உடல் வளையா சோம்பேறிகட்குச் சொல்லிக் காட்டுகிறாயா?" என்று முன்பெல்லாம் கேட்பேனே? அதைக் கேட்பேன் என்று எண்ணுகிறாயா? இல்லை; இல்லை.

கற்கண்டுக் கையால் கஞ்சியைத் துழாவித் தந்து, அதைவிட இனிப்பான முத்தம் தந்து காலையிலே கட்டுமரத்தில் வழியனுப்பி வைக்கப்பட்ட காதலன் – கதிரவன் சென்றும் வரக்காணேனே என்று கண் சோர, கால் சோர குடிசையின் வாசலிலே எதிர்பார்த்து ஏங்கித் தவிக்கும் ஏந்திழையாள், உன்னை நம்பி வாழும் குடும்பத்தின் இளஞ் சிட்டு – அவள் அயர்ந்து போகாமல், இடிந்து மாளாமல், அவள் கணவனை அன்றாடம் உன் நீலமணித் தோள்களிலே தூக்கி வருகிறாயா? என்று கேட்பேனே – அதைத்தான் கேட்கப்போகிறேன் என்று கருதுகிறாயா? இல்லை – இல்லை.

கடல் மாதா காப்பாற்றுவாள் என்று நம்பி ஓரத்திலே முளைத்திருக்கும் ஓலைக் குடிசைகளைத் தூக்கி

எறிகிறாயே; தொழிலாளிகள் என்றால் உனக்குமா துரோக புத்தி – என்று கேட்டிருக்கிறேன் – பலமுறை கேட்டிருக்கிறேன் – அதையல்ல இப்போது கேட்கப் போவது!

முத்துப் பெருங்குளமே!

சிறைச்சாலையிலே, என் சிந்தனை அலைச்சலிலே அன்றொரு நாள் நீ செய்த அட்டூழியம் தலைகாட்டி மறைந்தது, கவின் நிறை நகராம் – தமிழரின் செல்வப் பூங்கா – காவிரிப்பூம்பட்டினத்தை அலைக்கரம் நீட்டி அழித்துப் போட்டாயாம்! ஏன் இந்த அநியாயம் புரிந்தாய் என்று கேட்கவில்லை. அதற்காக வழக்குத் தொடரவும் போவதில்லை.

ஆனால் கடலே! எம் செல்வத் திருநகரின் செழிப்பை அழித்தனையே! அதுபோல் பொல்லாத வடநாட்டுச் சின்னத்தை அழித்திடத்தான் துள்ளாதோ கல்லக்குடியில், உன் கரம்?

மடலுக்குப் பதில் எழுது!
இல்லையேல் மௌனமாய் இரு!
இரண்டுமே உன்னால் முடியாத காரியம்!

●



நதியே! நடனப்பெண்ணே! ஆட்டக்காரியின் அபிநயக்கரம் போல நெளிந்திடும் உன் அழகே அழகு! பெருகிவரும் நுரை வெள்ளமே! உருவி வரும் வெள்ளி ஒளியும் உனக்கீடாமோ! பண்ணமைக்கும் சிலம்பு நிகர் ஒலியும், வண்ணமெலாம் கூட்டிவரும் நடையும், உழவர் எண்ணமெலாம் களிப்பு செய்யும் உருவும் பொருந்திய பொன்னி மாதரசி! வாழி நீ வாழி!

காதலி

காதற் பெண்ணே! காவிரிக்கண்ணே! சிவப்பு தவழ் பவள இதழ் நங்காய்! உவப்பு நிறை காதலினால் மண்ணழகன் வாயில், நீ உமிழ்ந்துவிட்ட தாம்பூலந்தான் வண்டலெனும் பொருளோ!

அன்னை

முற்றாத மழலைகளை வற்றாத கைநீட்டி வளர்த்திடும் தாயே! அன்புக் கரத்தின் அணைப்பினால் – ஆணிப்பொன்மேனி அசைந்தாட, மாணிக்கப் பல்காட்டிச் சிரிக்கும் செந்நெற் குழவிகளைப் பார்த்திடுவாய்! இயற்கை இன்பம் சேர்த்திடுவாய்! அருமைத் தாயே! ஆற்று மாதா! தெரிந்தோ தெரியாமலோ தீய களைகளுக்கும் பாலூட்டுகின்றாய். இப்பிழையை உந்தன் அன்னையிடம் கற்றனையோ! தொட்டிற் பழக்கமோ, அல்லது உன்னிடந்தான் அந்தத் தூயவளும் கற்றனளோ!

அரசு

நன்மைகளைக் கொலு வைத்துக் குதூகலம் அடைவதிலே உனக்கு நிகர் யாருளர்? மஞ்சள் மணிக்கதிர் உன் மடியில் படுத்தே தலை நீட்டுகிறது. கரும்பின் கால் நனைந்து அதன் கணுவெல்லாம் சுவையேற்றுகிறாய். வாழை – மா – பலா – இன்னும் வாழ்வுக்குத் தேவையெல்லாம் உன் கைபட்டே கருத்தரிக்கின்றன. பொதுநலம் காணவே உழைத்திடும் உன்னை ஓர் அரசுக்குச்

சமானமென்பேன்! நாட்டுக்குள் புகுந்து நலம் பாடும்
நீயொரு நல்லரசு! கடமை புரிந்தபடி கடல்நோக்கிச்
செல்லும் நதியரசே! கடலை நீதான் சென்று
நிரப்புகிறாய் என்று மட்டும் நினைத்து விடாதே!
அப்படித்தான் இந்த வையகத்தில் அரசு புரிவோர்
நினைத்து விடுகிறார்கள். சமுத்திரத்து நீர் முகிலாக
மாறியதால் நீ சந்தன வண்ண ஆறாக ஓடுகிறாய்!
ஆறு போல்தான் அரசு! ஜனசமுத்திரத்தின் படைப்பு!
நிலைகெட்டு ஓடினால் அணை போட்டுத் தடுப்பர்,
நதியே உன்னை!

நாடாளும் அரசுக்கும் அக்கதிதான்!

ஓடும்போதே, இந்தப் பாடம் சொல்லி,

வாழ்ந்திடு நதியே! வாழ்ந்திடு! நதியே!

●



வைகறையே! வா! என் வாழ்த்துக்களை ஏற்றுக் கொண்டு போ! அடடா! வாழ்த்து என்றதும் இப்படி ஓடி வருகிறாயே – அட, புகழ்தேடி! முதலில் வசவு – பின்தான் வாழ்த்து! ஆமாம் – சேவலையும் எழுப்பிவிட்டாய் – செங்கதிரையும் எழுப்பி விட்டாய் – இரண்டுக்குமிடையிலே, உழைப்பாளி வீட்டின் கதவை ஏனப்பா அவ்வளவு அவசரமாகத் தட்டுகிறாய்? இரவெல்லாம் உடல் வலியால் மண் தரையில் உருண்டு, கடைசியில், அந்தக் களைப்பில் கண்மூடிக் கிடக்கிறானே தவிர; உறங்கிக் கொண்டிருக்கிறான் என்றா எண்ணுகிறாய்!

ஏழை என்ற 'இளக்காரம்' உனக்கும் ஏற்பட்டு விட்டதால் தானே – சேர்ந்து சுருண்டு கிடப்போரின் குடிசைக் கதவை அவ்வளவு பலமாகத் தட்டுகிறாய்? மாளிகைகளின் படியேற உன் கால் நடுங்குகிறதோ – அன்றிக் கைதான் கதவைத் தொட்டிட அஞ்சுகிறதோ?


'ஏழையே! எடு கலப்பையை' என்று எவ்வளவு அதிகாரமாய் அதட்டுகிறாய். என்றைக்காவது ஒரு நாள்; எழில் மாடத்தில் சாளரத்தின் வழியாகவாவது, 'நேரமாகி விட்டது' என்று வீணை அதிர்வது போலவாவது விளம்பியிருக்கிறாயா?

ஏழையை நீ எழுப்பாத நாள் – அவன் இறந்து போன நாள்தானே! பிணத்தை நீ எழுப்புவதில்லை! மாளிகையின் நடைப்பிணத்தையும் நீ எழுப்புவதில்லை.

புரிந்துகொண்டேன் உன் பொருள் பொதிந்த போக்கு!

வைகறையே நீ வாழி!

●



“கையினிலே தட்டேந்தி சோர்ந்து நிற்கும் என்னைப் பார்த்து கைதிக்காவலன் மொண்டு ஊற்றும் சோளக் கஞ்சி கலகலவென சிரிக்கிறது. ‘கட்டுண்ட திராவிடத்தைக் காத்திடப் போராடி, இன்று தட்டுடனே நிற்கும் தம்பிமாரே! கஞ்சியெனைக் கண்டு கலங்குவதேனோ” என்று கேட்கிறது அகப்பைக்குள்ளிலிருந்து! இந்த அகப்பை சித்தரின் பேச்சிலும் அர்த்தமிருக்கிறது. புதிய தெம்புள்ள கருத்துமிருக்கிறது. இந்த சித்தரின் சூடான நாக்கு, எவ்வளவு குளிர்ச்சியான உண்மைகளைக் கொட்டுகிறது!

'தம்பீ! குளிர் தருவிலேயிருந்த நீ, கொஞ்சம் கோடையையும் அனுபவித்துப் பார்! வெடித்த வயல்களுக்கு நீர் பாய்ச்சுகிறவனின் சிரமமும், மாட்டு மந்தையை ஒழுங்காக மேய்த்துச் செல்ல ஓடியாடும் மாட்டுக்காரப் பையனின் கஷ்டமும், காலிலே சணல் சாக்கைச் சுற்றிக் கொண்டு அதை வாழை நாரினால் கட்டி, தலையிலே காய்கறிக் கூடையுடன் கிராமாந்திர சுடுமணலில் நடந்து செல்லும் 'அன்றாடங்காய்ச்சி' வியாபாரிகள் படும் அல்லலும், 'ஈன ஜென்மமெடுத்தேன் என் அய்யனே' என்று கரகரக்கும் தொனியில் பாடிக் கொண்டு, சுரைக்காயைக் குடைந்து மூங்கிலைச் செருகித் தயாரித்த சுத்த சுதேசித் தம்புராவை மீட்டியபடி ஊர் ஊராக உருண்டு புரண்டு பிச்சையெடுக்கும் மனிதப் பழுப்புகள் – தளிர்கள் – படும் வேதனையும், அப்போதுதான் உன் உள்ளத்தைத் தொடமுடியும். குளிர்நிழலிலிருந்து கோடைக்கு வா! குற்றாலத்திலிருந்து கொடைக்கானலுக்குப் போகாதே! கோடைக்கனலை கொஞ்சம் ரசித்துப் பார்!

அறுசுவையுணவையே ஆயுள் பூராவும் நீ அருந்தினால் போதுமா? உன்னைப் பற்றித் தெரிந்து கொண்டால் மட்டும் போதுமா? உன்னைச் சூழ்ந்துள்ள உலகம் மிகப் பெரியது! கஞ்சியே குடித்து வாழும் ஒரு பெருங்கூட்டம், அதுவுமின்றி வாடும் ஜனக்கூட்டம், அவைகளைப் பற்றி நீ யோசிப்பது எப்போது?

என்ன; சொன்னதைக் கேட்காமல் என்னையே பார்க்கிறாய்? தங்க நிறமாயிருக்கிறேனே என்றா? இல்லை – இல்லை – என்னோடு கலந்துள்ள உமிகளைப் பார்க்கிறாய். உமிகளும் என் இனந்தான். எனக்கு உறவினர்கள்தான். உன் இனமென்ன லட்சணமாயிருக்கிறது; மனிதச் சிறுவனே? உமிகள் உன் வாக்கத்திலும் உண்டு. அவர்களுக்கு உமிகள் என்று பெயரில்லை. முதலாளிகள் என்று பெயர் – ஆண்டைகள் என்று பெயர் – அவதார புருஷர் என்று பெயர்! அரசியல் மேதாவிகள் என்று பெயர்!

"உமிகள் உன் இனத்திலும் உண்டு. அவைகளை நீக்கிவிட உன்னால் முடியுமானால் – என்னாலும் முடியும் உமிகளைப் போக்கிவிட! முயற்சித்துப் பார்!"

இப்படி அகப்பை சித்தர் பேசிக் கொண்டேயிருந்தார். வரிசையாக நின்ற நானூறுக்கு மேற்பட்ட நண்பர்களின் தொகை தேய்ந்தது. கடைசியாக, நான்; கையிலே தட்டுடன்! எஞ்சிய கஞ்சியார் என் தட்டில் குதித்தபடியே "என்ன தம்பி! சொன்னது புரிந்ததா?" என்று கேட்டார். "உப்பில்லை" என்றேன். உங்கள் மனித ஜாதியின் உடம்பிலுந்தான் சிலருக்கு 'அது' இல்லை என்றார்.

●



மலையே வாழி

மலையே!

வைரமணி விளக்குகள் ஒளிவிடும் வானப் பந்தலின் கீழே அரியாசனம் அமைத்து வீற்றிருக்கும் பூமி அன்னையின் தலையை அலங்கரிக்கப் பொன்னாலும், பச்சையாலும் இழைக்கப்பட்ட மணிக் கிரீடம் என்பேன் உன்னை! எப்படி எப்படி யெல்லாமோ உன்னை வர்ணிக்கத் தோன்றுகிறது! அப்படியப்படியெல்லாம் நீ காட்சியளிக்கிறாய்.

விண்ணகத்து வெண் முகில்களெல்லாம் கீழே விழுந்து கண்ணுக்கெட்டா உயரம் வளர்ந்தனவோ என்று திகைக்கிறேன், பனியால் நீ உடலை மூடிக் கொண்டிருக்கும்போது!

பனி மலையே! மற்றொரு கற்பனையும் மனத்தில் தோன்றுகிறது; முகத்தையும் உடலையும் வெண் துகிலால் மூடிக்கொள்ளும் 'கோஷாப் பெண்'ணோ நீ என்று ஐயுறுகிறேன்.

மலையே! நீ ஒரு பெரிய மகானாம். மங்கையரின் மயக்கு மொழி கேட்டும் மனங் குலையா முனிவர்களுக்கு அசையாத உன் உறுதியை உவமையாகக் காட்டுகிறார்கள் சிலர். எனக்கல்லவா தெரியும் உன்சேதி! வலுவிலே வந்து உன் தோளைத் தழுவும் மேகச் சீமாட்டிகளின் மோகத்தைத் தணிப்பதற்காக நீ உன் குளிர்க் கரத்தை நீட்ட, கரம்பட்ட அந்தக் காரிகைகள் மயங்கி, மேலே செல்ல முடியாமல் மழையாகக் கரைந்து, நதிக் கரங்களால் உன்னைச் சுற்றியணைக்கும் ஆவேசத்தை நானல்லவா நேரே பார்த்தவன்? அதற்குப் பிறகு தானே அனைத்தும் துறந்த முனிவர்களும் 'அந்தப்' பாசத்தைத் துறக்க முடியாது என்று அகிலமதிரக் கூவுகிறேன்.

மலையே! நீ ஓர் அழுத்தக்காரக் காதலன். அதோடு அறிவு நிறைந்த கவிஞன்; கவிஞன், எழுந்த கருத்தை மக்களிடம் வெளியிடுவான்; நீயும் விழுந்த மழையை மாநிலம் செழிக்க வழங்குகிறாய்.

மலையரசா! நீ வளராவிட்டால் – வையமெங்கும் உன் அகிலும் தேக்கும் நிறைந்த உயர்ந்த தோள்களை

நிமிர்த்தாவிட்டால் – வளமேது? வாழ்வேது? வாழ்க
உன் வைரத் தோள்கள்!

பொன்னும் பொருளும் தருவதால் பூமிக்கோர்
வள்ளலாய் – உலகிற்கு உதவி செய்வதால் பொது
நலத் தொண்டனாய் – புகழேந்தி நிற்கும் புவி
மகுடமே! நீயோர் கலைஞனுங்கூட! நீயில்லா
விட்டால் எகிப்து நாட்டுச் சிற்பங்கள் ஏது?
எல்லோரா குகைதான் ஏது? எழிலூட்டும் அஜந்தா
உண்டா? சிற்றன்னவாசலின் சிறப்பும்,
மாமல்லபுரத்து மகிமையும் காணவும் போமோ!

சிற்பக் குகையாய் சிரிக்கும் மலையே! உன் அகன்ற
நெற்றியில் ஜொலிக்கும் கலைகள் எல்லாம்
உயர்ந்தவை. உன்னதமானவை, உலகுக்கு
அழகூட்டுபவை.

ஆனால் மலையே ஒரே குறை! மூலைக்கு மூலை
கோடிக்கணக்காய்த் தெய்வம் குவிய மூலப்
பொருளாய் நீயே ஆனாய்!

ஆயினும் மனிதனைவிட நீ உயர்வு! மனிதன் உன்
தலையை மிதித்தான் என்றாலும், மனிதனை விட
நீ உயர்வு!

காரணம் :
மனிதனின் மதவாதப்படி –
'கடவுள் மலையைப் படைத்தார்!'

அந்த மலையின் துளியால்தானே கடவுளைப்
படைக்கிறான் மனிதன்!

●



அரும்பு பொதிய விழா மல்லிகையைப் பார்த்தால் ஆகா – எத்துணை இன்பமாயிருக்கிறது! வயலிலே நாற்று! வண்ணப் பொய்கையிலே மீன் குஞ்சு! காட்டிலே மான் குட்டி – வீட்டிலே குழந்தை. குழந்தாய்! நீ ஈறு காட்டி இளஞ்சிரிப்பு காட்டும் இன்பப் புதையல்! ஜீவ ஆறு காட்டும் எழில்! தூண்டா விளக்கு! மூன்றாம் பிறை! செல்வத்துட் செல்வம்! செழும்பொன்! செந்தேன்! சங்கத் தமிழ்!

உதைத்த காலுக்கு முத்தமும், உமிழ்ந்த வாய்க்கு சர்க்கரையும் உன்னைத் தவிர வேறு யாரால் பெற முடியும்? சிரிப்பாய், அதன் விலை ஜெகம் பெறும்! அழுவாய் – அதையடக்க கவிஞர்களின் எழுத்தாணி முனைகள் அள்ளிக் கொட்டியிருக்கும் காவியங்கள் – அப்பப்பா – உயிர் ஓவியங்கள்.

அண்ணன், தம்பி, அப்பா, அம்மா, ஆளன் அனைவரையும் வெறுத்து ஆயுளை முடித்துக் கொள்ள விரும்பிய எத்தனையோ பெண்மணிகளை, மடியிலிருந்து பார்த்தும், கருவிலிருந்து பேசியும், சாவிலிருந்து மீட்டிருக்கிறாய் நீ!

குழலையும் யாழையும் வெல்லுவாய் என்ற குறளையும் வெல்லும் உனது மழலை மொழி.

தென்றலிலே உன் அசைவைக் காண்பதோ– உன் அசைவிலே தென்றலைக் காண்பதோ என்று கவிபுனைவோர் தத்தளிப்பது எனக்குத் தெரிகிறது!

கொட்டும் வறுமை – குட்டும் அதிகாரம் இவைகளால் கெட்டுப்போன குடும்பங்கள்கூட உன் பட்டுப் போன்ற பாதங்களைத் தொட்டு பரவசமடைவதை நான் கண்டதுண்டு.

இளங்குளிரே!
எழுங்கதிரே!
வளர் தளிரே!

நல்ல மனத்திற்கு குழந்தை மனத்தைத்தான் ஒப்பிடுகிறார்கள். உன் மனம் உயர்வானது. மாசற்றது. அது மாணிக்கத்தின் ஜோதி,

பேதங்களில்லை – பிரிவுகளில்லை – பிளவுகளில்லை – வளைவுகளில்லை – பாசி இல்லை – பயமுமில்லை – அதோடு ஒன்று குழந்தாய்!

உனக்குக் கடவுள் என்ற எண்ணமுமில்லை. நீயும் நாத்திகவாதி. நல்ல மனத்திற்கு குழந்தை மனம் என்று பெயர். ஆகையால் நாத்திகர் நல்ல மனம் படைத்தவர்.

நல்ல மனம் படைத்தவர் நாத்திகர்

"அல்ல, அல்ல! நல்லது கெட்டது தெரியாக் குழந்தை – அறிவு தெளியாப் பருவம் – அரவத்தோடு விளையாடும் காலம் – ஆகையால் ஆண்டவன் சிந்தனை கிடையாது. வளர்ந்த மனிதன், நல்லது கெட்டது புரிந்தவன், பாம்பை நஞ்சென அறிந்தவன், அவன் சிந்தனைக்குக் கடவுள் தெரிகிறார்" என்று வாதிடுவோரை நானறிவேன் கண்ணே!

நீ நாகத்தோடு விளையாடுவது போலத்தான் சில பெரியவர்கள் நாசத்தோடு விளையாடுகிறார்கள் – அவர்கள் ஆண்டவனை வணங்குகிறார்கள், வாழ்த்துகிறார்கள், ஏத்திப் பாடுகிறார்கள்! அவர்கள் அறிவு தெளிந்தவர்கள் என்றா அர்த்தம்? பாம்பொடு விளையாடும் பண்பில் நீயும் அவர்களும் ஒன்று தானே குழந்தாய்!

பாம்பு – 'பாபம்'
பாம்பு – பாலப் பருவத்தில்!
பாபம் – வளர்ந்த மனிதனுக்கு

அவர்களுக்கு மாத்திரம் ஆண்டவன் எப்படி வந்து குதித்தான்?

காரணம் கண்டுபிடித்து விட்டேன், என் கட்டாணி முத்தே!

நீ – நல்ல மனம் படைத்த தளிர், பெரியவர் நல்ல மனம் படைத்த இலை.

நீ விளையாடுவது பாம்போடு! அவர்கள் விளையாடுவது 'பாபச்' செயலோடு!

ஆனால் –

நீ யாரையும் கெடுப்பதில்லை – அதனால்தான் உனக்குக் கடவுள் அவசியமுமில்லை.

●



முழு நிலவாம் வைரக்கட்டி, முகில் குன்றில் மோதுண்டு சிதறிவிட்ட ஒளித்துண்டோ தாரகையே நீதான்! பாய்ந்தெழுந்த மின்னலின் படைப்போ! சாய்ந்துவிட்ட மணிமுடியின் மாணிக்கச் சிதறலோ! வேய்ந்துவிட்டான் வானக்கூரையெல்லாம் இயற்கைக் கொத்தன் – இரத்தினத்தின் முத்துக்களால்! மணவாளன் வரவு பார்க்கும் நிலவு மங்கை, வான மஞ்சத்தில் பரப்பி விட்ட மலர்க்குழுவோ நீங்கள் எல்லாம்!

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி, தானு மதுவாகப் பாவித்துத் தானுந்தன் பொல்லாச் சிறகை விரித்தாடுங்காட்சி கண்டேன் – அது போல் – பொன் கடையில் புது நீலப்பட்டினிலே பரப்பியுள்ள வைரமென – விண்ணிடையே கண்சிமிட்டும் உமைக் கண்டு, மின்மினியாம் ஒரு பூச்சி மரக்கிளையில் மாநாடு கூட்டும். .

பூச்சி இனம் – பறவை இனம் மட்டும் இந்தப் புதுப்போட்டி நடத்தவில்லை. சீச்சீ! மனிதர்களுள் சில பேரும் அய்யகோ! அப்படித்தான் ஆகிவிட்டார்!

'மந்தி கையில் மலர்மாலை' என்னும் கருத்து நிறை அடுக்குச் சொல் கற்கண்டு! அறிஞர் தரும் பூச்செண்டு! அது கண்டு, எமக்குந்தான் தெரியாதோ – தமிழை அடுக்க எனச் சொல்லி, சில பேர், 'அ' வினிலே ஆயிரத்தை அடுக்கி வைத்து, 'க' வினையே நா கடுக்கத்தேடி, என்ன சொன்னோம் என்பதையே மறந்து மின் மினியாய்ப் பறக்கின்றார், விண்மீன்கள் முன்னே!

ஓவியமும், காவியமும், உரைநடையும், இசையும் கூத்தும், இன்னும் பல தாரகைகாள், உம் போலத் தமிழினிலே இருக்கையிலே, அவைகட்குப் போட்டியாக அவனியிலே மின்மினிகள் பறப்பதுவும் இயற்கை தானோ?

'வான்' என்ற அடைமொழியால் – கோழி – வண்ணக் கலாப மயில் ஆவதில்லை. 'மின்மினி'ப் பெயரால் பூச்சிகளும் விண்ணின் ஒளிப்பூக்கள் ஆவதில்லை! மனிதர்களும் இதைக்

கற்க வேண்டுமென்றே பறை சாற்று மஞ்சள் ஒளிமுத்தே! மாணிக்க மலர்க் கொத்தே!

மணி விளக்கின் சுடரே! முடிவாக ஒன்று சொல்வேன் – திகழும் உன் ஒளிப்புகழைத் திக்கெட்டும் பாடுகிறோம் ஆனால் – திடுமென ஒரு நாள் உங்களில் ஒருவர்க்கு ஒரு முழு வால்தான் முளைத்திடுமாம் – அய்யோ! பின்னர் – 'நட்சத்திரம்' எனப் புகழ்ந்த இப்பெரு வையம், 'வால் நட்சத்திரம்' என இகழும். மனிதரிலும் – புகழ் வளர்ந்த சில பெரியோர்க்கு இந்தப் பொல்லாத வியாதி உண்டு.

முகில் மாடத்து அகல் விளக்கே! முழு மதியாம் தரு நிழலில் இறைந்து கிடக்கும் மகிழ மலர்காள்! வான்சொரியும் தங்க ஒளி மழையே! பொன்பூவே! விண்மீனே!

நீ பூமி காணும் ஓவியம்.

●



பெண் : அன்புள்ள காதலரே!

ஆண் : யார்?

பெண் : யாரா? தெரியவில்லையா என்னை?
உங்கள் திருமுகத்தைக் காண
எவ்வளவு நேரமாய்க்
காத்திருக்கிறேன்!

ஆண் : வராதே என்று எத்தனை முறை
சொல்வது?

பெண் : ஏன்... என்னைப் பிடிக்கவில்லையா?

ஆண் : ஆமாம்!

பெண் : உமக்கென்ன பைத்தியமா! நேற்று
இரவெல்லாம் என்னை
ஆரத்தழுவியபடியே கிடந்தீரே...

ஆண் : அதற்கென்ன இப்போது - நான்
அழைத்தால் வா - போ!

பெண் : சரிதான், தேவைப்பட்டால் வரவேண்டிய
தேவமாதுவா நான்!

ஆண் : தேவாமிர்தமாயிரேன் – இப்போது
தேவையில்லை.

பெண் : அந்த அமிர்தத்தையும் தோற்கடிக்கும்
என்றீர் என் அதரபானம்! கற்பனைகள்
ஊறுகின்றன என்றீர் என் கன்னத்தைத்
தடவியபடியே! காவிய மாளிகை
எழுகின்றது எனக் கதைத்தீர் என் காந்தள்
விரல்களை ஸ்பரிசித்தபடியே! கவிதை
மழை கொட்டுகிறது எனப் போதை
மொழியில் புகன்றீர் – கருத்துக் குவியலே!
எண்ணப் புதையலே! கனியே! தேனே!
வா; வா! என வாயார அழைத்து,
அணைத்து, அமளியில் குலவினீர்! வேயா
மாடத்தில் ஓயா இன்பம் பெறுவோம்
என்றீர்! வேணு கானமோ – வீணை
நாதமோ – என்று வர்ணித்தீர். அப்படி
யெல்லாம் புகழாரங்கள் பூட்டிய நீரா
இன்று அதிகாரத்துடன் விரட்டுகிறீர்?
காதலரே எல்லாம்.... எல்லாம்
கட்டிலறைப் பேச்சுத்தானா?

ஆண் : கட்டிலறைக்கா வந்திருக்கிறாய்; கண் உதிர்ந்தவளே! நன்றாகப் பார்! இது கட்டிலறையா? காராக்கிரகத்தின் காவலறையடி!

பெண்: ஆமாம் – இந்த அறையில் என்னைத் தவிர உமக்கு இன்பமான பொருள் எது துரையே! வாரும், சினம் கொண்ட பாம்புகள் போலப் பின்னிக் கொள்வோம்... ஏன் தயக்கம்?

ஆண் : பேசாதே!

பெண் : கனியே வருகிறது – சுவைத்திட மறுக்கிறீர். மலரே வருகிறது – முகர்ந்திடேன் என்கிறீர். இன்பமே வருகிறது– எட்டி நில் என்கிறீர். நீர் அதிசயமான கிள்ளை – புதுமையான வண்டு – விசித்திரமான மனிதர்.

ஆண் : இப்போது நீ என்னதான் சொல்கிறாய்?

பெண் : எதைச் சொன்னால் நீர் ஆசையோடு கேட்பீர்?.... "சங்கீத மொழி பேசும் உம் குழந்தைச் செல்வங்கள், 'அப்பா எப்ப வரும் ஆத்தா?' என்று உமது தாயாரிடம் சிணுங்கி அழுவார்களே; அதைச் சொல்லவா?

ஆண் : அய்யோ – போதும் நிறுத்து!

பெண் : தலையணையைக் கண்ணீரால் குளிப்பாட்டும் உம் மனைவியின்

நிலையைச் சொல்லவா? அதைக் கேட்பீரா?

ஆண் : வேண்டாமடி, வேண்டாம்!

பெண் : பிறகென்ன, பழைய நினைவுகளைச் சொல்லட்டுமா? மரணப்படுக்கையில் உமது முதல் மனைவி பத்மாவதி – 'கடைசி யாகத் துடிக்கும் என் உதட்டில் ஒரு முத்தங்கள் கொடுங்களத்தான்" என்று கேட்பதற்கு முன் பெற்றுக்கொண்டாளே.... அதை....

ஆண் : அய்யோ... வேண்டாம்.... நீ போயேன்!

பெண் : உமது குடும்பத்தார் – தாய், மனைவி, சகோதரிகள்.... குழந்தைகள்... உழுவலன்பு பூண்ட நண்பர்கள்... உமது நலமே தன்னல மாய்க் கொண்டிருந்த தந்தை.....

ஆண் : சொன்னால் கேள்! போதும் நிறுத்து!

பெண் : இதெல்லாம் பிடிக்காவிட்டால் உமக்கு மிகவும் இனிப்பான சேதி சொல்லுகிறேன்; இந்த நாடு இருக்கிறதே – இது ஒரு அடிமை பூமி. இதை விடுவிக்க உண்மையான தொண்டர்களும், நேர்மையான தலைவர்களும் எத்தனை பேர் வேண்டும் தெரியுமா?

ஆண் : அய்யோ – என்னை விடேன்.

பெண் : முடியாது – இந்த முத்தங்களைப் பெற்றுக் கொள்ளும்.

ஆண் : விடு என்னை – உன் கரம் அக்கினிக் கட்டையாயிருக்கிறது! உன் முத்தம் முள்ளாகக் குத்துகிறது.

பெண் : நேற்று?

ஆண் : அதை மறந்துவிட்டேன்.

பெண் : போன வாரம்?

ஆண் : அதையும் மறந்துவிட்டேன்...

பெண் : போன மாதம்....?

ஆண் : எல்லாவற்றையுந்தான்! தயவுசெய்து நீயும் மறந்து தொலைந்து போ!

பெண் : அய்யா கோவலரே! நாம் இருவரும் மறந்து விடலாம். ஆனால் என் வயிற்றிலே வளரும் ஓவியத்தை யார் மறப்பது! அது நம் உறவை வெளியிலே சொல்லித் தான் தீரும்! பல இரவுகள் – பல பகல்கள் நாம் பாடிய காதல் கீதத்தின் அற்புதமான அடையாளம் அடியாளின் வயிற்றில் வளருகிறது கண்ணாளரே! மறக்க முடியாது அதை! மறுக்கவும் முடியாது நீர்! உலகம் சொல்லத்தான் போகிறது அந்த உண்மையை! எந்த வசதியும் நுழையக் கூடாதென்று தடை போட்டுள்ள சிறைச் சாலைக்குள்ளே உம்மிடம் ஒரு பெண்

மட்டும் ரகசியமாக வந்துபோன விஷயம், ஒரு நாள் அம்பலத்திற்கு வரத்தான் போகிறது! – நமக்குப் பிறக்கப் போகும் "குழந்தை" உம்மைப் பார்த்து "அப்பா அப்பா" என அழைக்கத்தான் போகிறது. அப்போது ஊரார் கேட்பர், குழந்தையின் தாய் யாரென்று! நீரும் சொல்வீர்; தனிமையென்னும் தங்கக் கொடி பெற்ற தளிர்க் கொடி; சிந்தனைச் செல்வம்; கற்பனைக்களஞ்சியம் இதுவென்று!

ஆண் : சரி சொன்னால் சொல்கிறேன் – நீ போ!

பெண் : உண்மையைச் சொல்லும்! என்னைப் பிடிக்கவில்லையா?

ஆண் : உண்மையைச் சொல்லுகிறேன் – தெவிட்டுகிறது – சற்று விலகியிரு!

பெண் : முடியவே முடியாது!

ஆண் : நான் போகிறேன்.


பெண் : எங்கே போகிறீர்... சிறைக்கதவு வெளியே பூட்டியிருக்கிறது... கவனமிருக்கட்டும்.

ஆண் : தூங்கப் போகிறேன்.

பெண் : சரி – என் மடியில் சாய்ந்தபடி தூங்கும்.

ஆண் : அடா அடா அடா!....

பெண் : ஹி ஹி ஹி..... வெற்றி! வெற்றி!



உறைபுகு வேலை என் வாளுக்கில்லையெனும் உரை தரு வீரன் – அவன் மடியிலே 'பொறைமலி பூங்கொம்போ இவள், எனும் அழகுமிழ் ஆரணங்கு! தேனிசை! தென்பாங்கு! தென்றலுக்கு வாழ்த்து!

காற்றிலாடும் பசுங்கொடியோ! கற்பனை ஊற்றிலாடும் பைந்தொடியோ! மோவா அரும்போ! பூவார் சோலைப் புதுமயிலோ! சிலம்பு குலுங்கிட – சிற்றிடை நடுங்கிட – செந்தமிழ்ப் பண்ணும், சிங்காரக் கண்ணும் தழுவிட, தழுவிட, அதைக் காண்போர்க்கு உறுதி நழுவிட, நழுவிட ஆகா – ஆட்டமென்ன சொல்லுவேன்!

மணிமுடி வேந்தர் – கனிமொழிக் கவிஞர் – ஆடலரசி – பாடும் சரசி – ஏழை – மோழை – எழில் மிகு மண்டபம் – தொழில்நிகழ் சாலை – சோற்றுக்கலைவோர் – சொர்க்கம் தேடிகள் – விடுதலை விருத்தம் – தருதலை கீதம் – பராரிக் கூட்டம் – பணக்காரத் தோட்டம் – பலப்பல கண்டேன்! நாடகமேடை!


இத்தனையும் காட்டும் ஈடற்ற கலையே! நாடக மேடையே! நன்றாகச் சொன்னான்; நீயும் உலகமும் ஒன்றென்று! ஒப்புகிறேன், அதை நான்! ஆனாலும் ஒன்றேயொன்று!

ஆண் பெண் சமத்துவத்தை நீ அணிமணிகளால் காட்டிவிடுகிறாய், ஆணைப் பெண்ணாக! பெண்ணை ஆணாக! ஆணிலே பெண்! பெண்ணிலே ஆண்! உடை மாற்றத்தாலேயே உன்னால் விரட்ட முடிகிறது அந்தப் பேதத்தை! ஆனால் உள்ள மாற்றத்தால்ப் அந்தப் பேதத்தை ஓட்டிவிட முடியாமல் உலகம் எவ்வளவு பெரிய மூச்சு விடுகிறது பார்! ஆகவே நீயும் உலகமும் ஒன்றல்ல.

தாழ்ந்தவரையும் – உயர்ந்தோராய்க் காட்ட முடியும் உன்னால்!

அந்த சக்தியைப் பெறமுடியாமல், சந்தியிலே நிற்கும் இந்த ஜெகமும், நீயும் ஒன்றா? யார் சொன்னது?

●



புகழே! நீ ஒரு கணிகை. கால் கடுக்க உன்னைத் தேடி அலைபவர்களிடம் காசு பெற்று காதல் வழங்குகிறாய்.

புகழே! நீ ஒரு சந்திர மண்டலம். உன்னை அடையும் முயற்சியில் பல மேதைகள் இன்னும் வெற்றி பெற முடியவில்லை.

புகழே! நீ இமயத்தின் உச்சி. இடைவிடா முயற்சியால் உன்னைச் சிலர் பிடித்து விடுவார்கள்.

புகழே! நீ ஒரு பனிக்கட்டி. உன்னைக் கைக்குள்ளேயே வைத்துக் கெட்டியாகப் பிடித்திருந்தாலும் நீராகக் கரைந்து மறைந்து விடுகிறாய்.

புகழே! நீ ஒரு மதுக்கலயம். உன்பால் வீழ்ந்த ஈக்கள் எழுந்ததேயில்லை. புகழே! நீ ஒரு நிழல்! உன்னைப் பற்றிக் கவலைப்படாதவர்களைத் தொடர்ந்து கொண்டேயிருப்பாய்.

புகழே! நீ ஒரு புதிர்! உன்னைப் பற்றி விளக்கவே என்னால் முடியாது!




பச்சைக்கிளி

சுரைக்காய்ப் பிஞ்சின் தலையில் மிளகாய்ப்
பழத்தைச் செருகி இடையில் மல்லிகை
இலைகள் சிறகாய்ப் பின்புறம் தாழை
மடலை வைத்தால்; பச்சைக் கிளியே!
உன்போல் படைப்பு! உன்போல் படைப்பு!
வட்டத் தலையே! சிவப்பு மூக்கே!

சின்ன இறகே! நீண்ட வாலே!
கன்னற் கிளியே சொன்னது பிசகா?
வ்ண்ணனை கேட்டு வாழ்த்த மறுப்பாய்.
புகழ்ச்சொல் கேட்டும் போற்றிட மாட்டாய்.
காரணம் அறிவேன் சின்னக் கிளியே!
கூண்டில் உன்னைப் போட்டதனாலே
தூண்டிற் புழுவாய்த் துடிக்கிறாய் நீயும்
சிறையில் உன்னை அடைத்து மகிழ்ந்தேன்
இன்று தெரிந்தேன்
சிறைமிகக் கொடிது! சிறைமிகக் கொடிது!
மன்னித் திடுவாய் மன்னித் திடுவாய்!
பொன்மொழிப் பாவாய் மன்னித் திடுவாய்!
என் சிறை முடிந்ததும் உன் சிறை உடைப்பேன்!
சிறையின் கஷ்டம் சிறையால் உணர்ந்தேன்.
அடிமைப் புள்ளே! அழகுக் கிள்ளாய்!
அனுபவம் பெற்றேன் – அனுபவம் பெற்றேன்.
வந்ததும் தருவேன் விடுதலை வாழ்வு
பறப்பாய், பறப்பாய், உயரப் பறப்பாய்!
கட்டிய கால்கள் விடுபடும் உடனே
எட்டிய மட்டும் ஏறிப் பறப்பாய்!
எழில்நிறப் பெண்ணே எங்கும் பறப்பாய்!
கூண்டினில் உன்னை அடைத்தேன் கிளியே!
மன்னித்து விடுக! கூண்டின் கஷ்டம்
புரிந்துகொண்டேன். கூண்டின் கஷ்டம்
புரிந்துகொண்டதால் கூண்டுக் கிளியுனைத்
திறந்துவிடுவேன்.

ஆனால் கிளியே
கூண்டின் கஷ்டம் புரிந்தோர் இங்கு
ஆண்டிட வந்தார்
மாண்டிட எம்மைக் கூண்டினில் போட்டார்
ஏனோ கிளியே? ஏனோ கிளியே?
பதிலும் சொல்வாய் பச்சைக் கிளியே!
உன்னை நான் அடைத்ததால் என்னை அடைத்தார்
என்றே சொல்வாய். நன்று கிளியே; நீ,
யாரை அடைத்ததால் நானுன்னை அடைத்தேனோ?

●



தமிழே!

உன்னை – உளங்கவர் ஓவியமே! உற்சாகக் காவியமே! ஓடை நறுமலரே! ஒளியுமிழ்ப் புது நிலவே! அன்பே! அழகே! அமுதே! உயிரே! இன்பமே! இனிய தென்றலே! பனியே! கனியே! பசுந்தோகை மயிலே! பழரசச் சுவையே! மரகத மணியே! மாணிக்கச் சுடரே! மன்பதை விளக்கே! – என்றெல்லாம் அழைத்திடத் தோன்றுகிறது.

ஆனாலும் தமிழே! உன்னைத் "தமிழே" என்று அழைப்பதிலே உள்ள இன்பம் வேறு எந்தச் சொல்லிலும் இல்லையென்பேன்.

●

000049

ANNA CENTENARY LIBRARY
CHENNAI - 600 085.



தேனலைகள்

தழைத்துக் குலுங்கும் தண் மலர்ப் பொழில் ஆங்கு மழைக் கூந்தற்காரி - பேரழகி யொருத்தி! அவள் இழைக்குப் பொன் வேய்ந்த துகில் பூண்டு நிற்கின்றாள், அணைக்கும் காதலனை அழைக்கும் கண் கொண்டு - கன்னங்களில் தேன் மொண்டு! கிள்ளை அவள் பெயர். பல், முல்லை! இதழ், சர்க்கரை வில்லை!

அவனோ தமிழழகன், இள வணிகன். பருவ மயில் ஆடுதற்கு முகில் கூட்டும் கண்ணுடையான். வளரும் மலைத் தோளுடையான், வளவன் பெயரால்!

அவன், விற்காட்டும் புருவத்தாளை - தற்காத்துத் தற்கொண்டான் பேணுகின்ற கற்புக் கருவத்தாளை - சந்திக்க வருகின்றான், பந்திக்கு முந்துகின்ற பசிகாரன் வேகத்தில்!

கனிமரங்கள் தலைநாணும்- அவள் எழில் தருவாய் நிற்கின்ற காட்சி கண்டு! வந்துவிட்டான் வளவன் என்ற சேதிதன்னை அங்கிருக்கும் சருகுகளின் சலசலப்பால் அறிந்துகொண்டாள். 'அத்தான்' என்பதற்குள் அணைத்துவிட்டான் பின்னிருந்து! கொத்தாக இன்பம் - குலை குலையாய்ச் சுவை மொழிகள் - காதல் அலை முழங்கும் இரு கடல்கள் - பெரு விருந்து! நீண்ட மௌனம்! ... விடியற் பறவைகளின் பண் கேட்டு, விழித்தெழுந்தார்!

"நீலவிழி நெருப்பாகச் சிவந்ததடி என் கண்ணே" என அவன் கூற, "ஆமத்தான்! அங்கென்ன வாழ்கிறது!" எனச் சொல்லி மீண்டும் தழுவுகின்றாள்.

"இனி நாம் இதுபோல் ஆடிப்பாட இருபத்துத் திங்கள் ஆகும் பெண்ணே - நாளை மறு நாள் ரோம் நகரம் போகின்றேன் கண்ணே!"

"கட்டழகா! கடலலையில் கட்டுமரம் போலத் தவிப்பதற்கோ பிறந்தேன்! இல்லை - இந்தப் பயணத்தைத் தவிர்ப்பதற்குத் துணிந்தேன்!"

“தடை வேண்டாம் - தணல் வேண்டாம் உன் விழியில்! புனல் கடந்து ஒளிமுத்து விற்றால் மடை திறந்த வெள்ளம் போல் பொற்காசு குவியும். தமிழர் வளத்தைத் தரணி அறியும். விடைகொடு பாவாய் - அத்துடன் விருந்தளிக்கும் உன் இதழ்க் கடையை இங்கு கொடு!”

“முத்துச் சுமையேற்றிக் கத்துக் கடல் சீறிச் செல்கையிலே குத்து விளக்கொன்றை இங்கு செத்து மடிய விட்டுச் செல்கின்றோம்... என நினைப்பீரா அத்தான்?”

“நினைக்க மாட்டேன் நேரிழையே... உனை மறந்தன்றோ நினைப்பதற்கு!”

“களவொழுக்கம் புகுந்து விட்டோம் - நாளை மறந்து விட்டால் நில நடுக்கம் என் வாழ்வில்! இதை உணர்வீர்!”

“மூச்சு வாங்குவதற்கும் விடுவதற்கும் நினைப்பை வைத்துக் கொள்வதில்லை. என் உயிர் மூச்சே! ஏதேதோ எண்ணாதே! நீயின்றி நானில்லை! நிலவின்றி வானில்லை!”

“விண்மீன்கள் படையெடுத்தால்?”

“புலால் உண்ணேன்!”

“ரோம் நாடு அழகிகள் வாழ் தேன் கூடாமே!”

“அங்கு நானோர் முடவனாயிருப்பேன். கொம்புத்

தேன் தமிழகத்தில் உண்டென்று உன் கொய்யா இதழ் நினைத்து உறங்குவேன். கற்பனையில் உண்ணுவேன்."

"வெளிநாட்டுக் கனியொன்றைச் சுவைப்போமேயென எண்ணி விட்டால்...?"

"அணிலா நான்? பல கனி சுவைக்கும் பண்பில்லை எனக்கு!"

"பரத்தையர் நட்பு குற்றமில்லையெனக் கொண்டு விட்டால்...?"

"தமிழர் பண்பு இன்று அதுவெனினும் நான் விதிவிலக்கு! வீண் ஐயத்தை நீ விலக்கு"

பிறகு பேச்சில்லை! இருபது திங்கள் பிரிவுக்கும் சேர்த்தளித்தார் ஒருவருக்கொருவர் இன்பச் சுவையை பாலைவனப் பயணம் போகும் ஒட்டகம் போல். இருபது திங்கட்கு இன்பத்தை மூட்டை கட்ட இடந்தரவில்லையே இயற்கையென வருந்தி நின்றார். பின் பிரிந்தார், நன்றாக விடிந்து விட்டதால்!

○

தென்பாண்டிக் கடல் முத்தை முதுகிற் சுமந்து தமிழகத்து நாவாய் ஒன்று ரோம் நோக்கிப் போகும் காட்சி. அதன் தளத்தினிலே வளவன் நின்று உளத்தினிலே மூண்டுவிட்ட காதல் தீயால் கிள்ளையை எண்ணிச் சிறு பிள்ளைபோல் அழுதான். "ஏன் சோகம்?" என்று ஒரு தேன் குரல்

கேட்டுத் திரும்பினான். கிள்ளையினும் கவின் மிக்காள். கீழ் வானத்துச் சூரியன் போல் கன்னங் கொண்டாள். உடலெடுப்பாய்த் தோன்றுகின்ற உடையமைப்பு! காதலுக்கு வாவென்று தூது விடும் கண்ணின் கடை அமைப்பு! விற் புருவம்! அதன் மேலே விண்மீன்கள் போலே ஒளிர்கின்ற புள்ளிக் கூட்டம்! கார் கூந்தல் கட்டி முடிந்திருக்கும் காட்சிக்கு; இரண்டு நாட்கள், இருபது ஆட்களுக்குமேல் பிடித்திருக்கும்!

தாமரை மலர்மீது வண்டொன்று அமர்ந்தது போல் அவள் முகமீது அழகுப் பரு! இன்ப உரு!

யாரென்றான்! ரோமென்றாள்! பெயர் கேட்டான். லெஜியா! பெருவணிகன் மார்க்கசின் பேத்தி! தகவல் தந்தாள்! காதல் அகவல் பாடும் அவள் விழிகண்டான். புரிந்து கொண்டான், அவள் நெஞ்சம்!

"மயில், மிளகு, முத்து தரும் தமிழகம், எனக்கு மையல் தீர்க்கும் அழகனையும் அளித்தது" என்றாள். "அவன் யார்?" அவன் கேட்டான். துணிச்சல்காரி அவன் தோள் சாய்ந்து, "நீர்தான்" என்றாள். "கடல் நீர் கரிக்குமம்மா!" எனக் கேலி பேசி அகன்று விட்டான். "பருகுதற்குத் தேவையில்லை; என் இதயப் படகு மிதப்பதற்குத் தேவை"யென்றாள்.

"பாய் கட்டிப் படகு நீ!... காற்றடித்த பக்கமெல்லாம் செல்லாதே... கற்புச் சுக்கானை ஒழுங்காய்ப் பிடி"யென்றான். "காற்றும் நீர்... படகும் நீர்... பாய் மரமும் நீர்... சுந்தரத் திருப்பந்தரும் சுக்கானும் நீர்...

இந்த ஓடம் ஊர்கின்ற கடலும் நீர்!....”

“கடலும் நீர்தான்!”

“என் கண்களிலும் அதுதான்!”

“கவனித்தேன்... விழி நீரில் என்னை மிதக்க விடாதே - விடுவித்துவிடு தங்கையே என்னை!”

“தங்கை யென்றா அழைக்கின்றீர்...?”

“திகைப்பானேன்! திருவிடத்தின் பெருமை சார் பண்பு தாயே அது!”

“ஆண்டவன் அளித்த அழகிற்கு நீங்கள் தரும் மதிப்பு இதுதானா?”

“ரோமானியரைப் போல், தமிழர் அழகிற்கு அடிமையாவதில்லை; அழகை வியப்போம் - வளர்ப்போம் - மதிப்போம் - இவ்வளவும் எங்கள் நாகரிக இலக்கணத்திலிருந்து சிறிதும் நழுவாமல்!”

“என் ஆசை வெறும் கனவுதானா?”

“வருந்துகிறேன். என்னை முன்பே இன்னொருத்திக்கு ஒப்படைத்து விட்டேன் லெஜியா!”

“யார் அந்த கொடுத்த வைத்த கோகிலம்?”

“கிள்ளை அவள் பெயர்!”

“அவள் வாழ்க - இதோ என் அன்பின்

அடையாளமாக அவளுக்கு இந்த முத்துமாலையை அணிவிப்பீர்களா ?"

"ஆகட்டும்!"

"அவளை நான் மதிக்கிறேன். அவள் பெரும் பேறு பெற்றவள். கற்புடைய கட்டழகனைப் பெற்ற அந்த நல்லாள் வாழ்ந்திடுக!... வளவர் கோமானே!... தங்கள் அன்பு நினைவாக எனக்கு ஏதாவது..."

"இதோ... இதயத் தூய்மையை வெளிப்படுத்தும் பரிசு!... இந்த முத்துக் கணையாழியை அணிந்துகொள்... இது தங்கைக்கு அண்ணன் தரும் அணிகலன்..."

○

இருபத்து திங்கள் கழிந்தன! ஒரு திங்கள்; சோலையிலே வந்ததுவோ எனத் தக்க காட்சி! கிள்ளை நிற்கின்றாள். இன்பக் கொல்லையிலே அத்தானின் அன்புத் தொல்லையிலே அகப்பட்டுக் களிக்க! முத்தம் பெறுவதற்கு முன்பாகக் கரம் ஏனோ கன்னத்தைத் தடவுகிறது! சத்தம் வரும் திக்கெல்லாம் கண் நோக்குத் தாவுகிறது! எனை மீட்ட வரும் யாழரசன் எங்கேயென்று இதய வீணை தவிக்கிறது! தாபம் தகிக்கிறது! கருகிப் போகும் முன்னாலே பயிர்க்கு மழை போலவே - உருகிச் சாகும் உளிபடாச் சிலை முன்பு ஒளித் தமிழன் வந்துவிட்டான். "அத்தான்!" என்றாள். இதழ்ப் போர்; முழவின்றி, முன் அறிவிப்பின்றி, முடிவுமின்றித்

தொடங்கிற்று! இடையிடையே சொல் முத்து!

“வாணிபம் எவ்வாறெ”ன்றாள். “மிக வளம்” என்றான். “மின் வெட்டுக்காரிகள் யாராவது”என இழுத்தாள். “யாருமில்லை”யென்று கூறி, ஆரம் ஒன்று கொண்டு வந்தேன்; அணிந்துகொள்” என எடுத்தான்.

“ஏது இது?”

“ரோம் நகர வேலைப்பாடு... தமிழ்நாட்டு முத்து!”

“யார் அளித்தார்?”

“ஒருத்தி தந்தாள் உனக்காக!”

“அவள்?”

“என் தங்கை போல!... ரோம் நாட்டுக்காரி!”

“உண்மைதானா?”

“உன்மீது ஆணையாக!... ஒளிர்பூங் கொம்பே; உன் கழுத்தை இங்கு தந்திடு!”

“அத்தான்... இந்த முத்துக் கணையாழி கண்டீரோ?” எனக் கேட்டாள் கிள்ளை; கண்டுவிட்டு வியப்படைந்தான் மணப்பிள்ளை.

“யாரளித்தார் எனக் கேட்பீர்; ஒரு தமிழன் - உயர் தமிழன் தந்தார்!”

“யார் அந்தத் தமிழன்?”

"எனக்கு அண்ணன் போல!"

"உண்மையா ?"

"ஆமாம்.... லெஜியாவுக்கு அவர் அண்ணன்..."

"லெஜியா - நீயேதான்!"

"அத்தான்... நானேதான் லெஜியா!"

"கிள்ளை! முந்நீர் வழக்கம் 'மகடூஉவோடில்லை' என்பதை மறந்தனையோ ?"

"மறக்கவில்லை... விதிவிலக்கு எனக்கு மட்டும்!"

சிரித்தான் அவன்... அவள் கழுத்தில் முத்தாரம் அணிவித்தான். அவள் சிரிப்பு முத்தாரம் தந்தாள். பின்னர் இரவெல்லாம் முத்தாரம் தொடுத்தார் இருவருமே!

●



கயற்கண்ணி – நப்பின்னை! சங்கத் தமிழ் முழங்குகின்ற தமிழகத்துச் சோலையிலே இரு மயில்கள்! இசைக் குயில்கள்! மூத்தவள் முத்தெடுத்துக் கோத்தது போல சிரிப்புக்காரி – முழு நிலவு காட்டுகின்ற முகத்துக்காரி! மொண்டு தரும் சுவையனைத்தும் உண்டு களிப்பதற்கு உலகினிலே யாருக்கு வாய்ப்போ என்று ஊர் பேசும், உவகை சிந்தும் பவழ இதழ் கண்டு!

கற்கண்டு இன்னொருத்தி – வயதினிலே இளைய தோழி! தங்கம் மேனி . . . குணத்தினிலே கொஞ்சம் கூனி!

ஓடையிலே – குளிர் தென்றல் மிதக்கின்ற ஓடையிலே – அருவியோரத்து அழகுக் காவின் வாடையிலே – அவ்விருவர் ஆடிப்பாடி சோடிப் புள்ளெனவே பறந்திடுவார்! காண்போர், தம்மை மறந்திடுவார்!

கிரேக்கத்து எழிலாளும் யவனத்துப் பெருமகளும் – தமிழகத்துக் கரையோரம் இவர்களைக் கண்டதனால் மறுமூச்சு வாங்குவதற்கும் மறந்து போனார் – தலை குனிந்தார் – நிலை குலைந்தார்!

தென்னகத்துச் சந்தனத்தை வாங்குதற்கும், மலைப்பாம்பு–மயில்–மிளகு ஏற்றிச் செல்வதற்கும் – யானை தந்தத்தை நாவாயில் அடுக்கிப் போவதற்கும் வெளிநாட்டு வாணிபக் கோமான்கள் வரும்போது, கயற்கண்ணி – நப்பின்னை இருவரையும் கண்டுவிட்டால், கிரேக்கத்தை, யவனத்தைப் பண்ட மாற்றுச் செய்து கொள்வோம்; இந்தக் கிள்ளைகளைத் தந்திடுவீர் எனக் கேட்பார் என்று கூறி, கிழட்டுப் பெண்டிரெல்லாம் அவ்தம் அழகுக் கீர்த்திதனை வியந்துரைப்பார்!

வைரம் பதித்திட்ட பவழ வாய்ச் செம்புட்கள் தங்குவதற்கு இதயக் கூண்டுதனைப் பெற்றிருக்கும் ஆடவர்தான் யாரோ – எந்த ஊரோ – என்ன பேரோ – எனப் பேசி வினாக்குறி முகங்காட்டிக் கலைவார் அவ்வூரார்!

"கயற்கண்ணி, நப்பின்னை தோழிதானே - நப்பின்னை நமதருந் தங்கை தானே – இவள் மூலம் முயன்று பார்த்தால் அந்தத் தித்திக்கும் செந்தேனை யார் கொள்வார் நம்மையன்றி! எனயெண்ணி உழைக்கலானான், மணிவேலன்! மாணிக்கச் சிற்பத்தின் அண்ணன், மான், புலி, வேழம் கொல்வதையே தொழிலாய்க் கொண்ட பெருவீரன்!

நல்ல தருணம் வாய்க்கின்றபோதெல்லாம் கயற்கண்ணி காதினிலே அண்ணனது அழகாற்றல் வலிவையெல்லாம் அளந்தளந்து சலித்துவிட்டாள் நப்பின்னை!

துடிக்கின்ற அண்ணனிடம் ஓர் நாள். "தொட்டவுடன் துவளுகின்ற தோகையல்ல கயற்கண்ணி! முயற்கொம்பே அவள் இடத்தில் காதல் எதிர்பார்க்கும் வேலை யென்பேன்! எதற்கும் புலி கொன்று நகம் கொண்டு வருவாய்! புலி நகத் தாலி கட்டும் போர்க்குடி மகனுக்கு ஒப்புவாய் என்று அவள் மனத்தை மாற்றுகின்றேன். அதுவும் முழு உறுதி அல்ல அண்ணா!" என மொழிந்து காட்டுக்கு அனுப்பி வைத்தாள்!

ஓர் நிலவுக் காலந்தன்னில் விடிவெள்ளி தோன்றும் மட்டும் தோழிதனைக் காணோமென்று தேடி வந்தாள் நப்பின்னை! கடற்கரையின் வெண் மணலில் தனி நடந்து வருகின்ற கயற்கண்ணி விழியெல்லாம் வெண் சிவப்பாய் இருத்தல் கண்டாள்! விளக்கமேதும் தேவையில்லை; புரிந்து கொண்டாள் விவரமெல்லாம்!

"என் அண்ணன் உனக்காகப் புலிநகம் கொண்டு வரப் போனான் – இன்னும் வரவில்லை"யென்று சொன்னாள், நப்பின்னை!

"வரவேண்டாம்; வந்தாலும் எனக்கு அதைத் தர வேண்டாம் – வாழ்க்கைக்குத் துணையொன்றை நாடி விட்டேன்."

–மொழிந்தவாறு கழுத்தினிலே . . . ஆடுகின்ற முத்தாரம் எடுத்து முத்தம் தந்தாள், கயற்கண்ணி!

"முத்து கொடுத்து முத்தம் பெற்றானோ; முட்டாள் நீ ஏமாந்துவிட்டாய்! தமிழ் வீரம் காட்டுகின்ற செயல் புரிந்து புலி நகத்தைப் புதுப் பரிசாய்த் தந்து மணம் புரியும் வழக்கத்தை மாற்றிவிட்டாய் – மறத்தியல்ல!" எனக் கடிந்தாள்!

புன்னகையைத் தவழவிட்டுக் கயற்கண்ணி, பொன்னுதிரும் வார்த்தைகளால் பதில் சொன்னாள்!

"அடிதோழி! அவசரப்படாதே! ஒளிமுத்து என்கின்ற உயர் வீரன் – உத்தமன்! என் உள்ளங் கவர்ந்தான் – மறத்தி நான் – அதனால் மாவீரா . . . புலி நகம் பரிசாக வேண்டு மென்றேன்! புதுவகைப் பரிசு தருவேன் என்றான் – முத்தெடுத்து அளித்திட்டான் – என்னையும் சேர்த்தெடுத்து அணைத்திட்டான்!"

"கடையினிலே ஒரு முத்தை ஒளிமுத்து வாங்கித் தருவதற்கும் காட்டகத்தில் புலி வேட்டை ஆடுவதற்கும் வித்தியாசம் நிரம்ப இருக்குதடி தோழி!"

"கடையினிலே அல்ல; என் கண் எதிரே கடல் நடுவே குதித்தான் . . . பின்னர் முத்துச் சிப்பிகளோடு உதித்தான்!"

"இதோ, நானுந்தான் நேற்றிரவு வாழ்வுக்குத் துணை கண்டேன்!... புலிவேட்டைப் புலியொருவன்... நம்பியெனும் நல்லோன் நகமொன்று பரிசளித்தான். நான் அவனுக்கானேன்!"

"பரிசுக்கும் பாராட்டும் வீரத்துக்கும் மட்டும் பாவையர்கள் பறிகொடுக்க வேண்டுமோ உள்ளம்!... பண்போடு – அழகோடு – பராக்கிரமத்தோடு – மணவாளன் வருவதிலே மரபுக்கு மாசு வருமோ பெண்ணே! கடையினிலே முத்தெடுத்து வந்தார் என்கின்றாய்; என் கணவன்! காட்டினிலே புலி கொன்று வந்தான் உன் கணவன் என்று யார் கண்டார்?"

"நம்பிக்கையில்லையென்னாதே! நம்பி அவர் பெயர்!"

"இந்த மலருக்குத் தும்பி! அதனால் புகழ்ச்சியுரை!"

"வார்த்தை நீள வேண்டாம் – வாழ்த்துகின்றேன் – வருகின்றேன்– என் வீரர் காத்திருப்பார்!"

நப்பின்னை நன்முகம் கோணி; போய் விட்டாள் அதை விட்டு!

"பித்துப் பெண்! இவள் அண்ணன் இரு புலியை ஒன்றாய்க் கொல்வான் – ஆயின் என்? . . . அவன் பண்பு பரத்தை வீட்டில் கேட்டால் தெரியும்!..." முணு முணுத்துச் சென்றாள் கயற்கண்ணி!

அண்ணனுக்குக் கயற்கண்ணி வாய்க்கவில்லை யென்கிற சீற்றமுடன் வீடு வந்த நப்பின்னை, மணிவேலன் மனமுடைந்து இருப்பதையும் கண்டு விட்டாள். மன்னிப்புக் கேட்டு நின்றாள்.

"இனியென்ன போகட்டும்; இலவு காத்த கிளியானேன்" எனச் சொல்லி எழுந்து சென்றான் மணிவேலன்!

"என்ன அண்ணா – எனக்கோர் துணைவன் தேடி விட்டேன்! . . . இதோ பார் அவன் கொன்ற புலி நகம்!" எனத் தந்தாள் . . . ஆர்வமுடன்! . . .

"யார் அவன்?" என்றான் ஆசையுடன்! . . . "நம்பி!" என்றாள்.

"அவனா?... அவன் கொன்றானா புலியை?... நான் கயற்கண்ணிக்காகக் கொன்ற புலியின் நகத்தையன்றோ நம்பிக்குக் கொடுத்தேன்; அவள் மணச்சேதி கேட்ட பிறகு."

எனச் சொல்லிச் சிரித்தான் மணிவேலன்!

வீரனை மணந்ததாய் எண்ணியிருந்த அத்தோழி, வீழ்ந்துவிட்டாள் பூமிதன்னில் மூர்ச்சித்து!...

ஆரியனாம் அந்த நம்பி என்ற சேதி அதன்பிறகு கேள்விப்பட்டாள்; ஆவிதனைக் கடலுக்கு அர்ப்பணித்தாள்! மறத்தியானாள்!

●



நகை நட்டு ஏதுமின்றி எழில் சொட்டும் பருவத்தாள். புகையொத்த கொடிபோல நெளிந்தாடும் உருவத்தாள். இடையோ ஒரு பிடிக்குங் காணாத இளம்பிடி! இதழ்களிலோ தேன் ஒரு படி! . . . இல்லை இவளுக்குக் குறையெனும் புகழ்பெற்ற முல்லை. பேச்சிலோ கிள்ளை! . . . அவளை விடுமோ காதல் தொல்லை!

அமுதம் உண்ணப் பிறந்தவன் ஒருவன் . . . அவன் பேர் மருதன். குமுதம் சிரித்திடக் கோல நிலவென வந்திடும் குமரன். "வேலெடுத்தாள் உந்தன் விழி நினைவு வாட்டுதடி; வாளெடுத்தாள் முத்துப் பற்கள் ஒளி தலைகாட்டுதடி; வேழம் ஏறிவிட்டால் மத்தகந்தான் மெத்தத் தொல்லை அளிக்குதடி!" எனக் கொஞ்சிப் பஞ்சணையில் அஞ்சுகத்தைப் புலன் மாற்றிப் போடுகின்ற பொல்லாக் காளை! போர் முகத்துப் பெருவீரன்! தானைத் தலைவன்!

அவன் ஒருநாள் பகைப்புலத்தினை அழிப்பதற்கு அரசின் ஆணை – காதல் அரசி ஆணை பெற்றுச் சென்றோன், பத்து கிழமை சென்ற பின்பும் வந்தானில்லை. பசலை நிறம் படர்ந்ததாலே பாவை வாட, பருவ மெய்த நாள் நோக்கும் தோழிக் கூட்டம் கேலி பாட "தருணமிதே தாகந் தீர்க்க வருவீ" ரென்றே அவளும் ஓடி, நிழல் கண்டு ஏமாந்து – ஏங்கி நின்றாள்.

ஆலையிட்ட கரும்பாக ஆன மனம் தேறுதற்கு மாலையிட்ட கண்ணாளன் வரைந்த ஓலை மட்டும் கிட்டியது அவள் கையில்! . . . அதில்,

"குளிர்தருவே! பனிமலரே! வெற்றியுடன் திரும்புகின்றேன். கொற்றவனைக் காணுதற்கு முன்பாகக் கொவ்வைக் கனி கொத்துவதற்கு வருகின்றேன்."

எனக் கண்ட எழுத்தெல்லாம் நனைந்தன முத்தம் பெற்று!... உயர்வான நெஞ்சகத்தில் ஓட்டிக் கொண்ட ஓலைக்கு ஊமைக் குணம் இல்லையேல் ஓராயிரம்

கதை சொல்லும் உவமை காட்டி!

தோழிகள் வந்தனர். "கோழிபோல் குடிலுக்குள் அடை காக்க வேண்டாம்; காலையில் ஆடிப் பெருக்கிற்கு ஆற்றினிலே விழா எடுக்க வருவாய்" என்றனர். காலையில்தான் அவர் வருவார்! "ஆடிப் பெருக்கினும் அன்பைப் பெருக்குபவர்" என்றாள் முல்லை. "அட கிறுக்கே! ஆளன் எப்போதும் இருப்பான்; ஆடிப் பெருக்கு ஆண்டுக்கு ஒருமுறைதான்" எனக்கூறிக் காவிரியை வாழ்த்துகின்ற கவிதையொன்றை இசை கூட்டிப் பொழியலானார். பாட்டியொருத்தி பவழம் என்பாள்; அவள் நீட்டி முழக்கிக் கூறலுற்றாள்; ஆடிப் பெருக்கிற்குத் தடையின்றிப் போகவேண்டுமென்ற அறிவுரையை!... முல்லையும் வருவேன் என்றாள்.... அனைவருமே அடுத்த கொல்லையிற் சென்று மருதாணி இலை பறிக்கப் பறந்து விட்டார்.

கிள்ளி வந்த மருதாணிக் கொழுந்துகளை அள்ளி வைத்து, அரைத்தெடுத்து, அம்மாவின் துணையோடு, அழகான கைகளிலும், அந்தமிகு தந்தக் கால்களின் நுனிகளிலும் தடவிக் கொண்டாள். உள்ளங்கை தனிலே உதய சூரியன் போல் மருதாணி! வீணை மீட்டும் விரல்களிலே... குறி பதிக்கும் நகங்களிலே... மருதாணி! கண்ணகியின் சிலம்பு போல் காலினிலே மருதாணி! இங்கெல்லாம் இட்டுக் கொண்டு மருதாணி இடாமலே சிவந்து நிற்கும் கன்னத்தில் இனமறியா வெட்கந் தேக்கிப் படுத்துக் கொண்டாள்.

"இரவெல்லாம் மருதாணி ஈரம் காய்ந்து காலையிலே உதிர்ந்து விட்டால்...

–புது எழிலோடு வரவேற்போம்; போர் முடிந்து வருகின்ற காதலனை..." என நினைத்து மகிழ்ந்து கொண்டாள்.

உறங்காமல், ஒரு புறமும் அசையாமல், மருதாணி கலையாமல் படுத்திருக்கும் அவள் காதில் மருதன் அழைக்கின்ற குரல் கேட்க... எழுந்து நின்றாள்; அவன் எதிரே நின்றான். அசைவற்றாள். "பாய்ந்து வந்து தழுவிடுவாய்; படை முகத்துச் சேதியொன்றும் சொல்லுதற்கு வழியின்றி வாய்மூடி இதழ்பதிப்பாய் என நினைந்து ஓடி வந்தேன்; ஏன் முல்லை தயக்க"மென்றான், காதல் மயக்கத்தால் சுழலுகின்ற மனமுடையோன்.

"காலையிலே வருவீர் என்று மருதாணி பூசிக் கொண்டேன் – ஓலையிலே விபரம் இல்லை... ஓடிவந்து தழுவிக்கொண்டால்; மருதாணி கலைந்துவிடும் – ஊர் முழுதும் தோழிகள், நாளைக் காலை முதல் நம்மைப்பற்றித் தம்பட்டம் போட்டிடுவார்; அதனால்தான் தயங்குகிறேன்; தழுவாமல் இதழ் குவிப்போம் இப்போதே" என்றாள். தடையா சொல்வான் – முத்தமிட்டுத் தனியாக முற்றத்திலே படுத்துக் கொண்டான். கலையாத மருதாணி – கலங்கி நின்ற இளம் நெஞ்சம் – இந்நிலையில் உறங்காமல், புரளாமல், விடிவெள்ளி வருவதெப்போதென எண்ணி விண்ணோக்கி வீழ்ந்திருந்தாள், விழியழகி முல்லைப் பெண்ணாள்.

ஓரிரவு போயின் என்ன; நாளை உண்டு –
என்னருகே அந்தக் காளையுண்டு – இனி
நாளெல்லாம் தேன் மொள்ளும் இன்பமுண்டு –
எனச் சொன்னாள், அழுகின்ற இதயத்துக்கு
ஆறுதலாய் ஒரு வார்த்தை!

விடிந்தது பொழுது – வெண் சக்கரக் குடையானைக் காணுதற்கும், வெற்றிச்சேதி கூறுதற்கும் காதலிபால் விடைபெற்று வேந்தனது தலைநகரம் பயணப்பட்டான் வீரத் தலைவன், வெள்ளி நிலவு முளைப்பதற்குள் வருவதாக வாக்களித்து!

மருதாணி உலர்ந்ததாலே... உதிர்த்துவிட்டு அழகான கைகளையும், கால்களையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டாள் மங்கை நல்லாள். செங்கோடு – சிலம்புக் கோடு – சித்திரக்கோடு – இவைகளோடு – பத்தரை மாற்றுத் தங்கமேனி பொலிவு சிந்தப் புறப்பட்டாள் ஆறு நோக்கித் தோழிகளுடன்!... விழா எடுத்தனர்–ஆடினர்! பாடினர்!... விரிந்த பகல் இரவாய்ச் சுருங்குவதெப்போதென விழைந்தனள் முல்லை!

இருண்டது உலகம் – ஒளிபெற்றது அவள் உள்ளம்!... வெள்ளி நிலவே வாராயோ என்றாள்; அதுவும் வந்தது... "அவரெங்கே – வந்தவுடன் அணைத்து மகிழ்வதற்குத் தடையில்லை; மருதாணி இலையில்லை; ஈரமில்லை... அது தந்த எழிலுண்டு கையில்!... இன்ப விருந்துண்டு இரவெல்லாம் கழிப்போம்..."

முல்லை பாடினாள் நிலவு நோக்கி... புரவியொன்று வேகமாகத் தலைவாயில் பக்கம் வருவது கண்டாள். அவரேயென்று கூவினாள். ஆவிநிகர் ஆளனுக்குப் பதிலாக அவன் தந்த ஓலை கொண்டு தூதன் வந்தான். அதில்;

"தமிழே! தண்பொழிலே!... கடாரத்தில் படையெடுப்பு! கடல் கடந்து செல்லுகின்றேன். உடல் மெலிந்து வாடாதே... ஓராண்டில் திரும்புகின்றேன்!"

–என்ற எழுத்துக்களை நனைத்தாள் கண்ணீரால்...! கட்டிலிலே குப்புற வீழ்ந்துவிட்டாள்... வீணாக்கி விட்டேனே நேற்றிரவை . . . விரலுக்கும் காலுக்கும் அழகு தேவையென்று விருந்துண்ண மறுத்தேனே – இனி ஓராண்டு யாருக்கு அழகு காட்ட இந்த மருதாணி தேவையென்று... கசக்கிக் கொண்டாள்; கைகளையும் கால்களையும்!...

இதுபோல நேற்றிரவே ஈர மருதாணியைக் கலைத்திருந்தால் அது கலைந்திருக்கும்... கலவி நடந்திருக்கும். இன்று கலையுமோ ?... கலையவில்லை! 'ஓராண்டு!' எனச் சொல்லிக் கொட்டி விட்டாள் மழைக்கண்ணீர்!... அப்போது 'கலகல' சிரிப்புக் கேட்டு 'மளமள' என எழுந்தாள் – எதிரே மருதன் நின்றான்... ஏனத்தான் அழவிட்டீர் எனக் கேட்டபடி அணைத்துக் கொண்டாள்! கடாரம் போவதுண்டோ எனக் கதறியழும் பாவை நோக்கி; "மருதன் பெரிதோ – மருதாணி பெரிதோ ?... இதற்கு விடை தேவை" எனச் சிரித்தான் வீரர் குலத்தான்.

"மன்னிப்பீர்; கலைகின்ற வண்ணக்கோடு மருதாணி
– கலையாத சித்திரந்தான் தாங்கள் எனக்கு!"

– எனச் சொல்லி விம்மிவிட்டாள் – விம்முகின்ற வடிவழகில் மனம் பறிகொடுத்து முத்தம் பதித்துவிட்டான் கணக்கின்றி; முல்லை மணம் குடிலெங்கும் கமழ்ந்தது! காதல் வாழ்ந்தது!

●



நீலமுகில் திரளை – கோல மயில் உருவை –
சோலை தரும் எழிலை – பாலை மணற் பரப்பை;
தூரிகையால் படைக்கின்ற ஓவியன்!

அணி தேர்ப் புரவி – மணிமுடி மன்னன் –
ஆடலழகி – ஊடும் பாவை – அவன் கைவண்ணம்
காட்டுகின்ற சித்திரங்கள்!

ஆடை நெய்வோன் – பானை தருவோன் – கூடை முடைவோன் – குமுறும் நெஞ்சினன் – ஏழை மனிதன் – இவையெல்லாம் அவன் எண்ணத்தை எதிரொலிக்கும் ஓவியங்கள்!

அரசியலார் – அறிஞர் மன்றம் – கலைஞர் குழுக்கள் – அனைத்திலுமே அவனுக்குச் சிறப்புண்டு! அவனைப் போல் ஓவியனை எதிர் நிறுத்த யாராலும் ஆகாதென்று; "ஆதவனும் ஒருவன்தான்; இந்த ஓவியனும் ஒருவன் தான்" எனச் சொல்லி மகிழ்ந்திருந்தார். ஆண்டுதோறும் தங்கத்தால் சட்டமிட்டு, வைரத்தால் வாழ்த்தெழுதி மன்னவனும் பாராட்டிப் பரிசளிப்பான்; கொடுத்திட்ட பரிசுதனை அடுத்துவந்து மன்னன் பார்க்கவா விரும்புவான் என்று படை எடுத்திட்ட ஏழைகள்பால் வழங்கிடுவான்; வைரத்தைத் தங்கத்தைப் பங்கு செய்து!

முத்தமிழார் ஆட்சியெனில் ஏழைகளின் முறையீடு – குறைபாடு இல்லாது இருந்திருக்கும்; எவரோ பல்லவப் பெருமன்னன்; கலையிலே வல்லவன் எனப் பெயர் பெற்றோன் ஆளுகின்ற காலமது!

குறையில்லாச் சித்திரங்கள் குவிக்கின்ற தமிழனுக்கு ஓர் குறையுண்டு!

மலை தழுவி மேகம் மயங்கியிருத்தல் போல் வரைகின்ற நேரத்தில் – தன் தோள் தழுவியொருத்திப் பின்னின்று சுவைத்திட்டால் – அந்த இன்பம் கிடைத்திட்டால் – என எண்ணி ஏக்கத்தால் சுழலுகின்ற ஆடவனின் உருவங்கள்

ஆயிரம் வகை தீட்டிவிட்டான்!

இரு புறா ஒன்றையொன்று மரக்கிளையில்
நெருங்குதல் போல் எழுதுகோல் அசைகின்ற
தருணத்தில்... அவன் இதழ் நெருங்கும் இதழொன்று
இல்லையே எனக் குறைப்பட்டான்!

காட்டாற்றின் வேகத்தை எழுதிவிட்டான்
வண்ணத்தால்:... எண்ணத்தை உலுக்குகின்ற
வேகம் காட்டும் காதலாற்றை வரைவதென்றால்
கவிஞருண்டோ?

விலை போட்டுக் கலைப் படைப்பை
வாங்குவதற்குப் பெண்ணொருத்தி வந்துவிட்டாள்
ஒரு நாள்!

திருநாள் இதுவென்று மகிழ்ந்திட்டான்! பேச்சிடையே காதல் வலை போட்டாள்! இலை போட்டு அழைத்த பின்னர் உணவருந்தப் பசிகாரன் தடையா சொல்வான்? துணைவர்களாகி விடுவோமென்று துணிந்திட்டார். சித்திரத்தில் சிந்தை தந்தேன் எனச் சொன்னாள் பெண்ணழகு! இத்தினத்தில் இன்பம் பெற்றேன் எனச் சொன்னான், அன்னவனும்!

ஓவியம் வாங்க வந்தேன்; உயிர் ஓவியம் பெற்று விட்டேன் . . . ஒன்பது நாள் கழித்துத் திரும்ப வருகின்றேன்; ஒப்புதலைப் பெற்றோரிடம் பெற்று விட்டால் உந்தன் தோள் தழுவிக் கிடப்பதற்கு அட்டியில்லை எனச் சொன்னாள். அருவியோரம் மகிழ்ந்திருப்போம் வா என்றான்; சம்மதித்தாள்.

வெண் மேகக் குழு சரிவது போல் வீழ்கின்ற அருவி, கொக்கு நிறக் கூந்தல்தனை உவமை காட்டும் பேரழகைச் சுவைத்தவாறு சுவைத்திருந்தார்.

"அத்தான்" என்றாள்; "ஏன்" என்றான்! "அடியாள் அருவிதனில் குளித்துவிட்டு ஆடையெல்லாம் நனைந்திருக்க அமர்ந்திருக்கும் விதத்தினிலே படமொன்று எழுதுவீரா?" எனக் கேட்டாள். அப்படமே திருமணப் பரிசு என்றான் – முத்தமிட்ட இதழ் திறந்து! போய்விட்டாள்; அந்தப் பொழுதெல்லாம் இன்பம் நல்கிவிட்டு!...

இன்பவல்லி அருவியிலே நீராடி அமர்ந்திருக்கும் காட்சிதனைத் தீட்டுதற்குக் கோல் எடுத்தான். பால் வகுத்துக் குறள் வகுத்த வள்ளுவனும் காணாத பேரழகைப் பெண் வடிவில் கண்டுவிட்டோம் எனக் களித்து எழுதலுற்றான்!

விழியழகை – விதவிதக் கதை பேசும் விதமாகச் சித்தரித்தான்! இதழ்ப் பொலிவைத் தீட்டும்போது தூரிகைக்கு முத்தம் தந்தான்! நீராடி அமர்ந்திருக்கும் படமன்றோ; மேலாடை மட்டும்தான் உண்டு; அதனாலே இளமைதனைக் காட்டுகின்ற உடலெடுப்பை அழகாக வரைந்துவிட்டு மயங்கிவிட்டான்! போட்டியிட்டுத் தோற்றதாலே தலைகுனிந்த விதமாகப் பொற்குடமொன்றை அவள் கையினிலே தந்தான்! பரிமளத்தூள் பெட்டியொன்று வலக் கையில்! . . . எழுதி முடித்து விட்டுத் தொழுது நின்றிருந்தான்; காதலி வரும் திக்கு நோக்கி!

ஒன்பது நாள் ஆனதாலே வந்துவிட்டாள். ஓடோடி அணைத்துக்கொண்டான். 'நீராடி அமர்ந்திருக்கும் சித்திரம் தயார்' என்றான். பெற்றோரும் சம்மதித்தார் எனச் சொன்னாள். பேரின்பம் இதுவன்றோ எனச் சொல்லிப் பூரித்தார். ஓவியத்தைக் காண்பதற்கு ஓய்வு பெற்றுக் கலைக்கூடத்துள் நுழைந்தார். தன்னைப் போல் அணுவளவும் வேறுபாடின்றிப் பொன்னைப் போல் இருக்கின்ற மேனியையும் எழுதிக் காட்டிப் பொற்குடத்தைப் போட்டிக்கு நிறுத்தி வைத்துத் தீட்டியுள்ள சித்திரத்தை வியந்தாள்! மகிழ்ந்தாள்! அவ்விடமே இருவருமே ஒருவராய்த் தழுவிக் கொண்டார்.

திடுமெனக் குறும்புச் சிரிப்பொன்றை உதிர்த்து விட்டுத், "தோற்றுவிட்டீர் அத்தான், இந்தத் தோகையிடம்!" என்றாள், திகைத்துவிட்டான்!

"நீராடி எழுந்துவந்து நனைந்துபோன கூந்தலுடன் பாறையினில் அமர்ந்திருக்கும் பெண்ணுக்கு நெற்றியிலே குங்குமத் திலகம் ஏதத்தான்?" எனக் கேட்டு நகைத்து விட்டாள்!

தழுவி நின்ற பிடியை விட்டு ஓவியனும் நழுவிவிட்டான்... பின் தொடர்ந்தாள்... காணவில்லை... நெடுந்தொலைவு தேடிச் சென்றாள்... பின்னர் கலைக் கூடம் திரும்பி வந்தாள்... கலைக்கூடம் இருந்த இடம் தீக்காடாய் இருத்தல் கண்டாள்!... ஓவியனைக் காணாமல் குரலெடுத்துக் கூவி அழுதாள்; ஓடிச்சென்று அருவியோரம் நின்று பார்த்தாள்...

அருவியிலே மனித உருவொன்று மிதத்தல் போல் தெரிந்ததாலே குதித்துவிட்டாள் . . . அவனே தான் பிணமாக மாறிவிட்டான்! மணநாளைக் குறித்து வந்த மங்கை நல்லாள் அவனோடு சேர்ந்துகொண்டாள்! குளிக்கையிலே கோதையின் குங்குமத்தை அழிக்காதோ அருவி நீர் எனக் கேட்டாள் அப்போது! இருவர் உயிர் அழித்து விடும் அருவி நீர் எனத் தெரிந்திருந்தால் கேட்டிருக்க மாட்டாள்!

●



வேட்டையாடி வீடுவந்த வேழன், விழி நீலம் காட்டுகின்ற பாவை, விரைந்து வந்து தழுவாததாலே – வெகுண்டெழுந்து அடுக்களைக்குச் சென்றான்.

"புளி உடைத்துக் கொண்டிருந்ததாலே தழுவவில்லை, புகையாதீர் அத்தான்!" எனப் புன்னகையால் கொன்று புதுமுத்தம் தந்தாள்.

தனிச் சுவையால் தணல் அணைந்து போகக் கனிச்சுவையைக் கண்டவாறு பேசலானான் வேழன்.

"புளி உடைப்பதென்ன; உளியெடுத்து மலை பிளக்கும் திறமோ; அன்றி புதரிடையே – குகை நடுவே உயிர் மறந்து புலி கொல்லும் மறமோ?" எனக் கேட்ட ஆளனிடம் பாவை; "புலி கொல்லல் மறமென்று யார் சொன்னார் அத்தான்! கிலி கொண்டு, உம்போல ஆண்கள் எல்லாம் வில் கொண்டு, வேல் கொண்டு அடக்குகின்ற புலியொன்றை என் போலப் பெண்ணொருத்தி முறத்தினாலே துரத்தினாள்; அறிவீரோ?" என்றாள்.

"புறமென்றும் அகமென்றும் புகழ் மண்டும் இலக்கியங்கள் தமிழனுக்குச் சொந்தம். முறமொன்று படையாகுமென்று முரட்டுப் புலியொன்றைத் தமிழச்சி விரட்டியதும் உண்டு, அது அந்நாள் பெண்ணே! இந்நாள் உன்னால் ஆகாது கண்ணே!"

"ஏறு தழுவுகின்ற என் அத்தான்! சோறு வடிப்பதற்கே பெண்கள் என்ற இழி மொழியை அகற்றுகின்றேன்! ஈட்டியின்றி, தீட்டிய வாளின்றி ஓட்டுகின்றேன் பழ முறத்தால் ஒரு புலியை!"

"புலியென்றால் புளியம்பழம் அல்ல பாவாய்!"

"தெரியும் இந்தப் பழத்தைவிட பலவீனமான உயிர்!"

"நெருப்புமிழும் கண்கள்! நெஞ்சு கலக்கும் பாய்ச்சல்!"

"பயமுறுத்த வேண்டாம் – பாவை, தமிழச்சி!"

"பார்ப்போம் அதையும் ஒரு நாள் – இப்போது சேர்ப்போம் ஈரிதழ் ஓரிதழாய்" என்றான்.

"கட்டி வெல்லம் தின்பதற்கு அட்டியுண்டோ? சட்டியிலே புளிக் கொழம்பு கொதித்த பின்னர் இறக்கி விட்டு – ஆகட்டும்!" என்றாள்.

"புளிக் குழம்போ? புலிக் குளம்போ?" என்றான்.

"புலிக்குக் குளம்புண்டோ; நீங்கள் புலி வேட்டை ஆடியதன் அழகு இதுதானோ?" எனச் சிரித்தாள் பாவை. வேழன் வெளி நடந்தான்...

அடுப்பினிலே கொதித்துவிட்ட புளிக் குழம்பை இறக்கிவிட்டு அத்தானின் கன்னத்தில் இதழ் பதித்து விளையாட ஆயத்தம் செய்திருந்த பாவையின் காதினிலே "அய்யகோ, புலி" என்ற அவல ஓலி!

திறங்காட்ட, போர்க் குணங் காட்ட நேரம் வந்ததென்று முறமெடுத்தாள்! தனக்கொரு இலக்கியம் தமிழகம் படைக்கட்டுமென்று இடைக்கச்சு மேற்கச்சு இறுக்கிக் கட்டி ஓலி வந்த திக்கு நோக்கி ஓடினாள் பாவை!

போர்க்களத்து வீரநடை போடுகின்ற பாவை மீது, வைக்கோற்போர் மேலே படுத்துக் கொண்டு புலியொன்று பாய்ச்சல் காட்ட, "ஆரிங்கே, என் அத்தானெங்கே?" எனக் கேட்டவாறு முறமோங்கி எதிர் நின்றாள் புலியின் முன்னே!

பாவை மீது பாய்வதற்கு எழுந்த புலி பதுங்கிக் கொண்டு பயமுறுத்தும் வாய் திறந்து உறுமியது! எங்கிருந்தோ ஒரு குரல் புலம்பிற்று :

"என்னருமைப் பெண்பாவாய்! என்னைப் புலி விழுங்கியது!"

"என்னத்தான் சொல்லுகின்றீர்? விழுங்கியதா? ஆயின் எங்கிருந்து அழுகின்றீர்?" – முறமோங்கி நிற்கின்ற பெண்ணழகு கண் கலங்க அலறி விட்டாள்.

"புலியின் வயிற்றுக்குள் இருக்கின்றேன்; அரை உயிராய்; கால் உயிராய்; அழிவோடு இணைகின்றேன். அய்யகோ, எனைத் தின்ற புலியாலே நடப்பதற்கும் இயலவில்லை; எனக்கோ இனி நாக்கு அழைப்பதற்கும் வலுவில்லை; அதனாலே சாகின்றேன்; இறுதி முத்தம்!"

"பாழும் புலியே! பாவை எந்தன் உயிர் போல் இருந்திட்ட பாசமிகு அத்தானைக் கொன்று விட்டாய்! இரை தின்ற கருநாகம் போல அசையாமல் கிடக்கின்றாய் . . . உன்னை பழி வாங்கிவிட்டு யானும் எந்தன் பதியோடு செல்கின்றேன். வைக்கோற் போரோடு சேர்த்து உனைத் தீ வைக்கின்றேன்!" என வெகுண்டு வெந்தழல் பற்றி எரிகின்ற பந்தமொன்று கொண்டு வந்தாள். வைக்கோற்போர் மீது நெருப்பிட்டாள். அக்கணமே, போர் மேலே அவள் கணவன் வேழன் குதித்தோடி வந்திட்டான். அவன் கையில் புலித்தோலும் பார்த்திட்ட பாவை தலை குனிந்திட்டாள்.

"பழ முறத்தால் நீ அடிக்க வந்த புலி பார்த்தாயோ?" எனப் புலித் தோலை விரித்தான்.

"உமது கேலி புரிந்துதானே தீயின் துணை நாடினேன் என்றாள் பாவை."

இருவருமே சிரித்த பின்னர் . . . சிங்கார வனம் போகத் திட்டமிட்டு நடக்கலானார். சிந்தையணு சிலிர்த்திடவே இரவெல்லாம் ஆங்கு கழிப்போமெனப் புறப்பட்டார். புறப்பட்ட சமயத்தில் குறுக்கிட்டது பூனையொன்று. 'சகுனம் சரியில்லை'யெனப் பயந்து நின்றாள் பாவை.

"புலியடிக்க முறமெடுத்த தமிழச்சீ! . . . பூனை எதிர்ப்பட்டதென்று நெஞ்சு நடுங்குகின்றாய் . . . வீரத் திருவிளக்கே! கலங்காதே; வா" என்றான்.

"வீரத்தை வெல்வதன்றோ சாத்திரம்" என்றாள்.

"சாத்திரத்தை வெல்வதற்கும் ஒன்றுண்டு; அதன் பேர்" அறிவு என்றான்.

"அதைப் பெறுவதெவ்வாறு?" என முத்தமிட்டாள்.

"புலி துரத்த முறமெடுத்து வந்தாயே; அம்முறத்தால் மூடப் பதர்களைப் புடைத்தெறிந்து விட்டால், நமைப் பயமுறுத்தும் சாத்திர சகுனங்கள் எல்லாம் வெறும் பதரே – புலித்தோலே – என்பது புலனாகும்!" என்றான்.

●



“மருங்கு வண்டு சிறந்தார்ப்ப,
மணிப்பூ ஆடை அதுபோர்த்துக்,
கருங்கயற் கண் விழித்தொல்கி
நடந்தாய், வாழி காவேரி!”

கானல் வரிப் பாடல்தன்னைக் கரும்பனைய
சுவையேற்றித் தருபவளின் கரந்தனிலே
இருப்பதுதான் யாழோ; அன்றி இதழிடை
ஒலிப்பதுதான் யாழோ என அயர்ந்திருந்தான்
அழகுநம்பி. உயர்ந்து நிற்கும் மார்பகத்தின் குறுக்கே
சாய்த்த எழில் யாழின் இருமுனையும் இணையாய்
இல்லையென அவன் கண்கள் தீர்ப்புக் கூறித்
திருமகளாம் தேன்மொழியின் தேகக் கட்டை வியந்து
நோக்கும். அவளே யாழ்! அவள் உருவே யாழ்!
அவள் மொழியே யாழ்!

அழகுநம்பி, மதி மயக்கம் கொண்டவனாய் அவள் எதிரே அசைவற்று அமர்ந்திருந்தான். திசையெட்டும் இவள் போலத் தேன் தமிழைப் பாடுதற்கும், யாழ் நரம்பை மீட்டுதற்கும் இதுவரையில் பிறக்கவில்லை யெனப் பேசி மகிழ்ந்தது இசை அரங்கம்.

"யாழின் நரம்புகளில் எத்தனையோ உணர்ச்சிகளைக் கிளப்புகின்ற இவள் விரல்கள், இதய நரம்புகளில் பட்டுவிட்டால் இன்பக் கதைகள் கோடி கோடி கேட்கலாமே! இறைவா! நின் அருளால் இன்மொழியாள் எந்தனுக்குக் கிட்ட வேண்டும்!" எனத் துடித்தான் அழகுநம்பி.

யாழோசை நின்ற பின்னர் இந்த உலகத்தில் இருப்பதை நினைத்துக் கொண்ட மாமன்ற இசை வாணரெல்லாம் இல்லம் ஏக, வெல்லத்தை மொய்த்து விட்ட எறும்பு போல அழகுநம்பி அவள் பின்னே நடக்கலானான்.

உயிர் பெற்ற ஓவியமோ – உலகு பெற்ற பெரும் பேறோ – ஒப்பற்ற அழகினாலே உயிர் வாங்கி நடக்கின்றாளே; எனப் பெருமூச்சு விட்டுக் கொண்டான்... "பின் அழகுக்கே அந்த நிலையென்றால், முன் அழகும் முல்லைச் சிரிப்பழகும், முத்தாரம் தொடுப்பதற்குக் குவிகின்ற இதழ் அழகும் கண்டு விட்டால் என் நிலைதான் என்னாமோ?" எனக் கேட்டபடி தொடர்ந்து சென்றான்.

அரங்குதனை மயங்க வைத்தாள். அழகுதனைப் பழகு தமிழ் இசையோடு குழைத்துத் தந்தாள். யாழ் எடுத்தாள். யாழானாள்.

யாரானாலும் நிகரில்லையென நாதம் தந்தாள்! வேதம் தந்த கருத்தெல்லாம் அவள் விழி தந்த ஒளியினிலே கருகிப் போகும். அவள் நடந்தாள் வீடு நோக்கி!

தன் பின்னே தணியாத ஆசைக் குன்றம், தாகமுடன் தள்ளாடி வருவதையறியாத பாவையவள்!

வீட்டுக்குள் நுழைந்து விட்டாள் – கூட்டுக்குள் சென்ற புறா – யாழ் மீட்டும் எந்தன் புறா – நாட்டுக்கு இளவரசன் எனக்கின்றி எவர் கொள்வார் என நினைத்து வாயிலிலே நின்றிருந்தான் அறிவிழந்த அழகுநம்பி.

அண்ணாந்து நின்றவனின் இதயத்தின் அடிபீடம் ஆட்டுதற்கு விண்மீது நிலாத்தட்டு தொங்கியது – அதன் நடுவே ஓர் உருவம் – அதுதான் அவள் உருவம். இளைப்பாற நிலா முற்றம் வந்தவளின் முழுத் தோற்றம் கண்டுவிட்ட முடிவேந்தன் மைந்தனுக்கு முப்பாலின் இறுதிப்பால் தலைக்கேறி விட்டதாலே தட்டி விட்டான் வீட்டுக் கதவு தன்னை! ஓடி வந்து ஒரு தோழி திறக்கலானாள் – "இளவரசன் வருகைதனை எந்தன் எழிலரசி அறியட்டும்" எனச் சொன்னான்.

அவள் ஓடி அழகியிடம், "தேன் மொழியே! தேசத்து இளவரசன் தெருக் கதவைத் தட்டிவிட்டுத் தேகமெல்லாம் வியர்வைக் குளமாக நிற்கின்றான். தீரங் காட்டும் தோள்களிலே நாணம் தொங்குவதை – வீரம் பாடும் மீசைகளில் வெட்கம் ஆடுவதை

விழியினால் உணர்ந்தேன் தோழி; விடை கொடுத்து அனுப்பவா – அழைக்கவா?" எனக் கேட்டாள்.

"அழைத்து வா" எனச் சொல்லி அவள் அலங்கார மாடம் புகுந்தாள். அவன் வந்தான், அவளும் வந்தாள் கையில் யாழோடு!...

"தேன்மொழி" எனச் சொன்னான்; "வணக்க"மென உரைத்துவிட்டு வாய்திறக்க வழியின்றி யாழ் மீட்டிப் பாடலானாள்.

"யாழ் கேட்க வரவில்லை கண்ணே" என்றான்.

"பின் யாது கேட்க?" என்றாள்.

"உனைக் கேட்க!"

"எனைக் கேட்கவா?"

"ஆம் அழகே; அவனிதனிலே உனையன்றி வேறோர் நினைவறியேன். நெஞ்சினிலே இக்கணமே குடியேறு" என்றான்.

"இளவரசே! கணிகைதானே எனக் கருதிக் கணக்கைத் தவறாகப் போட்டுவிட்டீர்; என் கொழுநன் ஒருவனுண்டு என்பதையும் மறந்தீர். கற்புக்கு மதிப்பு தரும் தமிழகத்தை அழிக்காதீர்; போய் வாரும்!" எனச் சினந்தாள்.

"உனை மணந்த ஒருவனுண்டு எனும் சேதி இன்றுதான் கேட்கின்றேன் பாவாய்; அவன் எவனோ

எனக்குக் காட்டிவிடு; கால் வேறு கை வேறாய் ஆக்கிவிட்டுக் கட்டிலறையை நமக்காக்கிக் கொள்வோம்" என்றான்.

"செங்கோல் வேந்தர் குடிப் பிறந்த கொடுங்கோல் கொழுந்தே, இழக்கத் துணியாத என் பொருள்கள் – ஆளன், யாழ், அருங்கற்பு – இம்மூன்றுமென நீ அறிக!" எனச் சொல்லி எழுந்து நின்றாள்.

எண்ணெய் மீது பாய்கின்ற தீ போல – எரிமலையின் பெருமூச்சில் வழிகின்ற குழம்பு போல – வேகம் காட்டி அவள் மீது பாயலுற்றான்; 'அய்யோ' என அவள் ஓடி அடுத்த அறைதனில் உறங்குகின்ற கணவன் மீது விழுந்தழுதாள். கண் விழித்த அவன் ஆளன்; எதிரே இளவரசன் நிற்கின்ற நிலை கண்டு கொதித்துப் போனான்.

"கணிகைக்குக் கற்பா? காசினியோர் சிரிப்பார்கள்! கணவனென இருக்கின்ற மனிதா!... கட்டி வெல்லம் நான் சுவைத்திடத் தருவாய்!... இல்லை, என் கத்திக்கு இரையாக வேண்டும்..." என முழங்கி நின்றான்.

நிற்பதற்கு வழியில்லாப் பிறவி; தேன்மொழியின் ஆளன்; காலற்ற நொண்டி – அதைக் கண்டுவிட்ட இளவரசன், துணிவு மிகக் கொண்டு தொட்டிழுத்தான் தோகைதனை! கண் எதிரே நடக்கின்ற கொடுமை காண்பதற்குச் சகியாத நொண்டி, ஆங்குள்ள மண்தொட்டி தூக்கி, இளவரசன் தலைமீது வீச அதுகண்ட அநியாயக்காரன், வாள் நீட்டி அவன் மீது பாய்ந்தான். அதைத் தடுக்கத்

தேன்மொழியாள் எண்ணி, யாழ் எடுத்து வாள் மீது வீச, வாள் ஒடிந்து யாழ் முறிந்துபோக, மணமொடிந்து வீழ்ந்துவிட்டாள் கீழே!

“யாழ் போன பின்னர் எது போனால் என்ன? வாழ்வோமடி வாடி!” என வாரியணைத்தான் நம்பி.

“யாழ் போனால் பிறிதொன்று வாங்கிக் கொள்வேன்; எந்தன் கற்பும், ஆளனும் போய் விட்டால் அவை வாங்க அங்காடி கிடையாது அறிவாய்!” என மொழிந்து ஒடிந்த வாள் கைபிடித்து “உயிர் பிழைத்து ஓடு” என்றாள்.

அவள் வாளெடுத்தது கண்டு, அதை எதிர்க்க – முறிந்த யாழ் எடுத்து நின்றான் இளவல்.

“என் யாழை, உன் வாளால் வெட்ட மாட்டேன்; நீயும் எம்மை உயிரோடு விடமாட்டாய்! காக்க வேண்டிய மூன்றில் ஒன்றிழந்தேன் – கற்பிழக்க, கணவனை உனக்கு அடிமையாக்க நான் பிறந்தேனில்லை; இதோ பார்” என்றாள், பாய்ந்தாள் கணவன்மீது!

“என்னருமை அத்தான்! உம்மை உயிரோடு சித்ரவதைக் கூடத்துக்கு அனுப்ப மாட்டேன்; இருவருமே சேர்ந்து செல்வோம் இறப்புலகு” என்றாள். “சரி” யென்றான் கொழுநன்.

உடைந்த வாளைக் கணவன் நெஞ்சுதனில் நுழைத்தாள் – அவ்வாளைத் தன் இதயத்தில்

ஏந்தினாள் – இருவர் உடல் உடைந்த யாழ் மீது சாய்ந்தது!

கற்பு – ஆளன் – யாழ் – மூன்றையும் பாதகன் பறிக்க முடியவில்லை. அவள் உறுதி வென்றதெனக் கூறி வெட்கினான் வேந்தன் மகன்! விழி அருவியாக வெளியேறினான் வீட்டை விட்டு! . . . அவன் சென்ற திக்கெல்லாம் யாழோசை அவனைச் சூழ்ந்து கொன்றது.

●



சோலை, சோலையிலே முல்லை. முல்லையிலே வண்டு. தென்றல் முல்லையை அசைக்க... வெட்கத்தால் ஓடுகிறது என்றெண்ணிய வண்டு... ரீங்காரம் எழுப்பி நெருங்க... அப்போது ஒரு மல்லிகை சிரித்து, மணம் சிதற... அழைக்கிறது என்று தவறாக எண்ணிய வண்டு அங்கே பறக்க... இந்த இன்பமான காட்சி முடிவதற்குள் ஒரு ரோஜா மலர் ஓடிவருவது போல அவள் வந்தாள்.

வந்தவள் சோலையைச் சுற்றிப் பார்த்து . . . ஒரு பெருமூச்சு விட்டாள். "இயற்கை, கவிஞர்களைப் படைக்கும் இயற்கை, காவியங்களை உண்டாக்கும் இயற்கை!"

அவள் இதை உரக்கச் சொன்னாள். "என்னை ஒரு கவியாக்கிய இயற்கையே! நன்றியின் காணிக்கையாக ஒரு கவிதை! இதை ஏற்றுக்கொள்."

"மாமரத்தில் தாவுகின்ற மல்லிகையே -
பாமரர்கள் கூறுகின்ற 'சாதி' உனக்கு இல்லையே!"

இதைப் பாடிவிட்டு அந்தக் குயிலாள் குதித்தோடினாள். உலகத்தைப் பற்றியே கவலைப்படாத ஒரு அலட்சியம்... இளமையின் மிடுக்கோடு சேர்ந்துகொண்டது. பிறகு அவள் மான்குட்டிதானே! என்னென்னவோ ஆடிப் பாடினாள். ஆடிக்கொண்டே ஓடினாள். "கலைவாணன்" என்று அகில உலகப் பட்டமளிப்பு விழாவிலே பெயர் சூட்டப்பட்ட ஒரு சிற்பி செய்த சிலை உயிரெடுத்து உலவுவது போல் படர்ந்து கிடந்த கொடிகளைத் தடவிப் பார்த்தாள். கலாபமொன்று களிநடம் புரிந்தது - அதனோடு போட்டிப் போட்டுச் சாயல் காட்டினாள். அந்தச் சோலையின் செடிகளுக்கும், கொடிகளுக்கும் பேச வாயிருந்தால், 'அட பைத்தியமே' என்ற பரிகாச வார்த்தையால் அவள் காது செவிடுபட்டு விடும்.

ஆட்ட பாட்டம் முடிந்து... அவள் வரவுக்காகக் காத்திருந்த ஊஞ்சலிற் பாய்ந்தாள்; ஊஞ்சல் ஆடிற்று!

மாமரத்தின் கிளை வளைந்து கொடுத்தது. அவ்வளவு வேகம்!

"படைவீரர் எதிரிகள்மேல் பாய்வதுபோல் ஆடு!
உடைவாளை வீசியே சாடுவதுபோல் ஆடு!
ஊஞ்சலே நீ ஆடு!"

ஊஞ்சலுக்கும் உடனே ஓர் கவிதை கட்டினாள் அவள்! ஆம்; கட்டழகி! பாடிக்கொண்டிருந்த அவள் பவழவாய் திடீரென மூடிக்கொண்டது. குளிர்ச்சியைக் கொட்டிக் கொண்டிருந்த அவள் கண்கள் கனற்கட்டிகளாயின. இதழ்கள் அவளை அறியாமலே அவள் பற்களால் கடிபட்டன. கன்னங்களில் ஈட்டி பாய்ந்து இரத்தம் வழிவது போன்ற சிவப்பு முகத்தைத் திருப்பிக்கொண்டு மீண்டும் ஆடினாள். அவள் கண்கள் ஏதோ ஒரு குறிப்பான இடத்திற்கே கணைகளைப்போல பாய்ந்தன; பலமான இரும்புக் கேடயத்தில் மோதிக் கூர்மழுங்கும் அம்புகள் போலவே மீண்டும் அவள் விழிகள் சாய்ந்தன. ஆனால் அவளால் அந்த இடத்தைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. "கேவலம்... ஒரு... சிற்பி... எவ்வளவு ஆணவம்?" – அவள் வாய் முணுமுணுத்தது. சோலையின் ஓரத்தில்தான் வீடு. அந்த வீடு – பழைய வீடு! சில இடங்களில் சுவர்கள் சரிந்திருந்தன. வீட்டின் மேல் தளத்திலிருந்த அந்தப் பலகணிதான் அவள் ஆத்திரத்தை அதிகப்படுத்திற்று. கறுப்புடை போர்த்துக் கொண்டிருந்த ஒரு மனிதனின் கண்கள் பலகணியின் வழியாக அவளையே பார்த்துக் கொண்டிருந்தன.

"தத்தளிக்கிற மானைக் கண்டு... சில சமயங்களில் வேடன் கூடக் குறி மாற்றிவிடுவான். செயலற்ற எதிரியைக் கண்டு சில சமயங்களில்... படை வீரன் கூட ஒதுங்கி விடுவான். இந்தப் பாவி... வைத்த கண் எடுக்காமல் என்னைத் துரத்துகிறானே! இயற்கை இன்பம் அனுபவிக்க ஒரே ஒரு இடம் எனக்கிருந்தது. இதற்கும் கேடா? உம்... இவனை விடக்கூடாது... நான் யார்? இவன் யார்? கேவலம் – ஒரு சிற்பி! எவ்வளவு ஆணவம்?... இதோ அகம்பாவத்திற்கு அழிவு தேடித் தருகிறேன்!"

அவள் கொதித்தாள். ஒரு சாதாரண சிற்பியின் பார்வையால் – பலாத்காரக் காமநோக்கால் – தன் கற்பு அழிந்துவிடுமென்று கருதினாள். மீண்டும் அந்தப் பலகணியைப் பார்த்தாள். அந்தக் கண்கள் அவளை விட்டுப் பிரியவில்லை. "பொன்னழகன்... பெயரைப்பார். சிற்பி! அந்தக் காமக் கண்கள் குருடாகட்டும். சிற்பி, கபோதியாகட்டும்..." அவள் தொடர்ந்து பேசவில்லை! திடீரென ஓடினாள். ஒரு நல்ல கூர்மையான கருங்கல்! அதை வெகு வேகமாக வீசினாள்! அவள் கல்லை வீசியதுதான் தாமதம்... "ஆ... என் கலை ஒழிந்தது!" என்று வீறிட்டபடி ஒரு மனிதன் ஓடினான். பலகணியில் படார் என்ற ஒலியோடு கல் மோதிற்று.

நரம்புகள் எல்லாம் நடுங்க... அவள் அப்படியே நின்று விட்டாள். ஓடிக் கொண்டிருந்த மனிதன் நின்று, "இளவரசி!... என்ன காரியம் செய்தீர்கள்?" என்று பேச்சை ஆரம்பித்தான். அவன் வார்த்தைகளை ஆத்திரம் தடுத்து அடைத்துக்

கொண்டது. மீண்டும் அவன் ஓடினான். அவளும் அவன் பின்னால் ஓடினாள்.

ஓடிக்கொண்டேயிருந்த மனிதன் வீட்டுக்குள் நுழைந்தான். அவளும் வீட்டை ஒரு முறை ஏறெடுத்துப் பார்த்தாள்.

'சிற்பியின் வீடு' – அவள் வேகத்திற்கு இந்த முணுமுணுப்பு முட்டுக்கட்டை போட்டாலும்... உடனே முறிந்துபோக வேண்டிய அளவுக்கு அவள் நெஞ்சில் ஓர் ஆவல் மூண்டுகொண்டேயிருந்தது. வீட்டுக்குள் ஓடினாள். மேல் தளத்தில் தேம்பும் ஒலி! அந்த சோக ஒலிக்கு... நடைபோட்டு நகர்ந்து கொண்டிருந்தாள் அவள். "சேரன் செங்குட்டுவன்...! நான் படைத்த கலை..." விக்கி விக்கிக் கிளம்பும் அழுகையோடு இந்த வார்த்தைகள் பின்னிப் பின்னி அறுந்து போயின.

அவள் அசையாமல் நின்று கொண்டிருந்தாள். அவள் நரம்புகள் மாத்திரம், தட்டிவிட்ட வீணைத் தந்திகள் போல் அதிர்ந்தன. சேரன் செங்குட்டுவன் சிலை நொறுங்கிக் கிடந்தது. சிற்பி பொன்னழகன் குப்புறக் கிடந்தான்.

"அய்யோ... என் இருதயத்தைப் பிளந்து எறிந்து விட்டாளே இளவரசி! சந்திரனைக் கூறு போட்டது போல் சேரனைச் சிதைத்து விட்டாளே! செங்குட்டுவா... உன் கண்ணில் ஒளியேற்ற... எவ்வளவு கஷ்டப்பட்டேன். அந்தக் கண்கள் கதிரவனை உருட்டிவிட்டது போல் உருண்டு

கிடக்கின்றனவே! உனக்கு அரும்பு மீசை அமைக்க ஒரு நாள் முழுவதும் செலவிட்டேனே! அவை ஆச்சரியக் குறிகளைத் துண்டாடியது போல் தூளாகிக் கிடக்கின்றனவே! உன் அதரங்களில் துடிப்பை நிறுத்தி வைத்து... தொகை தொகையாக பகைவர்கள் வந்தாலும் துச்சமெனக் கருதும் ஏளனத்தையும் அமைத்து வைத்து... அதனால் பெருமையடைந்தேனே... அந்தப் பெருமை இதோ அழிந்து கிடக்கிறதே!"

பொன்னழகன் புலம்பினான். அவன் படைத்த நினைவுச் சின்னத்தின் சாவு கண்டு ஒப்பாரி வைத்தான்.

அவள் கண்கள் உடைப்பெடுத்த ஏரிகளாயின. பூகம்ப அதிர்ச்சியையும் தோற்கடிக்கும் ஒரு தேம்பல் அவளை உலுக்கிற்று. மரத்துப்போன சிற்பியின் மனத்திலும் உணர்ச்சியுண்டாக்கி அதனைத் துள்ளியெழச் செய்தது அந்தச் சோக விக்கல். பொன்னழகன் திரும்பிப் பார்த்தான். அவள் நின்று கொண்டிருந்தாள்; செதுக்காத சிலைபோல்! பொன்னழகனின் கண்களில் புனல் தீர்ந்துவிட்டது. கனல் கிளம்பிற்று.

"இளவரசி!... பாண்டிய நாட்டில் சேரர் ஆதிக்கத்திற்கு இடமில்லை. இதுதானே உங்கள் சட்டம்? சேரநாட்டு வீரவேந்தன் செங்குட்டுவனின் சிலையைச் செய்யக் கூடவா சிற்பிக்கு உரிமையில்லை? வேண்டுமானால் இந்தச் சிலையைச் செய்த குற்றத்திற்காக என்னைச் சிரச்சேதம் செய்திருக்கலாம். சிலையைச்

சிதைக்காமல் சேர நாட்டு மண்ணிலாவது நட்டுவைத்தால்... 'என் கலை வாழ்கிறது' என்ற பூரிப்போடு சாவைத் தழுவியிருப்பேன். தங்கள் பெண்ணுள்ளத்தில் கூடவா இந்தக் கருணை தலை நீட்டவில்லை."

இளவரசியின் கண்ணீரைத்தான் அவன் பதிலாகப் பெற முடிந்தது. அவனும் அமைதி பெற்றான். "சிலையை உடைக்க வேண்டுமென்ற எண்ண மிருந்தால் அவள் சீற்றமல்லவா அடைந்திருப்பாள்! அதற்குப் பதிலாக அழுகிறாளே!"

சிற்பியின் நெஞ்சில் இந்தச் சந்தேகம் சாந்தத்தைக் குடியேற்றியது.

கொதிக்கும் எண்ணையில், கடுகைப் போட்டால் வெடித்துச் சிதறி விடுகிறது. சிற்பியின் கொதிப்பு அடங்கிய பிறகு இளவரசி பேச ஆரம்பித்தாள்.

"சிலையை உடைக்கும் குறுகிய மனப்பான்மையும், கோணல் புத்தியும் எனக்கில்லை. இந்த ஒரு சிலையை உடைப்பதால் கோடிக்கணக்கான பாண்டிய மன்னர்களின் சிலைகள் சேர நாட்டில் உடைபடும் என்பதை நானறிகிறேன். அது மட்டுமல்ல; பாண்டிய மரபின் புகழே... சிலை உடைத்தாள் ஒரு சின்ன புத்திக்காரி – என்ற விமர்சனத்தால் வீழ்ந்து விடும் என்பதும் எனக்குத் தெரியும். அதுமட்டுமல்ல; சேரனும் நமது இனத்தவன் என்ற உண்மையும் தெரியும் கலைஞரே... நான் இந்தச் சிலையை உடைத்த காரணத்தை உலகம் அறிந்தால்... தங்களைக் 'கலைவாணர்களின் மன்னர்

மன்னன்' என்று வாயார வாழ்த்தும்!"

சிற்பியின் கண்களில் புது ஒளி! அவன் நெற்றியில் சந்தேக ரேகைகள்! அவன் இதழ்களில் ஆவல் துடிப்புகள்! இளவரசி பேச்சைத் தொடர்ந்தாள் :

"மனிதனா சிலையா – என்று நிதானிக்க முடியாத நிலையில், என்னை விடாமல் பார்ப்பது ஒரு மனிதன் தான் என்று நினைத்து . . . கோபத்தால் கல் எறிந்தேன். ஆனால் உடைந்திருப்பது சிலை! சிலைக்கு உயிர் அளித்து நிறுத்தியிருந்த தங்கள் கலைத் திறமையைப் புகழக் கவிஞர்கள் கிடைக்கமாட்டார்களே!"

"என்ன! சிலை தங்களைப் பார்த்ததா?" சிற்பியின் அதரங்களில் துடிப்பு அடங்கவில்லை.

"ஆமாம். என்னை அந்தப் பார்வை இழுத்தது. என் நெஞ்சில் நீ கிளம்பும் அளவுக்கு என்னை விடாமல் அந்தப் பார்வை துரத்தியது. அதன் பிறகுதான் கல்லை வீசினேன்!"

"காதல் பார்வை என்கிறீர்களே!... என் சேரனுக்கு வீரப் பார்வையல்லவா அம்மா?"

"இருக்கலாம்... வெகு தூரத்தில் பார்வையின் தன்மை தெரியவில்லை."

"உம், நல்ல பாடம்! அழகுள்ள பெண் – சுவையுள்ள கனி – மணமுள்ள மலர் – இவைகளுக்கு ஆபத்து இருப்பது போல் உயிருள்ள கலைக்கும் ஆபத்து

உண்டு! ஆனால் அந்த ஆபத்து இந்த வடிவிலும் வருமெனும் பாடத்தை இன்றுதான் அறிந்தேன்."

"மண மலரும், அழகியும், சுவையுள்ள கனியும் மனத்தில் மோதும் ஆசை அலைகளால் கறைபடும். தங்கள் கலைச் சின்னம் என் கல் மனம் வார்த்தெடுத்த கட்டாரியால் அல்லவா நொறுங்கி விட்டது!"

"கல் மனமா?... என் கலைத் திறமை என்று கூறினீர்களே இளவரசி!"

"மனத்தை மயக்க நினைப்பது ஒரு மனிதர் என்று நான் எண்ணியது தங்கள் கலைத் திறன்! எண்ணிய மனிதரை எதிர்க்கத் துணிந்தது என் மனம்."

"புரியவில்லை இளவரசி!"

பொன்னழகன், சிலை நொறுங்கிக் கிடப்பதைக் கூட மறந்து விட்டான். இளவரசியின் இதழசைவை எதிர் பார்த்திருந்தான். அவளோ பேச முடியாமல் நின்றாள். அவள் நெற்றியில் வியர்வைத் துளிகள்! அவள் கண்ணில் பல மின்னல்கள்! அவள் நிற்பதற்குச் சக்தியற்றுப் போனாள். சிற்பி சொல்லாமலே அங்கு கிடந்த பீடத்தில் உட்கார்ந்தாள். அவள் பார்வையை மாற்றவில்லை. அவன் மட்டும் உடைந்து கிடந்த சேரனின் கையை எடுத்து கைகளில் உருட்டிக் கொண்டிருந்தான்.

ஓர் ஆணழகன்; அவன் அரச குமாரனல்லன். அவன்

மடியிலே ஒரு பேரழகி; அவள் அரச குமாரிதான். இப்படி ஒரு சிலை! அந்தச் சிலையை அவள் பார்த்தாள் சிற்பியைத் தன் கண்களால் இழுத்து...

'இந்தச் சிலை...?' என்று அவள் கேட்டு முடிப்பதற்குள்... 'அது அம்பிகாபதியும் அமராவதியும்' என்று அவன் பதில் வழங்கினான், "அம்பிகாபதி கவிஞன்; அமராவதி அரச குமாரி! பொன்னழகன் கலைஞன், வேல்விழி இளவரசி".

அவள் இதை வாய்விட்டுப் பேச இயலவில்லை. சிற்பியின் விலாவில் மட்டும் ஒரு வேல் பாய்ந்திருந்தது போலிருந்தது! அவன் முகத்தில் ரேகைகள் மின்னல் வேகத்தில் பாய்ந்து மறைந்தன. அந்தக் கோடுகள் தந்த விளக்கத்தை அவளும் புரிந்து கொண்டாள். அவர்கள் பேச வேண்டிய கஷ்டமே இல்லாமல் போயிற்று.

செங்கதிரும் செந்தாமரை மலரும் பேசிக் கொண்டா இருக்கின்றன? "இளவரசி!" என்றான், அவளுடைய பழச்சுளை பதிலைக்கேட்டு இன்பமடைய அவளுக்கும் அவன் சொற்கள் இப்போது கற்கண்டாகி விட்டன.

எந்தப் பொன்னழகன் தன்னைப் பார்த்த குற்றத்திற்காகக் குமுறினாளோ – எந்தப் பொன்னழகனைக் கேவலம் ஒரு சிற்பி என்று முணுமுணுத்துப் பேசினாளோ – அந்தப் பொன்னழகனின் இன்மொழி கேட்க... அவள் துடிதுடித்தாள். பேசத்தான் நா எழவில்லை.

பொன்னழகன் பேச்சைத் தொடர்ந்தான்.

"தாங்கள் சோலையிலே பாடினீர்களே கவிதை!...
அதை ஒரு முறை கேட்கலாமா?"

"கவிதையா?... தாங்கள் கேட்டீர்களா?"

"ஆமாம். நாள்தோறும் கேட்கிறேன்."

"உண்மையாகவா?"

"மாமரத்தில் தாவுகின்ற மல்லிகையே –
பாமரர்கள் கூறுகின்ற சாதி உனக்கு இல்லையே!

–என்று மாமரத்தையும், மல்லிகையையும் கவிதையில் நிறுத்தி மனித வர்க்கத்தைப் பழித்தீர்களே... நினைவிருக்கிறதா?"

இளவரசியின் கன்னங்களில் சிவப்பு விரிந்தது.

சிற்பி இன்னும் பேசினான் : "நான் தங்கள் கவிதை இன்பம் பெறத் தவறுவதேயில்லை. தங்கள் கற்பனைக்கு இலக்கான மல்லிகைக் காட்டுக்குப் பின்புறத்தில் மாலை நேரங்களில் ஒளிந்திருப்பதும், தங்கள் கவிதைகளை ரசிப்பதும் என் வாடிக்கை..."

"காரணம்?" அவள் இந்த உலகத்தில் இல்லை.

"இளவரசி....." பொன்னழகன் பேச்சை இழுத்தான்.

இளவரசி குறுக்கிட்டாள். "நான் வேல்விழி!"

வெட்கத்தால் அவள் குனிந்து கொண்டாள்.

"வேல் விழி!"

"அன்பா!"

அம்பிகாபதி அமராவதி சிலை அவர்களை வாழ்த்துவது போல் தோன்றியது!

●



அயலூர் போய் வீடு வந்த இனியனிடம் "என்னத்தான் வாங்கி வந்தீர்?" எனக் கேட்டுப் பறந்து வந்தாள், ஏந்திழையாள். இல்லத்தின் புதுச்சுவையைத் தெவிட்டாமல் உண்ணுகின்ற இளங்காதற் பெட்டகங்கள், இனியன் - ஏந்திழை, இருவரும் தமிழ்க் குலத்தார் – எழிற் கோலத்தார்!

"வானவில்போல் அழகு காட்டி வளைந்திருக்கும் தோகை கொண்ட ஆண் கோழியொன்று வாங்கி வந்தேன்" எனச் சொல்லி, மடி மீது இருந்து கொண்டு மறத்தமிழன் சாயல் காட்டும் சேவல் தன்னைப் பார் என்றான். "பாகற் பழம் போன்ற கொண்டைதனைக் கண்டாயோ பெண்ணே! சூடுபட்ட நாக்கு போல் தொங்குகின்ற தாடையின் அழகுபார் கண்ணே! சேரனின் நடை காட்டும்! படை கண்டு கலங்காத வீரனின் தோற்றம் காட்டும்!" எனப் புகழ்ந்தான்

"சரியத்தான் ஒப்புகிறேன்; பெட்டை யொன்று வாங்கி வந்தாலும் முட்டையிடும் . . . இதைக் கொணர்ந்து பயன் என்ன?" ஏந்திழையின் பேச்சுக்கு முதற் பதிலாய் நகை முழக்கிப் பின்னும் கூறலானான் "துப்புரச் சிவந்த வாய்ப் பேரழகே! பசு மாடு, பெண்ணாடு, பெட்டைக் கோழி – வளர்ப்பதிலே பால், முட்டையெனப் பயன் காணும் குறிக்கோள் ஒன்று மட்டும் உண்டு!... நான் சேவல் வாங்கி வந்த நோக்கத்தை உன் செவிதனிலே போட்டால் ஒப்பிடுவாய் என் செயலை!" எனச் சொன்ன அத்தானின் தோளில் சாய்ந்து, "புரிந்து கொண்டேன் உமதுள்ளம்– பெண்ணைப் புகழ்வதற்கு மயில் தன்னை அழைத்திடுவார்; – இனிமேல் ஆணைப் புகழ்வதற்கும் சேவல் தன்னைக் காட்டிடலாம் என்பதுதான் உமது எண்ணம்!" எனச் சிரித்தாள்.

"அதிலும் தவறுகின்றாய் என் அன்பே ஆணுக்குச் சேவல் தன்னை ஒப்பிடலாம்!... மறுப்பாரில்லை! ஆனால் ஒன்று; பெண் குலத்தைப் புகழ்வதற்கும்

ஆண் மயில் தான் தேவைப்படும் – அதையும் உணர்ந்திடுவாய்!'' என்று கூறி அவள் முகம் கடுப்பதற்குள் முத்தத்தால் சிவப்பாக்கி முடித்துவிட்டான் கோபந்தன்னை!

"ஏந்திழையே! இன்று காலை நடைபெற்ற நிகழ்ச்சி யொன்றை உன்னிடத்தில் சொல்லாமல் இருப்பதற்கு முடியவில்லை! என் மாமன் செங்கண்ணன் இருக்கின்றாரே; அவருக்குத் தினந்தோறும் தேகத்தில் கொழுப்பேறி நாக்கு வழி சிந்துகின்ற காட்சிதன்னை நான் நேராக அனுபவித்தேன். சேவற் சண்டையிலே பெருவீரர் எனப் புகழ் மண்டிவிட்ட காரணத்தால் – என்னமோ தானேதான் உடல் வருந்திப் போரிட்டு வென்றது போல் அரிவாள் மீசை தன்னை முறுக்கி விட்டு, அன்றொரு நாள் இலங்கையினை ஆண்டிருந்த இராவணன் போல் எண்ணிக் கொண்டு நடக்கின்றார்; தொலையட்டும் கவலையில்லை! நான் சேவல்தன்னை வாங்கிக் கொண்டு வருகின்ற வழியினிலே மடக்கிக் கொண்டு, 'என்னப்பா இளவெட்டு! சண்டைக்குட் பழக்குதற்குக் கோழி வாங்கிப் போகின்றாயோ? எனக் கேட்டார். "இல்லை"யென்றேன்; 'என்னதான் பழகினாலும் என்னை வெல்ல ஈரேழு லோகத்திலும் ஆள் இல்லை! வளர்த்துப் பார் உன் சேவலையும்! என் கோழி மூச்சுப்பட்டால் உன் கோழி ஒரு காதம் ஓடிவிடும்' எனத் தற்பெருமை மலைமீது ஏறி நின்று சண்டைக் கோழி தரும் பெருமையாலே மண்டைக் கனம் கொண்டு விட்ட மாமன் கூவலானார். நானும் பேசலுற்றேன்;

சேவற் சண்டையிலே பெற்ற புகழ் பெருவீரம் என நினைத்து – சேரன் செங்குட்டுவன், கனகவிசயர் மீது வீசி நின்ற கனல் தெறிக்கும் வார்த்தைகளைப் பேசாதீர் மாமா! கோழி தன்னை ஆசையாய் வளர்ப்பதற்கு வாங்கி வந்தேன் – கோழையையும் இனங்கொள்ளச் செய்கின்ற உமது பேச்சால் அந்த எண்ணம் மாற்றிக் கொண்டேன். சூளுரைப்பேன்; ஏற்றுக் கொள்ளும். சூரர் நீர்தான் எனச் சூட்டிக் கொண்ட பட்டத்தை, எண்ணி இரு திங்கள் முடிவதற்குள் இழக்கச் செய்வேன். இன்று முதல் எந்தன் கோழி சண்டைக்கோழி! இதையறிவீர் – வருகின்றேன்" எனச் சொல்லி வந்துவிட்டேன் – ஊர் முழுவதும் பரவிவிட்டதடி இச்செய்தி!

"ஏனத்தான் புது வம்பு! கோழிச் சண்டையினைத் தொழிலாய்க் கொண்ட செங்கண்ணன் – அவரிடத்தில் வெல்வதென்றால் சுலபமா? வேண்டாமே வீராப்பு! தோற்றுவிட்டால் வெளியிலே கிளம்புதற்கும், வீதியிலே நடப்பதற்கும் வெட்கம் – வெட்கம்! வேண்டாம் அன்பா பிடிவாதம் – விட்டு விடுக!" என்றாள்.

"தமிழன் சூளுரைத்துப் பின் வாங்கினான் எனில் தலை குனிய நேராதோ–தங்கமே! அஞ்சாதே! நம் கோழி வீரக்கோழி என்பதற்கு ஒரு சான்று! இதன் தாய்க் கோழி, ஒரு நாள் குஞ்சுக் கூட்டமுடன் இரை தேடப் போகும்போது, கொத்த வந்த பருந்து ஒன்றை எதிர்த்துத் துரத்தியதாம். மற்றொரு நாள் வஞ்சக நரியொன்றின் வயிற்றுக்கு விருந்தாகும் நெருக்கடியில் போராடித் தப்பியதாம்! அதன் பிள்ளை இந்தச் சேவல்!"

"சரியத்தான் – சேவல் பேச்சு முடியட்டும்... பெட்டைக் கோழியின் துயர் தீர்ப்பீர்; வாரும்!" என்றாள் பஞ்சணைக்கு! பருவ ராணி தந்திட்ட பழச்சுவை யமுதங்கூட அவனுக்குச் சுவைக்கவில்லை; மலர் மெத்தை இன்பத்தைத் தரவும் இல்லை; வீணையும் நாதமும் ஆகிவிட்ட நிலையில் கூட ஏந்திழையின் செங்கண்ணைப் பார்த்தவுடன் செங்கண்ணன் நினைவாலே குழப்பமுற்றான். எப்படியும் வெற்றி பெற்றிட வேண்டுமென்ற துடிப்பாலே செயல் புகுந்தான். சேவலுக்குப் போர்ப் பயிற்சி துவங்கிற்று.

தாயின் பேரைப் பிள்ளை எடுக்குமென்ற தளராத நம்பிக்கையொரு புறமும் – செங்கண்ணன் கோழிப் போர் மேதை என்ற புகழுரைகள் மறுபுறமும் நெஞ்சத்தைத் தாக்கிடவே, நாள் நெருங்க நெருங்க நடுங்கலானாள் ஏந்திழையாள்!

போர் நாளும் வந்தது –ஊர் மக்கள் கூடி விட்டார். இருநூறு பொன் பந்தயத் தொகையாக இரு சார்பும் கட்ட வேண்டுமென நிபந்தனையும் தந்தார்கள் ஊர்ப் பெரியோர்! நானூறு பொன் கொண்ட கிழியொன்று தொங்குகின்ற மண்டபத்தில் ஊரார் அனைவருமே நிறைந்திருந்தார்.

இனியன் தன் சேவற் கோழியுடன் களம் வந்தான், "இளங்கோழி! ஆனாலும் செங்கண்ணன் கோழிபோல் பலமுள்ள கோழியாய்த் தெரியவில்லை" எனச் சொன்னார் சில கிழவர்! அதைக் கேட்டாள் ஏந்திழை! மேனியெல்லாம் வியர்வையாலே நனைந்து விட்டாள்!

இனியனின் சேவல் நிற்கின்ற இடம் நோக்கி, ராஜநடை போட்டவாறு செங்கண்ணன் கோழி வந்தவுடன் ஊர்ச் சிறுவர் கை கொட்டி வரவேற்றார். ஏந்திழைக்குப் பொறுக்கவில்லை. செங்கண்ணன் கோழி, உயரத்தில் இனியன் கோழிதன்னை மிஞ்சுவதாய் நின்றிருந்த காட்சி அவள் உள்ளத்தை உலுக்கிற்று.

போர் ஆரம்பம். ஒன்றையொன்று கொத்துதற்கும் பிறாண்டுதற்கும் காலாலே கீறுதற்கும் முயற்சித்து மோதின! சிறகுகள் காற்றில் பறந்தன! எழிற் கொண்டைகள் நிமிர்ந்தன! சுழற் காற்று போல் இரண்டு சேவலும் சுழன்று சுழன்று போர் புரிந்த வேகத்தை ஊரார் வியந்தனர்!

இனியன் கோழித் தலையினிலே ஒரு கொத்து! குருதி வெள்ளம்! ஆனாலும் அயரவில்லை. முதுகினிலே மற்றொரு கொத்து! வலி பொறுக்கவில்லை. சற்றுச் சோர்வு!

அந்தச் சோர்வு கண்ட நேரத்தில் செங்கண்ணன் கோழி 'மளமள' வென அதன் மீது பறந்து பறந்து கொத்தியது! கீறியது! இனியன் கோழி கத்தியது! ஏந்திழைக்கோ நிற்க இயலவில்லை. அதைவிட்டு ஓடிவிட்டாள்.

அவமானம் சூழப் போகிறதே என நினைத்து இனியனுமே கலங்கலுற்றான். ஏந்திழை ஓடியதைக் கண்டு மனம் நொந்தான். செங்கண்ணனின் சிரிப்பு வலுத்தது. ஊர் மக்கள் கைகொட்டி ஆர்ப்பரித்தார்.

இனியன் கோழி இப்போது வீழ்ந்துவிடும் – செத்துவிடும் எனச் சொல்லி ஒரு கிழவர் வாய் மூடுவதற்குள், செங்கண்ணன் கோழி மீது அக்கோழி ஒரு பாய்ச்சல் நடத்தியது. மறு பாய்ச்சல் – செங்கண்ணன் கோழிக்கு வயிற்றினிலே ஒரு காயம்! அடுத்து ஒரு மோதல் – பாய்ச்சல்! . . . இனியனுக்குப் பெரு மகிழ்ச்சி!

திடுமெனச் செங்கண்ணன் கோழி விலகிச் சென்று, இனியன் கோழி மேல் பாய்வது போல் போக்குக் காட்டி களம் விட்டு ஓடிற்று! தோல்வியால் முகம் தொங்க விட்டான் செங்கண்ணன்.


அதே ஊர் மக்கள் இனியனுக்கு மாலையிட்டார். மாலைதன்னைக் கோழிக்கு அணிவித்து நானூறு பொன்னோடு வீடு வந்தான். குப்புற வீழ்ந்திருந்த ஏந்திழைக்கு வெற்றிச் சேதி கிடைத்திடவே – அத்தானை எதிர் கொண்டு தழுவிக் கொண்டாள். விடவே மறுத்தாள். முத்தமழை – காதல் பெருவெள்ளம் உடைப்பெடுத்து ஓடிற்று; இன்பப் பிரவாகம்.

கோழிக்குக் களைப்பாற வேண்டுவன செய்துவிட்டு, "நானூறு பொன்னுக்கும் கோழிக்கே ஒரு கூண்டு வாங்கிடுவீர்! . . . இரும்புக் கம்பியுள்ள கூண்டு இனி நம் கோழிக்குக் கூடாது; வெள்ளிக் கம்பியுள்ள கூண்டொன்றே தேவை" என்றாள். "சரி" என்று கிளம்பிவிட்டான் கூண்டு வாங்க!

மறுநாள் காலையிலே வெள்ளிக் கூண்டுடனே வேல் விழியாம் ஏந்திழையைக் கூப்பிட்டான், "பார்த்தாயா

கூண்டழகை" எனக் காட்ட! அவளும் வந்து இருவருமே இரும்புக் கூண்டினிடம் சென்று அன்புச் சேவல் தன்னை இடம் மாற்றிக் குடியேற்றக் கூண்டைத் திறந்தார். வெள்ளிக் கூண்டினிலே வாழ்வதற்கு சேவலுக்கு விருப்பமில்லை போலும் – அதனாலே அது மாண்டு கிடந்தது இரும்புக் கூண்டினிலே!

●



அன்ப, ஒன்பதாம் மடல் தீட்டுகின்றேன். இன்பவெள்ளம் என்றென்றும் உண்டென்று கை பிடித்தீர். துன்ப மழை! சோகத் தொடர்கதை! இதற்குத்தான் பெண் பிறந்தாய் எனக் கூறிவிட்டால் எதற்கததான எழுதப் போகிறேன்! இதய வலி தீர்ப்பதற்கு எப்போது வருகின்றீர் – மருந்து முகத்தோடு – எனக் கேட்டால்; விருந்துண்ண அழைக்கும்போது வீண் மதிப்பு ஏனத்தான் காட்ட வேண்டும்!

போர் முடிந்து களம் தோய்ந்த குருதியெல்லாம் காய்ந்து பல நாளாயிற்றென்றும் – காக்கை கழுகொன்றும் அங்கு வட்டமிடுவதில்லை என்றும் கால் ஒடிந்து திரும்பியிருக்கும் வீரன் சொன்னான். "களத்தினிலே உன் காதலன் பெற்ற புகழ் பெரும் புகழ் பெண்ணே!" என்று அவனே சொன்னான். அதையும் கேட்டேன்.

கண்ணேயென்று அழைப்பொன்றும், அது தொடர்ந்து கட்டழகுக் காளையொன்றும் வீட்டுக்குள் புகுந்து என்னை வேட்டையாடும் வேளை மீண்டும் வாராதோ என இருந்த எனக்கு அச்சேதி தித்திப்புத் தான்! ஆயின் என்? "எதிரிகளை அழித்துவிட்டுத் தழும்புகளில் உந்தன் இதழ் மூலிகையால் ஒத்தடம் கொடுத்துக் கொள்வேன்!" எனக் கழன்று சென்றீர்!

"வேலெடுத்து வீசும்போது உந்தன் விழிதான் நினைவில் நிற்கும்! வாளெடுத்துச் சுழற்றும்போது உந்தன் ஒளி வீச்சு! கிளிப் பேச்சு!" – விடை பெற்றுப் போவதற்கு வாரி இறைத்தீர் பொய்மைகளை என்ற உண்மை இன்றன்றோ தெரிகிறது! இரவு நேரம் பாசறையில் எப்படித்தான் பொழுது போமோ என ஏங்கி நின்றீர்; வீங்கிய புயத்தினிலே நான் சாய்ந்து நின்றேன்! அவர் தானோ நீர் என்று ஐயம் கொல்லுகிறது என்னை! வெள்ளைத் தாழையின் இதழ் பறித்துச் செண்பகப் பூவின் செழுமை நிறை அரும்பைச் செம்பஞ்சுக் குழம்பில் தோய்த்து மடல் எழுதிய மாதவிக்கு மனமொடியும் பதிலொன்றை வாய் மூலம் – வசந்தமாலை மூலம் அனுப்பினானே கோவலன்; அவனுக்கு அண்ணன் அத்தான் நீங்கள்!

"குமிழம்பூ மூக்கும் குவளை மலர்க் கண்ணும் கொண்டும், கொவ்வைப் பழம் போன்ற வாய் மொழியால் எனை ஏமாற்றிய மாதவியின் கண்கூடுவரியை நானறிவேன்!" என்று பழித்துரைத்தான்! அதனினும் கொடுமையைத்தான் நீங்கள் காட்டும் மௌனம்! "வா" என்றால் வந்து, "போ" என்றால் போகும் நடிப்புமிகும் காண்வரிக் கோலத்தை அந்த கணிகையிடம் கண்டிருக்கிறேன் எனக் கற்புமணி மாதவியை இகழ்ந்துரைத்தான்! அவனினும் தீயவரே நீங்களென்று செப்புகின்றேன்; என் சிந்தையற்று இருக்கின்றீர், அதனாலே!

"மாலைப் பொழுதில் காதல் மயக்கத்தால் நான் வாடும்போது மயிற் சாயலும் அன்ன நடையும் காட்டாது மறைத்து, ஏவற் பெண்ணின் கோலத்தோடு என் எதிரே வரும் மாதவியின் உள்வரியாடலை உணர்வேன்" என்று உறுமி நின்ற கோவலனினும் ஒருபடி உயர்ந்தவர் ஏமாற்றுவதில் நீங்களென்றேன், நீண்ட நாள் மறந்து விட்டதால்!

"மேகலை ஆர்ப்ப – சிலம்பு கொஞ்ச – காதல் மிஞ்ச என் முன் வந்து சுருண்டு நின்று, என்னைத் தழுவாமலே போய்விடும் மாதவி கற்ற புறவரி எனக்குத் தெரியும்!" எனப் புகன்ற அந்த வணிகனினும் மேம்பட்ட வஞ்சகர் நீங்கள், வஞ்சியெனக்கு ஒரு வரியும் எழுதாத காரணத்தால்!

ஊடலுக்கு சொன்ன சொல்லை, உண்மைக் கோபச் சொல் எனக் கொண்டு – கிளர்வரிக் கோலம் புரியும் மாதவி என வருணித்தானே; அவள் மடல்

கண்டு . . . அவனை விட அநியாயக்காரர் அத்தான் தான் நீங்கள், என் அவதிக்கு மாற்றுதர விரும்பாத நிலைமையினால்! பிரிந்தபோது வருந்துகின்ற தோச்சி வரியும், பிறரிடம் காதல் பற்றி முறையிடும் காட்சி வரியும், ஆளன் வரவில்லையென்று உற்றாரிடம் ஆறுதல் பெற விழைந்து ஆற்றொணாத் துயர் காட்டும் எடுத்துக் கோள் வரியும் கற்றிருக்கும் மாதவியை அறிவேன் நன்கு – எனச் சொன்ன கோவலனுக்கும் உம்மை உவமை காட்ட முடியாது அத்தான்; ஏனெனில் அவன் மாதவியைக் கூடியவுடன் போய்விட வில்லை . . . உலக இன்பம் ஒவ்வொன்றும் பயிலுகின்ற கலைக்கூடம் – அங்கு மாதவியும் கோவலனும் மாறிமாறி ஆசிரியத் தொழில் பூண்டார்! நாடக அமைப்பில் உள்ள எட்டுவகை வரிக்கூத்தும் கற்றவள் மாதவியென்று பழித்துக்கூறும் கோவலனும் அவளழகைப் பாராட்டத் தவறவில்லை. அத்தனை நாள் ஒன்றாய் இருந்திட்டார், உம்மைப்போல் ஒரு கிழமை முடிந்தவுடன் வரும் பகையை ஓட்டுதற்கு ஓடவில்லை.

கோவலனாய் ஆகி விட்டீரோ என நான் நினைப்பதற்குள் வந்துவிடுவீர் என்றே இந்த ஒன்பதாம் மடலை இறுதியாக அனுப்புகின்றேன். கயல் எழுதி, வில் எழுதிக், கார் எழுதிக், காமன் செயல் எழுதித் தீர்ந்த முகம் திங்களோ காணீர்! என்று சிலம்புத் தமிழிலே சிற்றின்பச் சோலையிலே வார்த்தைகளைச் சிந்துவீரே; ஒரு மடல் எழுத நேரமின்றிப் போனதோ அத்தான்! போங்களத்தான்; பொல்லாத அத்தான்!

சண்பகம், பச்சிலை, கருமுகை, வெண்பூ, மல்லிகை, செங்கழுநீர்ப் பூக்கள் கொண்டு மாலை கட்டி, அதனுள் மடல் வைத்துக் காதலனுக்கு அனுப்பிய மாதவிக்காவது ஆறுதலுக்கு மழலை மணிமேகலையிருந்தாள்! எனக்கு யாரத்தான் இருக்கிறார்கள்? அதுவுந்தான் இல்லையே!

"மன்னுயிர் எல்லாம்
மகிழதுணை புணர்க்கும்

இன்னின வேனில்
இளவர சாளன்;

அந்திப் போதகத்து
அரும்பிடர்த் தோன்றிய

திங்கட் செல்வனும்
செல்வியின் அல்லன்;

புணர்ந்த மாக்கள்
பொழுது இடைப் படுப்பினும்

தணந்த மாக்கள்
தம்துணை மறப்பினும்,

நறும்பூ வாளியின்
நல்லுயிர் கோடல்

இறும்பூது அன்று
இஃது அறிந் தீமின்;"

மாதவி கோவலனுக்கு எழுதிய மடலின் கருத்தே எனக்கும் பொருந்தும்!

கூடி மகிழ்ந்த காதலர் சிறுபொழுது கூடாமல் மறந்தாலும், பிரிந்த காதலர் தம் துணைவியை மறந்தாலும், இளவேனிலும் நிலவும் மென்மலர்

அம்புகளால் உயிரைக் கொல்லும் என்பது புதிய செய்தியல்ல என்பதைத்தான் மாதவி கோவலனுக்கு மடல் வாயிலாகத் தெரியப்படுத்தினாள். நானும் அதையே நினைவுபடுத்துகிறேன்.

– அன்புக் காதலி

●



அவள் : "கிளியென்னைத் தனிவிடுத்துப் புலி
வேட்டையாடுதற்குப் போகின்ற
அத்தானே! துளிக்கூட இரக்கமில்லை
உந்தன் நெஞ்சில்?"

அவன் : "உளிபடா உயிர்ச் சிலையே! ஒளி
விளக்கே! விடுபடாதிருக்கின்ற
அம்புக்கெல்லாம் வேலை தரக் காடு
செல்வேன்; விடை கொடு – விரைவில்
வருவேன்."

அவள் :" அம்பென்றாய் அன்றொரு நாள் எந்தன்
கண்ணை – இக்கணையைத்
தூங்கவிட்டு அக்கணைக்கு வேலை தர
அடவிப் பயணம் – அடுக்குமா அத்தான்
இது?"

அவன் : "வக்கணைக்காரி! இக்கணமே இந்தா
முத்தம்; எண்ணிக்கொள் – இந்தப்
பேச்சுக்கு எந்தன் பரிசு!"

அவள் :"முத்தத்தால் முழு உடலும் கொதிப்பேறி
இதயத்தின் ஏக்கமிகு சத்தத்தால் எந்தன்
காதெல்லாம் செவிடுபடும் செயல் புரிந்து
செல்லாதே வேண்டாம்; என்னைத்
தீண்டிக் குளிரேற்றிப் பின்னர் நடுங்கும்
உடலுக்குப் போர்வையாய் உதவாமல்
போய் விடுவாய் – வேண்டாம்;
வேண்டாம்!"

அவன் :"தீங்கனியே! தீண்டுவதால் குளிர்
என்றாய்; முன்பு தீப்போல்
கொதிக்குமென்றாய் உந்தன் மேனி –
இதில் எதை நான் நம்புவது?"

அவள் :"குளிர் பொழிகின்ற நிலவினுக்கும்
வெப்பமுண்டாம் – அதுதான் குறள்
முழக்கும் மூன்றாம் பாலினுக்கும் முழு
பொருத்தம்!"

அவன் :"உன்னைக் கைப்பிடித்து ஒரு கிழமை
ஊமையாய்க் கிடந்தாய் – ஆண்டு ஒன்று

முடிவதற்குள் அனைத்துலகும் வெற்றி
கொள்ளும் கனிப் பேச்சு
கொட்டுகின்றாய்!"

அவள் : "இன்னும் என்னை ஊமையாய்ச்
செய்வதற்கு ஒரு வழி உண்டத்தான்..."

அவன் : "என்ன கண்ணே?"

அவள் : "பேச்சற்ற உலகம் ஒன்று; ஆண்டவனால்
அமைவதில்லை அவ்வுலகு; ஆண்
பெண் இருவருமே படைக்கின்ற புது
உலகு – போவோமா?"

அவன் : "விழியம்பு காட்டி, வில் புருவம்
வளைத்துக் காட்டி, இதழோரம் அமுது
காட்டி, இன்பக் கரையோரம் நடப்பதற்கு
அழைக்கும் பாவாய் – இரு புலியைக்
கொன்று வந்தால் இறைவன் தரும்
பரிசுப் பொருள் இந்த வீடெல்லாம்
குவியும்! இரு, ஒரு நாள் தனியாக –
நாளை வருவேன்!"

அவள் : "தனியாக இருப்பதில்லை; கனியாமல்
காயாக வளர்ந்து வரும் அன்பின் சின்னம்
அடி வயிற்றில் விளையாடும் – அதன்
எழிலைக் காணாமல் நான் தவிப்பேன்
– ஆயினும் எல்லையில்லா
மகிழ்ச்சியோடு பிள்ளை தரும்
தொல்லையிலே இன்பம் காண்பேன்!

நீ அருகிருந்தால் உந்தன் கிள்ளை என் வயிற்றுக்குள் ஆடுகின்ற ஆட்டந்தன்னை நாம் இருவருமே சுவைக்கலாமே!"

அவன் : "சுவைப்பதற்கு அட்டியில்லை சொர்ணமே! புலி இரண்டு கொன்று விட்டால் புவியாளும் சோழனுக்குப் பெருங் களிப்பு! எனையாளும் உந்தன் முழுத்துக்குப் புலி நகத்தால் பொற்றாலி! வரப்போகும் 'புது வாழ்வு' புலிப்பல் நகையால் பொலிவு பெறும்!"

அவள் : "போகட்டும் – பொழுது போவதற்கும் விடிவதற்கும் இடையிலே என்னோடு இருந்துவிட்டுச் சேவலோடு எழுந்திருந்து நடப்பதற்கும் மறுப்பு தானோ?"

அவன் : "மறுப்பேது; பருப்பு நெய் பாகுந்தேனுங் கலந்து தரும் உண்டிதனை வெறுப்பதற்கு ஆளும் உண்டோ? ஆயின் ஒன்று – இரவோடு சென்றால்தான் ஒளிந்திருந்து காட்டினிலே புலி பிடிக்க ஏதுவாகும்!"

அவள் : "சரியத்தான் சென்றுவா நீ – எரியடுப்பாய் எந்தன் மனந்தனை ஆக்கிவிட்டு 'எலி' பிடித்து வரப் போகின்றாய்; போ – போ – உடன் போய்விடு!"

அவன் : "மின்னலுக்கு உவமையாகும் இடையழகி! இடைதனிலே இயற்கைக் குடமேந்தி

நடக்கின்ற பாங்கு கண்டு இதயம் தந்தேன். உன் தந்தை மணம்புரியப் பொருத்தம் பார்த்தார். என் மலைத்தோளில் உன் பழக்கன்னம் பதிவதற்குப் பொருத்தமுண்டா? அதைப் பார்க்கவில்லை ஆருடத்தில்! தோஷமொன்று தொங்குவதால் 'பிள்ளைப் பேறு' வாய்ப்பதற்கு இடமே இல்லை – இதைச் சொன்ன நிமித்திகனை இழித்துரைத்துக் குடும்ப விளக்கை ஏற்றி வைத்தோம் – இந்த ஆண்டில், இறுதியிலே குலக் கொடியைப் போற்றி வளர்ப்போம்... இதற்கிடையே இன்னொரு நாள் விலகியிருப்பதற்கு விடை தருவாய்!"

அவள் : "ஒரு நாள் பிரிவதற்கு அழவில்லை; கொடும் புலியின் பிடியில் பட்டால் அரும் பொருளை இழந்து நிற்பேன்–ஆருயிரைப் பறிகொடுப்பேன் அதனால்தான் கெஞ்சுகின்றேன் – 'விஷப்பரீட்சை வேண்டாமென்று!"

அவன் : "அரசனது ஆண்டு விழா – அன்று வேடிக்கை பார்ப்பதற்கு மட்டுமல்ல; வெகுமானம் பெறுவதற்கும் போகலாம் அன்பே!"

அவள் : "ஆண்டு விழா அரசனுக்கு இப்போது – இந்நாளில்' புலி வதைத்துப் பரிசு பெறத்

துடிக்கின்றாய் – பொன்னான
பரிசொன்று நான் தர இருக்கின்றேன்;
நாலு திங்கள் பொறுத்துக் கொள்வாய்!”

அவன் :“சின்ன மலர் – வண்ண மயில்–தமிழ்
மழலை – தங்கக் கட்டி -”

அவள் :“கன்னல் நிகர் செந்தமிழைக் கரத்தில்
ஏந்தி, எண்ணமெல்லாம் இனிப்பேற்றும்
உந்தன் முன்னே இதழ் முழுதும் சிரிப்பு
விளக்கேற்றி நின்றிடுவேன் - அதைவிடப்
புலி கொன்று பெறப் போகும் பெரும்
பரிசு சிறப்பானதோ? செப்பிடுவாய்!”

அவன் :“கண்ணழகு காட்டுகின்ற என் அருமைத்
தங்கம்! கட்டழகும், நாம் பெற்ற
மொட்டழகும் இன்பம் எனினும்,
காட்டினிலே ஒளிந்திருந்து நாட்டழகைக்
கெடுக்கின்ற புலி கொல்லல்
பேரின்பமன்றோ!”

அவள் :“பல் வரிசை முத்தாரம் எனப் புகழ்வாயே;
அதைவிடப் படைவரிசை பெரிதாகி
விட்டதோ உனக்கு?”

அவன் :“முத்தாரம் வேண்டாமெனச் சொல்ல
வில்லை; உன் முத்த ஆரத்தை
வெறுக்கின்ற துறவியுமல்ல; உனை
அடையாமல் இருந்தால் நான் எடுத்தது
பிறவியுமல்ல - எதற்கும் நேரம்
வேண்டும்; நிலையை உணர வேண்டும்

- முரசொலிக்கும் நேரம்; முதுகாட்டில்
புலியொழிக்க அணிவகுப்புக்
கிளம்புகின்ற வேளை - முத்தாரம்
கண்டுவிட்டு, முரசொலிக்கு
செவிமடுப்பேன் - நாடு காக்கும் நல்ல
செயல் முடிப்பேன் - செயல் முடித்த
பின்னர் ; சிந்தைக்கு விருந்தாக முத்தாரம்
கொடுப்பேன் உனக்கு!"

அவள் : "அறிவு தெளிந்ததத்தான் எனக்கு - நாட்டு
மக்களைக் கொன்றொழிக்கும் காட்டு
விலங்கழிக்கப் போவதுதான் தமிழ் மகன்
கடமை!... அதோ முரசு ஒலிக்கிறது -
புறப்படு விரைவில்!"

அவன் : "அதை; வாயின் முத்தாரம் காட்டிச்
சொல்வாய்!"

●

(அவள் புன்னகை தவழ அவனை
வழியனுப்பி வைக்கிறாள்)



சைவரே வென்றார் – சமணர் தோற்றார் எனப் பாண்டி மண்டலத்துக் கொலுமண்டபம் தீர்ப்பளிக்க, உடன் அமைச்சர் குலச்சிறை, கண்புடை பட்டு நீண்ட கழுத்தறி நிறையில் எண்பெருங் குன்றத்து எண்ணாயிரவர்களையும் ஏற்றிக் களித்து நாயனார் ஆனார். இக்கொடுஞ்செயலுக்குப் பின்னர் பாண்டிய நாடு வாய் திறக்கப் பயந்து கிடந்தது. மிச்சமிருந்த சமணத் துறவிகள் வெளியிற் கிளம்ப அச்சங் கொண்டனர்.

சமணந் தழுவி, இல்லறமுந்தழுவி நிற்கும்
பொதுமக்கள் மனந்திறக்க வழியில்லை.
குலச்சிறையின் கொடுங்கோல், உரிமைக் குரலுக்குப்
பெருந்தடை விதித்தது. அரசு எவ்வழியோ
அவ்வழியே குடிகளும் ஆகிட வேண்டுமென ஆட்சி
ஆணை பிறப்பித்தது.

இந்நிலையில் தமிழகம் இருக்கின்ற வேளையில் ஒரு நாள் !...

படை முகத்து வீரனவன்; படைக்கலனைப்
பார்வையிலும் பால் நிலவை முகத்தினிலும்
பெற்றிருக்கும் பாவை அவள்! ஆணொருவன்
பெண்ணொருத்தி யென்றால் அங்கே காதலுக்குக்
கதவு மூடியா இருக்கும்! நலங்கிள்ளி–அந்த நல்ல
தமிழ் இளைஞனுக்குப் பெற்றோர் இட்ட பெயர்!
பேரழகியோ பீலிவளையென்னும் பெயர் பெற்றாள்!
சந்தித்தார்... சிறிது சிந்தித்தார்... முந்தித் தருவது யார்
முத்தம் எனும் விதத்தில் வளர்ந்து விட்டார், "பந்திப்
பார்ப்பனரின் வயிறு போல் பொற்கிழி வேண்டாம்
– அந்திச் செவ்வானத்து எழில் காட்டும் கன்னம்
தருவேன் அட்டியின்றி! ஆனாலும் அத்தான்,
குலக்கணிகையர் மரபினிலே வந்தாலும் மந்தி
கைமாலையாய் மாற மாட்டேன் – இஃதுறுதி"
யென்று சொல்லி 'இச்' சென்று பேச்சை
முடித்திட்டாள் சித்திரச் செந்தமிழாள் பீலிவளை!

"தேன் துளியால் என் இதழை நனைக்கின்ற திருவே!
வான்வெளியில் வட்டமிடுகின்ற நிலவே!

கணிகையர் மரபென்றாய்... கண்ணீரால் ஓவியம் கன்னத்தில் தீட்டுகின்றாய்... கலங்காதே! தனிமையில் கிடந்திட்ட எனக்கு இனிமையை வழங்குகின்ற தளிரே! தளிர் மேவும் பனியே! தமிழ் மூச்சே!

யாயும் ஞாயும் யாராகியரோ! எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்! யானும் நீயும் எவ்வழி அறிதும்! செம்புலப் பெயல்நீர் போல அன்புடை நெஞ்சங் கொண்டவரே நாம்! அஞ்சாதே! சாவாலும் நமைப் பிரிக்க ஆகாது!" எனச் சொல்லி இதழ் அமுதம் தந்தான். திரும்பப் பெருகின்ற சுயநல நோக்கோடு!

பூக்காடு தாண்டி, சமணரைச் சாக்காட்டில் தள்ளிவிட்ட கழுமரக் கும்பல் தாண்டி, வேக்காட்டு மனத்தினனாம் குலச்சிறை கோலோச்சும் தலை நகர வீதி வந்தார் கலையழகு காண்பதற்கும், காதல் சுகம் வளர்ப்பதற்கும்!

இடையிலாப் பெண்டிர் தங்கள் நடையிலோர் நாட்டியம் காட்டி, மடையெலாங் கடந்து வந்த வெள்ளம் போல் பாய்ந்து சென்றார், பச்சை விரிக்கின்ற பாண்டிய நாட்டு வீதியிலே!

குடை நிழற் பாண்டியனை வாழ்த்திக்கொண்டு ஒரு கும்பல், படைவீரர் புடைசூழப் பவனிவரும்!

சிவசக்தி சிலையுடனே தேரொன்று சீரோங்கிச் சித்திரவீதியிலே நகர்ந்தபடி யிருக்கும்!

விழா அனைத்தும் கண்டாள். அங்கு என்னை அணைத்த சுகம் இதில் எதிலுமேயில்லை யென்றாள். அவன் மகிழ்ந்து இதழ் குவித்தான்; பிறகு "மறந்து விட்டேன்; இது வீதி" யென்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். மயக்கம் தெளியாக் காதல் வெறியினிலே தடுமாறி நடக்கின்ற அவர்கள் முன்னே; மயில் தோகை பிடித்தவாறு ஒரு கிழவர் சமணத் துறவி வருகின்ற காட்சி கண்டார்.

கால்பட்டு உயிரிழக்கும் எறும்பினங்கள் – அதனாலே மயிலிறகால் கூட்டிச் சென்று அதன் பிறகு நடப்பதுதான் அன்புவழி எனக்கொண்ட சமணப்பெரியார்! பாண்டியத்தில் யார்க்குமில்லா உரத்தோடு தம் கொள்கை பரப்புதற்கு வெளிவந்த வீரர்! பல் இல்லை – ஆனாலும் சொல்லில் தளர்வில்லை. "உடலில் காணும் நடுக்கம் உள்ளத்தில் சிறிதுமில்லை! 'வாழ்க சமணம்!' என்ற வார்த்தையிலே என்ன அழுத்தம்! எண்ணாயிரத்தில் சிக்காத கிண்ணாரக் கிழவனடா" என்று வியந்துரைத்தார் வெளியூரில் இருந்து விழாக் காண வந்த பல்லோர்!

ஒரு வீரன் உறுமி வந்தான்! "ஒதிய மரமே உனக்கு உரிமையில்லை இங்கு நடக்க!" என்று கிழவர் முன் நின்றான்.

"மயில்தோகை விரித்தாற்போல் மனம்படைத்த தமிழகத்தில், நான் நடமாட உரிமையில்லை! எங்கப்பா செல்வது?" என்றார் பெருங்கிழவர்!

"எங்கோ செல்; எமக்கென்ன?" எனச் சொன்னான். பதிலை விரும்பாமல் 'படபட' வென அவர்மீது தாக்குதலைத் தொடுத்து விட்டான். 'சமணம் வாழ்க!' எனச் சாகும்வரை சொல்வே"னென்று உரத்த குரல் பெற்றார்! இரத்த வெள்ளமாயிற்று இராச பாட்டை! மயில் தோகை சிதறிற்று... பெரியவரின் மண்டையும் அவ்வாறே!

நலங்கிள்ளி – பீலிவளை நடுக்கமுடன் கிழவரின் அருகே வந்தார்.

"வாழ்க சமணம்!" என்ற உச்சரிப்பை உதடுகளில் பொருத்திக்கொண்டு உயிர்விட்டார் நலங்கிள்ளி மடிமீது அக்கிழவர்!

"உத்தமரே! உயர் தமிழா! உயிர் மதியா ஒளி விளக்கே!" என வாழ்த்த நலங்கிள்ளி நாவசைத்தான்; நாலு முரட்டு வீரர்களை எதிரே கண்டு மூடிக் கொண்டான் தன் வாயை! சிதறியுள்ள மயிலிறகில் ஒன்றை எடுத்து, நடக்கலுற்றான்; நங்கை மடவன்னமும் அவன் பின் தொடர்ந்தாள்.

தொலைவினிலே "வீழ்க சமணம்" என்னும் பெருங் கூச்சல் கிளம்பக் கேட்டான். அவளுங் கேட்டாள். "ஏனத்தான் ஒரு மாதிரி இருக்கிறீர்?" என்று! "ஒன்றுமில்லை" என்றுரைத்து, விடை கேட்டான். அவள் வலுவில் தந்த விருந்துக்குப் பின்! "சுவைத்து அருந்தவில்லை நீங்கள் விருந்தை" யென்று காயம்படா தன் கன்னத்தைக் காட்டி நின்றாள்.

"கலையாத திலகத்தைக் காண்பீர்" என்றாள். "ஒரு நிலையில் உள்ளமில்லை; நாளை காண்போம்"– என மொழிந்தெழுந்தான். முழுநிலவால் மோகத்தால் அவனைப்பற்றி, இருங்கள் எனத் தாபத்தை விழியால் சொன்னாள்.

கள்ளிப் பழத்தின் சிவப்பை வெல்லும் அவள் கனியுதட்டில் ஊறுகின்ற காதல் ரசம் பருகாமல் நின்றிருந்தான். "கண்ணா!" என்றாள். அவன் கண்ணோ அவள் மீதில்லை. கரம் பற்றிச் சாய்ந்தாள் தோள் மீது! "நாளையாகட்டும்" எனக்கூறி, கையிலுள்ள மயிலிறகை அவள் கரத்தில் தந்துவிட்டு ஓடிவிட்டான்.

மயிலிறகைப் பார்த்தபடி மன மயக்கம் கொண்ட பெண்ணாள் வீற்றிருந்தாள், அசையாமல்!

ஆயிரமாயிரம் அழகு இழைகள்! இருந்தாலும் அந்த நீலக்கண்ணின் கோலமே கோலம்! வானவில்லினும் அழகு! வைரப் பிறையினும் அழகு! அந்த அழகு மயில் கண்ணிலே அவள் கண்டாள் நலங்கிள்ளியை! அவன் இதழ் அழுந்தும் முகமாகத் தன் முகத்தையும் அதிலே கண்டாள்! ஈருயிரும் ஓருடலும் எனும் இலக்கணத்தைக் கற்பனையால் ஓவியந்தீட்டிக் களித்தாள், அந்த மயில் இறகின் நெற்றியிலே!

அவனோ இராச வீதி நிகழ்ச்சியினால் நெஞ்சதிர்ச்சி கொண்டுவிட்டான். உரிமைக்கு வழியில்லை!

பாண்டியத்தில்! உள்ளம் சொல்லுகின்ற நினைப்புக்குச் சித்திரம் தீட்டுவது பெருங்குற்றம்! என்ன கொடுமை! கூன் பாண்டியன் குருடாகிவிட்டான்! குலச்சிறையோ இன்னும் இருவிழிகள் பெற்றுவிட்டான் பாண்டி நாட்டு மண் மீது நெருப்புமிழ! முதுகிழவர் – முத்தமிழர் – அவர் முதுகெலும்பு ஒடியுமட்டும் – மூளையெல்லாம் சிதறுமட்டும் – அடிப்பதுதான் நீதியோ, அன்புக்கு மடைகோலும் அடியார் கூட்டம் இதுதானோ? மிகக் கொடுமை! மிகக் கொடுமை!! இவர்கள் வளர்ந்தால் விடியாது நாடு! என்போன்ற இளைஞர்கட்குக் காதல் அல்ல முதல் வேலை – பாண்டியத்தில் உரிமைப் போர் துவங்குவதே முதன்மைத் தொண்டு! சாலையிலே சமணர் நடத்தலுமாகாதாம்! அந்தத் தடைமீற சமண மக்கள் இன்றே குவிய வேண்டும்! அதற்குத் தலைமையேற்க ஒருவன் வேண்டும்! யார் அந்தத் துணிவுடையான்? யார் அந்தத் தலைமைச் சிங்கம்?

நலங்கிள்ளி கேள்வி கேட்டான் விண்ணோக்கி! பாண்டிநாட்டு மண்ணோக்கி!!

பீலிவளையோ பெருவிருந்து அருந்தலாம் இன்றென்று பேரழகை ஆடியிற் சரிபார்த்து, ஆவணி வீதி கடந்து, புரட்டு ஆசி கூறும் புரோகிதர் வாழ் பகுதி தாண்டி, தன் ஐப்பசிக்கு உணவு தேடிக் காத்திருந்தாள் சோலையோரம்! அவன் மாலை நேரம் போனபின்னும் வரவில்லை. மலர்ப்புதரின் அருகிருக்கும் மண்டபத்தில் காத்திருந்த கட்டழகி

கண்ணயர்ந்தாள். காளை வந்தான். காதல் உண்டார்.
பிறகே கேட்டாள், வெகுநேரம் ஆனது ஏனென்று!

மனக் குழப்பம் கண்ணே – மன்னித்துவிடுக!
நீலமிழைத்துப் பச்சை பதித்த தங்கத் தட்டாம்
மயிலிறகில் நீயும் நானும் இருப்பதுபார்!

"ஏன் அத்தான்; கொழுகொம்பில் படருவதால்
கொடியென்றார் பெண்ணை யென்பீர்! தோகையென
மங்கையரை அழைப்பதற்கு விளக்கமென்ன?"

"மயில்களிலே பெண்ணுக்குத் தோகையில்லை!
ஆண்மயிலுக்கு அழகூட்டும் அணிகலனே தோகை
தான்! மயிலுக்கென்ன; மனிதருக்கும் தோகைதான்
சிறப்பூட்டுதலால், பெண்மணியைத் தோகை
என்றார்."

"பெரும் புலமைக் கவிஞரத்தான் நீங்கள்!"

"கவிதையடி கண்ணே நீ!"

"தமிழத்தான் நீங்கள்! என்னைத் தழுவத்தான்
வேண்டும்!"

பேச்சிடையே விழித்துக்கொண்டாள்! வெறுங் கனவு.
வீரன் வரவேயில்லை. விடிந்தது பொழுது! வேகமாய்
நடந்தாள் அழுது.

செல்லும் வழியிலே சித்திர வீதி! ஆங்கோர்
இளைஞன் – அழகு சிகையின்றி – அணிமணிகள்

எதுவுமின்றி நடக்கின்றான். அவன் கையில் மட்டும் மயில் தோகை!

"வாழ்க சமணம்" எனும் முழக்கம் நாவில்! யார் இவன்? சமணர் வெளிக்கிளம்பலாகா தெனும் சட்டத்தை மீறுகின்ற வீரன்? கிழவன் போனவழி போவதற்கு வருகின்றானோ? அம்மவோ! அரண்மனைக் காவலர் காணின் – அழிவுதான் இவன் முடிவு! நடுங்கினாள் பீலிவளை அவனைக் கண்டு! நெருங்கினான் அத்துறவி! விழியெல்லாம் இருள் மேவ சுருள் கத்திச் சுழல்வது போல் சுழன்று வீழ்ந்தாள்! பொக்கை வாய்ச் சமணன் பிடித்த போர்க் கொடியைத் தொடர்ந்து ஏந்த, சக்கைகளின் செயல் அனைத்தும் எதிர்த்தொழிக்க – எழுச்சி பெற்ற பெருவீரன், நலங்கிள்ளி! அவன் கடந்துவிட்டான், தூய காதலினால் மயக்கமுற்ற காரிகையை! எறிந்துவிட்டான் இன்ப ஓவியம் தீட்டுகின்ற தூரிகையை!

ஓடி வழிமறைத்தாள், "உயிர் எடுத்துச் செல்லாதே" யென்று!

"உரிமை எடுத்துச் செல்லுதற்கு ஊராளுங்கூட்டம் – இருக்கும்வரை போராட்டம் நடக்கும்! இதில் மாறாட்டம் இல்லையென்பேன் – மனமிருந்தால் காத்திருப்பாய் – உயிரிருந்தால் ஒன்றாவோம்!"

"நலங்கிள்ளி பேசிவிட்டு முழங்கிச் சென்றான் சமணம் வாழ்க" என்று!

தெருக்கூட்டிச் செல்லுகின்ற தோகையிலே சிந்தியது ஓர் இறகு! எடுத்தாள் எழிலரசி பீலிவளை! ஒளிகாட்டும் கண்ணிரண்டும் குளங்காட்டி மங்கியதால் மயிலிறகில் அவள் உருவம் – அவன் வடிவம் இரண்டும் கண்டாள். அதுவும் ஒன்றாய்க் கண்டாள்! நலங்கிள்ளி தனியொருவன் கொடுங் கோலை எதிர்ப்பதற்கு நடைபோடும் துணிவு கண்டு கணநேரம் காதலையும் மறந்திருந்தாள்!

●

ANNA CENTENARY LIBRARY
0010049
18 JAN 2010
CHENNAI - 600 025



கலைஞர் தனக்கு 'மீசை முளைத்த வயதில்' எழுதிய இந்த அழகோவியங்கள் இந்த இலக்கிய வடிவில் இதற்கு முன் எவரும் செய்திராத சோதனை முயற்சியாகும்.

தமிழின வரலாற்றில் - பண்பாட்டில் தோய்ந்து ஆய்ந்த அறிவும், ஒரு படைப்பாளிக்கான குழந்தை போன்ற குழைந்த மனமும், மொழியைச் சிற்பமாய்ச் செதுக்கும் செய்திறனும், நினைத்துப்பார்க்க முடியாத கற்பனைகளின் நீள அகலங்களும், இப்படைப்புக்குள் காணக் காண அத்தனை சிறிய வயதில் இத்தனை பேராற்றலா என்று வியப்பூறுகிறது.

தமிழின் ஒலிச்சுவை - மொழிச்சுவை - பொருட்சுவை விழைவோரெல்லாம் இந்நூலை வாய்விட்டு வாசித்தலும் செவிவழி மாந்தலும் தமிழுக்கும் தமிழர்க்கும் நலன் பயக்கும்.

கவிப்பேரரசு வைரமுத்து